THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

30.00

நவம்பர் 14- நவம்பர் 20, 2012
November 14- November 20, 2012

பக்கங்கள் -28

வார சஞ்சிகை



## வாசகர்களுக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



## விலக்கப்படுவாரா? விலகிச்செல்வாரா?







## எல்லோருமே ஒன்றுதான்!

## மன்னராட்சியை நோக்கிய நிறைவேற்று அதிகாரம்!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னராட்சியை நோக்கிய நிறைவேற்று அதிகாரம்!




குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பது நீண்டகால ஆய்வின் அடிப்படையிலும், ஏற்கனவே மனித நிலம்பெற்ற அனுபவங்களின் அடிப்படையிலும் சாள்ஸ் டார்வின் என்ற விஞ்ஞானி முன்வைத்த ஒரு உண்மையாகும். ஆரம்பகாலத்தில் அவரின் முடிவுகளை மதவாதிகள் கர்ணகடூரமாக எதிர்த்த போதிலும் காலப்போக்கில் அதை உலகம் சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக் கொண்டது.

இதன் அடுத்தகட்டமாக சமூகத்தை விஞ்ஞானபூர்வமாக ஆய்வுசெய்த கார்ல்மாக்ஸ் மனிதகுல வரலாற்றின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளின் முடிவுகளை முன்வைத்தார்.

ஆதிமனிதர்கள் குழுக்களாக வாழ்ந்தனர். வேட்டையாடியும் காய்கனிகள், கிழங்குகளை உண்டும் உயிர் வாழ்ந்தனர். அங்கு உணவே முக்கிய தேவையாக இருந்த காரணத்தால் ஒரு காட்டின் பயன்களைப் பெறுவதில் குழுக்களுக்கிடையே மோதல்கள் இடம் பெற்றன. ஆரம்பகாலங்களில் வெல்பவர்கள் தோற்பவர்களை முற்றாகவே அழிக்கும்நிலை நிலவியது. மனிதன் நதிக்கரைகளில் தங்கி மிருக வளர்ப்பு, பயிற்செய்கை போன்ற தொழில்களில் ஈடுபட ஆரம்பித்த பின்பு வெல்பவர்கள் தோற்பவர்களைப் பிடித்து அடிமைகளாக வேலைவாங்கும் முறை தோன்றியது. அக்காலத்தில் அடிமைகள் மிருகங்கள் சொத்தாக விளங்கியன. அதுவே அடிமைசமூகஅமைப்பு என அழைக்கப்பட்டது.

ஆனால், அடிமைகளின் போராட்டங்கள் காரணமாக அடிமை சமூகமுறை மாற்றமடைந்து நிலமானிய சமூகம் உருவாகியது. அதாவது நிலம் பிரதான சொத்தாக்கப்பட்ட நிலையில் அதிகாரம் படைத்தவர்கள் நிலவுடமையாளராகவும் ஏனையோர் அவர்கள் நிலங்களில் வேலை செய்பவர்களாயும் மாறினர். அதன் திருந்திய வடிவமே மன்னராட்சி ஆகியது. அதாவது உற்பத்திக்கான நிலங்கள் அரசகுடும்பத்தின் சொத்தாகவும், அதில் பயிர்செய்வார்கள் அரசனுக்கு வரி செலுத்துபவர்களாகவும் ஆகினர். நீதி, நிதி மக்கள் நலன்கள் போன்ற சகல அதிகாரங்களும் மன்னர் கையிலேயே இருந்தன. ஆனால், சமூகத்தில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சியும், பெரும்தொழில் நிறுவனங்களின் உருவாக்கமும், பரந்த வர்த்தக முறைகளும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட நிலமானிய சமூக கட்டமைப்பை உடைத்து முதலாளித்துவ அரசியல் அதிகாரத்தை உருவாக்கியது. இதுவே இன்றைய முதலாளித்துவ ஜனநாயக அரசியலமைப்பாகும்.

இலங்கை போன்ற பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் முதலாளித்துவம் பெரிய அளவில் வளர்ச்சியடையாத போதிலும் இன்னும் நிலவுடமை சமூகத்தின் எச்சசொச்சங்கள் அழியாத போதிலும் தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாக முதலாளித்துவ ஜனநாயகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுவிட்டது. எனினும் இந்த ஜனநாயகக் கோட்பாடுகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி இந்நாடுகளில் தனிஒரு நபரிடமோ அல்லது ஒரு குடும்பத்தினரிடமோ மன்னராட்சி காலம்போன்று அதிகாரங்களைக் குவிக்கும் முயற்சிகள் இடம்பெறாமல் இல்லை. அதை நிறைவேற்ற இராணுவப் புரட்சி, சில சர்வாதிகார சட்டங்களை உருவாக்கல் போன்ற வழிமுறைகள் கையாளப்படுகின்றன.

13 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஏற்கனவே மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களின் ஒரு சிறு பகுதியை பரவல்படுத்துகிறது என்பதை எவரும் மறுத்து விடமுடியாது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியாவின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சில அதிகாரங்கள் பரவலாக்கப்படும்போது அந்தப் பரவலாக்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. ஏனைய தென்னிலங்கையில் உள்ள ஏழு மாகாணங்களுக்கும் கூடப் பரவல்படுத்தப்பட்டன.

18வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கான நிர்வாகசேவை, பொலிஸ் சேவை என்பவற்றின் மீதான அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. இது வடக்குக் கிழக்கு மட்டுமல்ல ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் பொருந்தும் எனினும், இது இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது. அதாவது தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கு எதிரான நடவடிக்கை என்ற பேரில் சிங்கள மாகாண சபைகளின் அதிகாரமும் சிங்கள மக்களின் பேராதரவுடன் பிரிக்கப்பட்டது. அதாவது 18வது அரசியலமைப்புச் சட்டம் மாகாணங்களின் அதிகாரங்களைப் பறித்து மையத்தில் குவிக்கும் முயற்சியில் ஒரு முக்கிய நகர்வாகும்.

அதேவேளையில் திவிநெகும சட்டத்தின் மூலம் சமுர்த்தி அதிகாரசபையை மத்தியஅரசின் கீழ்க் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் நீர், நிலம், சிறு தொழில்கள், சமூகசேவை போன்றவற்றில் மாகாணசபைக்கு உள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட முயற்சிக்கப்பட்டது. இது மாகாண சபைகள் சம்பந்தப்பட்டதால் அதை சகல மாகாண சபைகளும் அங்கீகரிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதைக் கிழக்கு மாகாணசபை உட்பட எட்டு மாகாண சபைகள் ஏற்றுக்கொண்டு விட்டன. அதில் இச்சட்டத்தின் மூலம் அந்த எட்டு மாகாண சபைகளின் அதிகாரங்கள் கூடப் பறிக்கப்படுகின்றன என்பதுதான் குறிப்பிடத்தக்க விசயம். அதாவது மாகாணசபைகளின் அதிகாரத்தைப் பறித்து மையத்தில் குவிக்கும் முயற்சியில் இதுவும் ஒரு முக்கிய முயற்சியாகும். இம்முயற்சியைக் கண்மூடித்தனமாக நீதிச்சேவை ஏற்கத் தவறியதால் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நிதிச்சேவைக்குமிடையே முறுகல் நிலை தோன்றியது. அதாவது நிதிச்சேவை நிறைவேற்று அதிகாரத்தைத் திருப்திப்படுத்தும் விதமாக நடந்துகொள்ள மறுத்தமை குற்றமாகக் கருதப்படுகின்றது.

நீதிச்சேவை ஆணையாளர் நடுவீதியில் வைத்துத் தாக்கப்பட்டார். பல வாரங்களாகியும் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை. பிரதமநீதியரசரின் கணவரும் முன்னாள் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவருமான பிரதாப்காமினி சுராஜ் காரியவாசம் பங்கு கொள்முதல் மூலம் அரசுக்கு 391 மில்லியன் நட்டம் ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டார். நீதிச்சேவை ஆணையாளர் மஞ்சுள திலகரட்னர ஒரு பெண் நீதிபதியுடன் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முயற்சி செய்தார் என நாடாளுமன்றில் ஒரு கடிதம் வாசிக்கப்பட்டது. அதேவேளை பிரதமநீதியரசரைக் கேவலப்படுத்தும் வகையிலான பொலிஸ்மா அதிபருக்கு எழுதப்பட்ட மொட்டைக் கடிதமும் சபையில் வாசிக்கப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரதம நீதியரசர் மீது குற்றப்பத்திரிகை சபையில் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான விசாரணையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரிக்கும். அதாவது நீதிச்சேவை நிறைவேற்று அதிகாரத்திற்கு அடிபணிய மறுத்தமையால் ஏற்பட்ட எதிர்விளைவுகள் இவை.

இந் நடவடிக்கைகளிலிருந்து இரு விஷயங்கள் தெளிவாகின்றன. நிதிச்சேவை தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் உட்பட்ட மிரட்டல்களுக்கு அடிபணிந்து போகவேண்டும் அல்லது அவர்கள் அகற்றப்பட்டு நிறைவேற்று அதிகாரத்துடன் ஒத்துழைக்கக் கூடியவர்கள் நியமிக்கப்படலாம்.

அதாவது இதுவும் கூட நீதிச் சேவைகளின் சுயாதீனம் பறிக்கப்பட்டு அந்த அதிகாரத்தையும் மையத்தில் குவிக்கும் ஒரு முயற்சி இதுவாகும். அடுத்து 13 வது திருத்தச்சட்டம் அகற்றப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலர் முன்வைத்த கருத்தும் அதற்காதரவாக சிங்களக் கடும்போக்காளர் மேற்கொள்ளும் தீவிர பிரசாரங்களுமாகும். 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இச்சட்டம் நீக்கப்படும்போது இயல்பாகவே மாகாணசபைகள் இல்லாமற் போய்விடும். அதன் பிறகு மாகாணசபைகளுக்கு தற்சமயம் வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அதிகாரங்களும் மத்திய ஆட்சி பீடத்தின் வசம் சென்றடைந்துவிடும்.

ஏற்கனவே 18 வது அரசியலமைப்புத் திருத்தம், திவிநெகும என்பவற்றின் மூலம் பகுதி பகுதியாகப் பறிக்கப்படும் மாகாணசபைகளின் அதிகாரங்கள் 13 வது திருத்தச்சட்டத்தை நீக்குவதன் மூலம் முழுமையாகவே மத்தியை அடைந்துவிடும் மாகாணசபைகளின் அதிகாரங்கள் படிப்படியாகப் பறிக்கப்படுவதற்கோ அல்லது முழுமையாக இல்லாமற் செய்வதற்கோ இனவாத அடிப்படையிலேயே சிங்கள மக்கள் மத்தியில் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. மாகாண சபைகள் தமிழ் ஈழம் அமைப்பதற்கான முதல்படி என்ற அடிப்படையிலேயே சிங்களமக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக தென்னிலங்கையில் உள்ள சிங்களமக்கள் கையில் அதிகாரம் கொண்ட மாகாணசபைகளும் அதை ஆதரிக்கின்றன.

அதேவேளையில் தென்னிலங்கையில் உள்ள மாகாணசபைகளின் அதிகாரமும் கூடப் பறிக்கப்படுகின்றது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இனவாத வெறியூட்டப்பட்டு அவர்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளின மீதான மாகாணசபையின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எல்லா மாகாணசபைகளும் அதை அங்கீகரிக்காத காரணத்தால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நகரஅபிவிருத்தி அமைச்சு என ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டு உள்ளூராட்சிசபைகளின் அதிகாரத்தில் ஒருபகுதியை பாதுகாப்புச் செயலர் தம்வசப்படுத்திக்கொண்டதை நாம் இங்கு கவனத்தில் எடுக்காமல் விடமுடியாது.

மாகாணசபைகளின் நிர்வாகத்தில் இருக்கும் மருத்துவமனைகளின் பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்பை மத்திய சுகாதார அமைச்சு கையகப்படுத்திக் கொண்டமை கடைசியாக வெளிவந்த தகவலாகும்.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டவாக்க அதிகாரமும், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரமும் இரு கண்கள் போன்றவை. சட்டவாக்க அதிகாரம் நாடாளுமன்றத்திற்கும், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் நீதித்துறைக்கும் உண்டு. இவை இரண்டுமேசுயமாக இயங்க வேண்டியவை.

ஆனால், இலங்கையில் நிதித்துறை நாடாளுமன்றத்திற்கும் நாடாளுமன்றத்தின் பேரால் அதிகாரம் செலுத்தும் நிறைவேற்று அதிகாரங்களுக்கும் அடிபணிந்து நடக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி அடிபணிய மறுக்கும்போது வன்முறைகள், மிரட்டல்கள் எனப்பலவித நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. நீதி தவற மறுப்பவர்களை நசுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 18 வது திருத்தச்சட்டம், திவி நெகும, உள்ளூராட்சி சட்டம், 13 வது திருத்தம் நீக்கம் போன்ற முயற்சிகள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளாகவே கருதப்படுகிறது. அதேபோன்று நீதித்துறை தொடர்பாக எழும் நெருக்கடிகளும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைகளுக்குமிடையேயான மோதலாகவே கருதப்படுகிறது.

● சந்திரசேகர ஆசாத்

அவற்றில் உண்மை இருந்தாலும் கூட அடிப்படையில் நாட்டின் முழு அதிகாரத்தையும் மன்னராட்சிக் காலம் போன்று ஒரு குடும்பத்தின் கையில் எடுக்கும் நோக்கமே வெவ்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால், இப்போது மன்னராட்சி யுகம் முடிந்து முதலாளித்துவ ஜனநாயகம் நடைமுறையில் உள்ளது. எவரும் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கிச் சுழற்ற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இத்தாலிய வடை

இத்தாலியின் நகரங்களில் ஒன்று பலர்மோ. இது சிசிலி தீவிலே அமைந்துள்ளது அங்கே தமிழர்களும் வாழ்கிறார்கள். நான் எனது நண்பரான வரதராஜாவுடன் அங்கே சென்றிருந்தேன். நகரத்தில் உள்ள கடைகளில் இலங்கையர்களுக்குச் சொந்தமான கடைகள் பலவும் உள்ளன அங்கே இருந்த தமிழரின் உணவுக்கடையொன்றில் நானும் நண்பரும் உணவு உண்பதற்காக உள் நுழைந்தோம். அங்கே தோசை, பிட்டு, இடியப்பம் வடை என்பனவும் பிஸ்ஸா போன்ற ஐரோப்பிய உணவுகளும் இருந்தன.

நாம் அங்கே வடைகளைச் சாப்பிடத் தீர்மானித்துக் கதிரைகளில் அமர்ந்தோம். அங்கே இருந்த வடைகள் சாதாரண அளவிலும் பார்க்கச் சற்றுப் பெரிதாகவே தெரிந்தன. நாம் அவற்றை உண்பதற்குத் தருமாறு கேட்டபோது, உணவு பரிமாறுவோர் ஒரு தட்டிலே இரண்டு வடைகளை இட்டு மேசையில் வைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து எனக்கும் எனது நண்பருக்கும் முன்னே மேசையில் கோப்பை ஒவ்வொன்றும் அதில் முள்ளுக்கரண்டியும் மேசைக்கத்தியும் எதிரில் 'சிலி சோஸ்' போத்தலும் வைக்கப்பட்டன. நான் ஆச்சரியத்தோடு அவற்றைப் பார்த்தேன். நண்பர் வரதராஜா அவை எல்லாவற்றையும் பார்த்துப் பழக்கப்பட்டவர் என்பதால் தட்டிலே பார்த்த வடை ஒன்றை தனது கோப்பையில் இருந்த முள்ளுக் கரண்டியால் குத்தி எடுத்துத் தனது கோப்பையிற் போட்டுக் கொண்டார். அதனை முள்ளுக்கரண்டியால் அமுக்கிப் பிடித்தவாறே மேசைக்கத்தியால் துண்டாடினார். எதிரில் கண்ட சோஸ் போத்தலில் இருந்த சோஸில் சிறிதாகக் கோப்பையில் ஊற்றிக் கொண்டார். துண்டாடப்பட்ட வடைத் துண்டத்தில் ஒன்றை முள்ளுக்கரண்டியால் குத்தி எடுத்து சோஸில் நனைத்துக் கரண்டியாலேயே வாயிலிட்டுச் சாப்பிட்டார். நான் அவரின் செய்கையை அவதானித்த பின்னர் அதேபோன்று வடையைச் சாப்பிட முயற்சித்தேன். ஆனால் எனக்கு அது விருப்பமான செய்கையாக இருக்கவில்லை. சாப்பிட்டுக் கொண்டிருந்த வரதராஜா "இது உங்களுக்கு ஒரு புது அனுபவம் இல்லையா?" என்றார். நானோ சிரித்தவாறே "இது எனக்குப் புது அனுபவம் இல்லை. முள்ளுக்கரண்டியால் சாப்பிட்டிருக்கிறேன். ஆனால் வடைக்குத்தான் இது புது அனுபவம்!" என்றேன். ஆழ்ந்து சிந்தித்தவாறே.




அவர் உடனே வாய்விட்டுச் சிரித்தார். "ஓமோம் உண்மைதான் எமது சுதேச வடைகள் ஒருபோதும் எமது மக்களால் இவ்வாறு முள்ளுக்கரண்டியின் குத்துக்கும் மேசைக்கத்தியின் வெட்டுக்கும் அகப்பட்டிருக்காதுதானே" என்று சொன்னதோடு கரண்டியை வீசிவிட்டுக் கையால் எடுத்துக் கடித்துண்ணத் தொடங்கினார். நானும் அந்த வடையைக் கையில் எடுத்து சோஸில் தொட்டுக் கடித்து உண்ணத் தொடங்கினேன். அப்பொழுதுதான் எனக்கு வடையைச் சாப்பிட்ட திருப்தி ஏற்பட்டது. அதன் உருசியும் தெரிந்தது இன்று பல்வேறு நாடுகளுக்குப் போகும் சந்தர்ப்பம் நமக்கு அதிகமாகக் கிடைப்பதனால் அந்த நாடுகளின் உணவு வகைகளை உண்ணப் பழகிக் கொண்டோம். ஆனால் எமது சுதேச உணவுகளையும் மேலைத்தேச முறைப்படி உண்ணுவதற்கு முயற்சிக்கும்போது எமது உணவுகளின் சுவை தொலைந்து போகிறது.

எமது ஒடியற்கூழின் சுவையை வெல்லும் வகையில் எந்த மேலைத்தேச சூப் வகைகளுக்கும் தகுதி இருக்காது, என்றே நம்புகிறேன். அதனையும் பனை ஓலையில் செய்த பிளாவிலோ அல்லது சிரட்டையிலோ ஊற்றிச் சுவைப்பதில் உள்ள சிறப்பு ஏனைய உண்ணும் முறைகளால் ஏற்படப் போவதில்லை. எமது கலாசாரமும் எமது உணவு வகைகளும் எம்முடையவைகள். அவற்றினை விடுத்து மேலைத்தேச முறைகளையும் அவர்களின் உணவுகளையும் உண்ணப் பழகிக் கொள்வதை இன்று எம்மில் பலர் நாகரிகமாகக் கொள்ளுகிறோம். எமது முன்னோர் பழக்கப்படுத்திக் கொண்ட அந்தச் சுதேச உணவுகளால் அவர்களிடம் விளைந்த நோய் எதிர்ப்பு சக்தியையும் உடற்பலத்தையும் நாம் அறிந்திருக்கிறோம். அவற்றை இன்று நாம் இழந்தது மாத்திரமல்ல எமது ஆயுளும் குறைந்து செல்வதை நாம் உணருகிறோம். எமது சுதேச உணவுகளை எமது சுதேச முறைப்படி ஆக்கி உண்பதில் உள்ள ஆரோக்கியத்தை நாம் பேணிக் காக்க முயலுவோம். தோசை, சாம்பார், வடை சம்பல், ஒடியற்கூழ், பிட்டு என்பவற்றில் உள்ளதெல்லாம் சுகம் தரும் சுவையும் சத்துக்களுமே என்பதை எமது அனுபவம் எமக்குச் சொல்லுகிறது. அதேபோல் வாழை இலையில் உண் பதில் உள்ள சுகம் இநதக் கோப்பை, பீங்கான்களில் இல்லை எனவே அதனை அலட்சியம் செய்யாதிருக்க முயல்வோம். அவை எமக்குச் சிக்கனத்தையும் சிறப்பான ஆயுளையும் தரும் சக்தி வாய்ந்தவை என்பதை நினைவில் கொள்ளுவோம்.

**நெடுந்தீவு மகேஷ்**

## கலைமுகம் - 54ஆவது இதழ்

திருமறைக் கலாமன்றத்தினரின் காலாண்டு சஞ்சிகையான "கலைமுகம்" வெளிவந்துள்ளது. சஞ்சிகையின் 54வது இதழாக ஜுலை-செப்ரெம்பர் 2012 இல் வெளியிடப்பட்டுள்ள இவ்விதழில் கலை இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகள் சிறுகதைகள் என்பனவும் நேர்காணலும் பத்தி எழுத்துக்களும் நூல் மதிப்பீடுகளும் இடம் பெற்றுள்ளன.

'பார்த்தல் என்னும் தியானம்' என்ற தலைப் பிட்டு எழுதப்பட்டுள்ள கட்டுரை, ஓவியங்களைப் புரிந்து கொள்ளல் பற்றியதான உணர்வுத்தகவல் களைத் தருகின்றது.

"கலைத்துவம் மிக்க ஓவியங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதென்பது கண்பார்வை அற்றவர் ஒளி தொடர்பான விசாரணையில் அமிழும் நிலையாகும். கலைத்துவம் மிக்க ஓவியங்களைப் புரிதல் என்பது கண்பார்வை இழந்தவர் பார்வையைப்பெறும் நிலையாகும்" என்ற விளக்கத்தோடு ஓவியங்களின் கலைத்துவம் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. ஓவியங்களைப் பார்த்து பல்வேறு இரசனையைப் பெறும் பார்வையாளர்களின் உள்ளத் துடிப்பையும் உணர்வுகளையும் கட்டுரை விபரிக்கிறது ஓவியர்களின் கலைத்துவம் வெளிப்படும் வகையில் தேர்ந்த ஓவியங்களின் சிறப்பு விரித்துரைக்கப் படுகிறது. ஓவியங்களை இரசிக்கும் உணர்வைத் தூண்டும் கட்டுரையைக் கோபாலபிள்ளை கயிலாசநாதன் எழுதியுள்ளார்.

"தென்மேற்குப் பருவக்காற்று" "அழகர்சாமியின் குதிரை" "வாகை சூடவா" ஆகிய திரைப்படங்கள் பற்றிய விமர்சனப் பார்வையூடாக பகுத்தறிவையும் யதார்த்தத்தையும் புறந்தள்ளியபடி வெளிவரும் இன்றைய வியாபாரச் சினிமாவிற்குள் இம்மூன் றையும் தேரந்து நல்லதென ஆய்ந்து "திரை உலா" என்ற பத்தியில் அ.யேசுராசா எழுதியுள்ளார். அவரது பார்வை நன்றெனத் தெரிகிறது.

பெண்ணியா, சோலைக்கிளி, எம்.ரி.ஷான் ஷெரீப், கமலா வாசுகி, அ.அனுஷானி, வேலணையூர் தாஸ், சித்தாந்தன், ந.மயூரரூபன் ,கிரிஷாந் ஆகிய கவிஞர்களின் கவிதைகளும் திசேரா எழுதிய "பூச்சியம்" முருகேசு ரவீந்திரன் எழுதிய "தனிமையின் நீட்சியில்" ஆகிய சிறுகதைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

நந்தினி சேவியர் எழுதிய "நெல்லிமரப்பள்ளிக்கூடம்", கே.எஸ்.சிவகுமாரன் ஏடுகளில் திறனாய்வு மதிப்பீடுகள் சில, அன்புடீன் எழுதிய "நெருப்பு வாசல்" நீ.மரிய சேவியர் அடிகளாரின் 50ஆவது ஆண்டு நிறைவின் நினைவு வெளியீடான Golden prism ஆகிய நூல்கள் பற்றிய மதிப்பீடுகளை முறையே அநாதரட் சகன், ந.சத்தியபாலன், ந.சபா, அல்வி ஆகியோர் தந்துள்ளனர்




'ஆடல் இயற்றலியல் இந்தியச் சுழலில் ஒரு மீள் வாசிப்பு' எனும் தலைப்பில் சபா ஜெயராசா அவர்களின திறனாய்வுக் கட்டுரையும் எஸ்.கே.விக்னேஸ்வரனின் 'கனவும் நனவாம்' கதையும் என்னும் பத்தியில் மீரா பாரதி அவர்களின் 'பிரக்ஞை' பற்றியும் இடம் பெற்றுள்ளன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தலைப்பிட்டு பா.துவாரகன், 35ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியிற் கண்டவை பற்றியும் அவர் பயணிக்கும்போது வாசித்த ஆனந்தரங்குப்பிள்ளையின் சரிதம் பற்றியும் அவர் சந்தித்த கி.அ.சச்சிதானந்தம் அவர்கள் சேகரித்து வைத்துள்ள ஆனந்தகுமாரசாமியின் மீதான ஆய்வுகள், மௌனியின் நூல்கள் பற்றியும் பூரணசந்திர ஜீவா பற்றியும் மாமல்லபுரம், தாராசுரம், தஞ்சைப் பெரிய கோ்வில் ஆகியவற்றின் கலைச்சிறப்புகள் பற்றியும் எழுதப்பட்டுள்ள விபரங்கள் பயனுடையவைகளாக உள்ளன. சதங்கை அணிவிழா கண்ட சாம்பேந்திரன் நாடகமான தென்மோடி நாட்டுக்கூத்து ஆடப்பட்டமை குறித்த விபரங்களுடன் பா.கிஸ்ணவேணி எழுதிய கட்டுரை நாட்டுக் கூத்தின் பாரம்பரியத்தையும் சிறப்பையும் தருகின்றன. மொத்தத்தில் ஒரு சஞ்சிகையின் முழுமைக்குள் அதன் வெளிப்பாடு இலக்கிய ஆர்வலர்களுக்குப் பெரிதும் பயன்தரும் என நம்பலாம்.

**மைதிலி தேவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருமே ஒன்றுதான்!

அண்மைக்காலமாக நாட்டில் அடுத்தடுத்து நிகழ்ந்து கொண்டிருக்கும். சம்பவங்களான பிரதம நீதிரயரசர் ஷிரானி பண்டாரநாயக்கா மீதான கடுங்குற்றச்சாட்டுகள் சிங்கள மொழியில் கூறப்படும் முதுமொழியான 'உணுத் எக்காய், முணுத்தெக்காய், தொப்பித் தெக்காய்' என்பதைப்போல, முன்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா செய்ததையே இப்பொழுது மகிந்தராஜபக்ஷவும் செய்கின்றார் என்பதன் மூலமாக அவர்கள் எல்லோருமே ஒன்றுதான் என்பதைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் நினைவுபடுத்துகின்றது.

1978 இல் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் தங்குதடையெதுவுமின்றி அங்கீகரிக்கப்படாத வகையில் பிரதம நீதியரசராக நெவில் சமரக்கோன் நியமிக்கப்பட்டார். அத்துடன் ஜே.ஆரின் எதிர்பார்ப்புகளுக்கு நேரெதிரான வகையில் பிரதம நீதியரசர் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் நிறைவேற்று அதிகாரத்திற்குச் சிக்கலளிப்பவையாக இருந்தமையால், எவருக்கும் தீங்கு விளைவிக்காதது போன்ற பாணியில் அவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்ட ஓர் கடும் சிக்கலான திடீர் நிகழ்வு இடம்பெற்றது. ஆனால், சமரக்கோன் மிகவும் சாதுரியமான விதத்தில் அவரது பதவியிலிருந்தும் ஓய்வுபெறுவதற்கான கடிதங்களைச் சமர்ப்பிப்பதன் மூலமாக அதிலிருந்து தவறிக் கொண்டார்.

இப்பொழுதும் ஜனாதிபதியின் சகோதரரான சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடமும்



உயர்நிலைப் பதவியிலிருக்கும் ஒருவருக்கெதிராக அவர் மீது கடுமையான குற்றங்கள் சுமத்தப்பட்ட பிரேரணையொன்று கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக நாடாளுமன்றின் நிலையாணைக் கட்டளையினைப் பிறப்பித்தலின் கீழ் ஓர் குழு அமைக்கப்படும். அத்தகைய குழுவும் பெரும்பாலும் வழமைபோல ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாகவே அமையுமென்பதில் ஐயமெதுவும் இருக்காது. அத்துடன் அக்குழுவின் தீர்மானமும் பிரதம நீதியரசருக்கு எதிராகவே அமையுமென்பது திண்ணம்.

1970 களில் தனிப்பட்ட ரீதியில் அதிகாரத்தையும் பதவியையும் பாதுகாத்துக்கொள்வதற்கு எந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காலால் மிதித்துத் துவைப்பதுபோல தொடர்சியாக நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியதை மீள நினைவுகூறும் பெரும்பாலான சிறிலங்கா மக்களும் இதனையே கூறுகின்றனர். இப்பதவியை வகிப்பவர் உண்மையாகவே இந்த அதிகாரங்களை விவேகமான முறையில் நாட்டினதும் மற்றும், நாட்டு மக்களினதும் நன்மை கருதியே பயன்படுத்துவாரெனவே மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், அதற்கு மாறாக அதிகாரங்களை தத்தமது சொந்த நன்மைகளுக்காகவும் அத்துடன் அடிக்கடி மக்களுக்குப் பாதகமான வகையிலும் பயன்படுத்தப்படும் நிலைமையே காணக்கூடியதாக எப்பொழுதும் இருக்கின்றது.

பிரதம நீதியரசர் குறித்து அவரின் தகுதிகள் தகுதியின்மைகள் பற்றிப் பகிரங்கமாகச் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் கலந்துரையாடப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வருகின்றது. அவ்வாறாயின் நிறைவேற்று அதிகார நிர்வாகம் நாடாளுமன்றம் மற்றும் நீதி நிர்வாகத்துறைகளின் புனிதத்தன்மைதான் என்ன?

மக்களின் இறையான்மையைப் பேணிப்பாது காக்கும் பொருட்டே அரசியலமைப்பின் மூலமாக விதிமுறைக் கட்டமைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் உயரிய பதவிகளில் உள்ளவர்கள் அவற்றினைத் தமது தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்துவார்களேயாயின், அச் செயல்முறை செயலிழந்து போவதுடன் மக்களைச் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதில் இருந்து மக்கள் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் கட்டுப்படாத ஓர் சிக்கலான நிலைமையையே கொண்டு வரும்.

அரசியல்நல நாட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பிரதம நீதியரசருக்கெதிரான நடவடிக்கையும் ஏற்கனவே இத்தகைய சிந்திக்காது செயற்படும் முயற்சிகள் இடம்பெறுகின்றதென்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன், பெரிதும் கவனத்துடன் கையாளப்படவேண்டிய இப்பிரச்சினை குறித்து ஊடகங்களில் அரச தரப்புப் பேச்சாளரான கெகலிய ரம்புக்வெல்ல உட்படப் பல இளநிலைப்படியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், கையாண்ட குறிப்புரைகளும் மற்றும் கேலிப் பேச்சுக்களும் கவனத்திற்கொள்ள வேண்டிய மற்றுமொரு விடயமாக உள்ளது.

2007 பங்குனியில் பாகிஸ்தான் நாட்டுப் பிரதம நீதியரசரை நீக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதியான ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பினால் முயற்சிகள் எடுக்கப்பட்ட வேளையில் காவல்துறையுடனும் மற்றும் பாதுகாப்புப் படைகளுடனும் ஏற்பட்ட மோதல்களின் பயனாக சட்டவாளர்களும் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களும் சிந்திய குருதியால் வீதிகள் நிரம்பி வழிந்ததை எவரும் மறந்துவிட முடியாது.


இங்கும் இத்தகைய உயர்நிலை அதிகாரித் தரமுடைய ஒருவர் மீதான விடயத்தில் கேலியும் கூத்தாகவுமிருந்தால் அது நாட்டிற்கு நேரடியான பின்விளைவுகளை நாட்டிற்குள் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் விளைவிக்கும்.


பாகிஸ்தானில் முஷ்ராப் பிரதம நீதியரசரை அவரது இராணுவத் தலைமையகத்திற்கு வரவழைத்து அவரைப் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கியதுடன் அதிகாரத் துஷ்பிரயோகத்தின் கீழ் தவறான முறையில் அவரை விட்டுத் தடுப்புக் காவலிலும் வைத்தார்.

இது விடயம் பற்றிப் பொதுமக்களின் கருத்துக்கணிப்பு முனைப்புக் குறையாமல் அதிகரித்துவருவது தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. யூ.என் பியினால் சரத் சில்வாவுக்கு எதிரான முயற்சிகள் உட்பட பிரதம நீதியரசரை நீக்கும் எந்த ஒரு நோக்கமும் வெற்றிகரமாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை.

வரவு செலவுத் திட்டத்தின் முதல்நாளைய நிகழ்வாக இதனை நாடாளுமன்றில் எழுப்புவதும் வரவு செலவுத்திட்டத்தின் தாக்கத்திலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கான அரசாங்கத்தின் ஓர் உத்தியா? பொருளாதார சிக்கல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. பொருளாதார வளர்ச்சி கீழிறங்கு நிலையில் உள்ளது. அத்துடன் அரசாங்கம் வெளிநாடுகளில் கடன் வாங்குவதும் அதிகரித்த நிலையில் உள்ளது.

அரசாங்கம் முற்கூட்டியே சில அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகளை வரவு





செலவு திட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராகவே அதிகரித்துவிட்ட போதிலும், பெருமளவிலான நாட்டுமக்கள் வரவு செலவுத் திட்டத்தினூடாகத் தமக்கு ஏதாகிலும் ஓர் நிவர்த்திகிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

ஆயினும் அதேவேளையில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளமோசமான பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்கான ஓர் மோசடி ஏற்பாடாகவும் இந்தக் குற்றப் பிரேரணை இருக்கக்கூடுமென வும் பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இன்றைய நிலையில் அதிக விவாதத்துக்குரிய விடயம் என்னவெனில் யூ.என்.பி யினரும் இதைத்தான் செய்தார்கள். நாங்கள் மட்டும் ஏன் இதனைச் செய்யமுடியாது என்பதேயாகும். உண்மையாகவே சிறிலங்காவின் தலைவர்கள் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது மக்களின் நலன்களுக்காகவோ வேலை செய்பவர்களாயிருப்பின் இத்தகைய விவாதங்கள் ஆதாரமற்றவையாகும்.

இரண்டு பிழைகள் ஒருபோதுமே ஒரு சரியாகிவிடாது. பிழை என்பது பிழைதான். எந்தச் சூழ்நிலையிலும் அதனை நியாயப்படுத்திவிட முடியாது.

நிறைவேற்று அதிகார நிர்வாகம், நாடாளுமன்றம், நீதித்துறை நிர்வாகம் போன்ற அமைப்புகள் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதனால் அவற்றினை நிச்சயம் பாதுகாத்திடவேண்டும். அத்துடன் நாட்டின் உயர்நிலைச் சட்ட அமைப்பான அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள சட்ட விதிகளுக்குள் இயங்குவதற்கு மக்களினால் மேற்குறிப்பிட்ட அமைப்புகளுக்கு பெருமைப்படுத்தும் வகையில் நம்பிக்கையை வழங்கியுள்ளனர்.

ஆனால், அவை அவ்விதமாக இயங்கவில்லையாயின் நாட்டில் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் மக்கள் கட்டுப்படாத நிலைமையே உருவாகும். அது ஓரளவில் ஏற்கனவே இடம்பெற்றுக்கொண்டும் உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இவை அபாயச் சமிக்ஞைகளாகவே இருந்தன. இன்றோ அவை நிஜமாகின்றன.

**01.11.2012 சண்டேரைம்ஸ் ஆசிரியத் தலையங்கம்.**

**— தமிழில் ஜஸ்ரின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

14, நவம்பர் - 20 நவம்பர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 –5

E-mail: editorial@sudaroli.com

# விரும்பத்தகாத ஊடுருவல்கள்!

தமிழ் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது போரின் பின்னான காலகட்டத்தில் தமிழ்மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆனால் அவ்வாறான நிலைமை இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

தமிழ் பிரதேசங்களிலிருந்து படைப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என்கிற கருத்து தமிழ் அரசியலில் மட்டுமல்லாது சர்வதேச நாடுகள், மனிதஉரிமைகளுக்கான அமைப்புக்கள் என அனைத்துத்தரப்பினரது கருத்தாகவும் கோரிக்கையாகவும் உள்ளது.

படைக்குறைப்பு என்பதற்கும் அப்பால், தமிழ் மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் படைத்தரப்பின் தலையீடுகளை இல்லாமல் செய்யவேண்டியது இன்று முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இன்று எந்தவொரு நிகழ்விலும் படைத்தரப்பின் பிரசன்னமிருப்பதைக் காணலாம். அது அரச நிகழ்வுகளாக இருந்தாலும் சரி அரசுடன் தொடர்புபடாத நிகழ்வாக இருந்தாலும் சரி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் நிகழ்வுகளானாலும் சரி அங்கே இராணுவ அதிகாரிகளைக் காணலாம். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், முதலானவர்களோடு படைஅதிகாரிகளும் மாலைமரியாதைகளுடன் கலந்து கொள்ளும் நிகழ்வுகளை நாம் அன்றாடம் காண்கின்றோம்.

இந்நிலை நாட்டின் வேறு பகுதிகளில் இல்லை. தமிழ் பிரதேசங்களில் மட்டுமே காணப்படுகிறது. இதற்கும் அப்பால், பொதுமக்களின் சாதாரண நிகழ்வுகளிலும் கூட விரும்பத்தகாத, அருவருக்கத்தக்க தலையீடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் கலாசார, கலை இலக்கிய நிகழ்வுகளில் கூட பாதுகாப்புத் தரப்பினரின் பிரசன்னம் விரும்பத்தகாத வகையில் இடம்பெறுகின்றது. என்ன நிகழ்வு? இதில் யார் கலந்துகொள்கின்றார்கள்? இதனை ஏற்பாடு செய்தவர் யார்? என்பதையெல்லாம் துருவித்துருவி ஆராயும் நோக்கில் ஊடுருவும் இவர்கள், குறித்த நிகழ்வில் கலந்து கொள்பவர்களை அச்சுறுத்தி அந்நிகழ்வின் சுமுகநிலையினையே குழப்பி விடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற சில நூல்வெளியீட்டு நிகழ்வுகளில் கூட இவர்களின் ஊடுருவல்கள் இடம்பெற்றுள்ளதோடு, நிகழ்வு நடைபெற்று வெளியே வந்தவர்கள் விசாரிக்கப்பட்டு, சிலரின் கைகளிலிருந்த நூல்களும் பறித்துச் செல்லப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எழுத்தாளர் ஒன்றுகூடும் நிகழ்வு ஒன்றில் சிலர் உள்நுழைந்து விரும்பத்தகாத முறையில் நடந்துகொண்டுள்ளனர்.

போரினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள பிரதேசங்களில் மக்களின் வீடுகளில் நடைபெறும் திருமண, மரணச்சடங்குகளில் கூட இவ்வாறானவர்களின் ஊடுருவல் மற்றும், கண்காணிப்பு நிகழ்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


தமிழ்மக்களின் சாதாரண நிகழ்வுகளைக் கூட கண்காணிக்கும் நடவடிக்கை என்பது மிக மோசமான எல்லைமீறல் அல்லது மனிதஉரிமைமீறல் என்றே பார்க்கப்படக் கூடியதாகும்.

சிலவற்றைக் கண்காணிக்கத்தான் வேண்டுமென்றால் அதற்கான நாகரிகமான வழிமுறைகள் உள்ளன. ஆனால் தமிழர்கள் என்பதாலோ என்னவோ அவ்வாறான நாகரிகம் சம்மந்தப்பட்டவர்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, பிரபல கவிஞர் ஒருவரது 'எனது படுக்கை அறைக்குள் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்' என்ற கவிதைதான் நினைவிற்கு வருகின்றது. ஒரு மனிதனது மிகவும் அந்தரங்கமான இடம்தான் படுக்கையறை. அதற்குள்ளும் ஊடுருவி யாரோ கண்காணிக்கிறார்களென்றால் எப்படியிருக்கும்?

தமிழ் பகுதிகளில் வாழும் மக்களின் தினசரி வாழ்வு இந்நிலையில்தான் இருக்கின்றது.

# போர்க்களமாகிய வெளிக்கடை!



சிறைச்சாலைகளில் சிறைக்காவலர்கள் கைதிகள் இடையே ஏற்படும் மோதல்கள் தொடர்கதையாக அரங்கேறி வருகின்றன.

அந்த வகையில் கடந்த 9 ம் திகதி வெலிக்கடைச் சிறையில், கைதிகள் வசம் தொலைபேசிகளும் போதைப்பொட்களும் இருப்பதான தகவல் விசேட அதிரடிப் படைக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கசிந்திருக்கிறது. இது தொடர்பில் ஆராயவும் சிறைச்சாலையை சோதனையிடுவதுமான முடிவு அதிரடிப்படையினாலும் சிறைச்சாலை அதிகாரிகளாலும் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் வெலிக்கடை சிறைச்சாலைகளுக்குள் புகுந்த அதிரடிப்படையினர் அங்கு இருந்த ஒவ்வொரு கூண்டுகளாக சோதனையிட முற்பட்டிருக்கின்றனர். இதனால் அங்கிருந்த சிங்கள கைதிகளுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றிருக்கிறது.

மரண தண்டனைக் கைதிகள் தடுத்து வைத்திருக்கும் பகுதிக்குள் புகுந்த அதிரடிப்படை அங்கும் தேடுதலை நடாத்த முற்பட்டிருக்கிறது. இந்நிலையிலேயே அதிரடிப்படைக்கும் மரணதண்டனை கைதிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது இதனை அடுத்து அந்தக் கைதிகளை வலுக்கட்டாயமாகப் பிடித்த அதிரடிப்படையினர் கைதிகளை கூண்டுக்குள் தள்ளி அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதாக சிறைச்சாலை கைதியொருவர் தெரிவித்திருக்கிறார்.

அதன் பின்னரே வெலிக்கடை சிறையில் பாரதூரமான மோதல்கள் ஆரம்பமாக தொடங்கியிருக்கின்றது ஆரம்பத்தில் சிறைச்சாலையை விட்டு வெளியே வந்த கைதிகளில் சில பகுதியினர் அப்பகுதியில் நின்ற படையினர் மீது கல்வீச்சை மேற்கொண்டிருக்கின்றனர். இதனை அடுத்து படையினரும் இவர் மீது தாக்குதல் நடாத்தியிருக்கின்றனர். இந்த மோதல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அப்பகுதியைவிட்டு கலைந்த கைதிகளில் ஒருதொகையினர் சிறைச்சாலையில் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் களஞ்சிய அறையை உடைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர். அங்கு குவிக்கப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கிகளை எடுத்து அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்ததாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதிகள் பலரிடம் துப்பாக்கிகள் பரிமாறப்பட்டதால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் அங்கிருந்த அதிரடிப்படை பாரிய சவாலை சந்தித்தது பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கிய துப்பாக்கிச் சண்டை நள்ளிரவைத் தாண்டியும் தொடர்ந்தது. அமைதியாக இருந்தவெலிக்கடை போர்க்களமாக மாறியது. நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் ஏற்பட்ட தாமதங்களை அடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவக் கமாண்டோக்கள் அழைக்கப்பட்டனர். சிறைச்சாலைக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. பாதுகாப்பு கடமைக்கு கவச வாகன அணிகளும் அழைக்கப்பட்டன. சிறைக்கைதிகள் தப்பிப்போகாத வகையில் பாதுகாப்பு வேலிகள் பொலிஸாரால் சிறைச்சாலையை சுற்றிபோடப்பட்டன. இந்நிலையிலும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குக்கொண்டுவர படையினரால் முடியாமல்போனது. இந்நிலையில் மேலதிக இராணுவ அணிகள் வரவழைக்கப்பட்டு தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டன. வெலிக்கடைக்கான போக்குவரத்துகள் முற்றாக துண்டிக்கப்பட்டன. பிற்பகல் தொடங்கிய வேட்டோசைகள் வெலிக்கடைப்பகுதியில் இரவுமுழுவதும் அதிர்ந்த வண்ணமிருந்ததாக கூறப்படுகின்றது.

இந்த சூழ்நிலையில் நீண்ட நேரத்தின் பின்னரே அதாவது அடுத்தநாள் காலையே சிறைச்சாலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடிந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வர்ணகுரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் குறித்த மோதல் சம்பவத்தில் 27 பேர் கொள்ளப்பட்டதாகவும் 16 சடலங்களை தாம் மீட்டதாகவும் பின்னர் நடாத்தப்பட்ட தேடுதல்களில் மேலும் 11 சட லங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் வெலிக்கடைச் சிறைச் சாலை நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின் அது மீண்டும் சிறைச் சாலை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இராணுவமும் பொலிஸாரும் சிறைச்சாலைக்கு வெளியே பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை இது தொடர்பாக கருத்து தெரிவித்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர 27 சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் 43 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். காயமடைந்தவர்களில் 13 பொலிஸாரும் 4 இராணுவமும் இரு சிறைச்சாலைக் காவலர்களும் அடங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளர். அதேவேளை பலர் ஆயுதங்களுடன் தப்பியோடியிருப்பதாகவும் அவர்களில் 7 பேர் சரணடைந்து இருப்பதாகவும் ஏனையவர்களை தேடும்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறைச்சாலைத் திணைக்கள வட்டாரங்களின் தகவலின்படி பல கைதிகள் தப்பியோடியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த சிறைச்சாலை அதிகாரியொருவர் 82 துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் சிறைச்சாலையில் இருந்து காணாமல் போயிருப்பதாகவும் அவற்றில் 72 தானியங்கி துப்பாக்கிகள் மீட்கப்பட்டிருப்பதாகவும் மேலும் சில துப்பாக்கிகளையும் கைதிகளையும் காணவில்லை எனவும் அவர்களை வலைவீசித்தேடும் பணி முடுக்கி விடப் பட்டிருப்பதாவும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை முப்பது பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படவேண்டும் என பல கட்சிகள் அறிக்கைகளை விடுத்துள்ளன. இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்துள்ள முன்னணி சோஷலிசக் கட்சி சிறைச்சாலைக்குள் பதற்ற நிலை ஏற்பட்டவுடன் புகுந்த படையினர் பதற்ற நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை விடுத்து துப்பாக்கிச் சூடு நடாத்தி தாக்குதல் நடாத்துவது குறித்தே கவனம் செலுத்தியதாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதேவேளை சிறைச்சாலை கைதிகளும் மனிதர்களே என்று சிறைச்சாலை சுவர்களில் எழுதினால் மட்டும் போதுமா? என கேள்வியெழுப்பியுள்ள அக்கட்சி இது தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படவேண்டும் என அரசை வலியுறுத்தியுள்ளது இதேவேளை இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெலிக்கடை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் தமிழ் அரசியல் கைதிகளும் தம்மீது துப்பாக்கிகள் எப்போது நீட்டப்படும் என்ற அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.


இதேவேளை இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இச்சம்பம் தொடர்பில் விசாரணை நடாத்த மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். இதேவேளை ஏனைய கைதிகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் மேலதிக கைதிகளை வேறு சிறைச்சாலைக்கு மாற்றியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்த மோதல் சம்பவத்தில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் சம்பந்தப்படவில்லை, மரணதண்டனை வழங்கப்பட்ட கைதிகளும், பாதாள உலகக் கும்பலுமே சம்பந்தப்பட்டிருக்கின்றனர். தமிழ் கைதிகள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களைப் புலிகளுடன் தொடர்பு படுத்தி அரசதரப்பினரும், சிங்களக் கடும்போக்காளர்களும் பெரும் கோஷமிட்டிருப்பர்.

— ஹரிஹரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுங்கள்



**தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை இத்தகைய குழப்பங்களையும் பிரச்சினைகளையும் உண்டாக்கும் உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

யாழ்மாவட்டத்தில்உள்ள பிரதேசசபைகளின் நகரசபைகளின் எதிர்கட்சியினர் யார் என்பதில் பாரிய சந்தேகம் மக்களிடையேஏற்பட்டுள்ளது எவ்வாறுநாம் ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிக்கும் சமகாலத்தில் வாக்களித்தோம் என மண்டையை போட்டு குழப்புகின்ற போதிலும் அவர்களினால் உரிய பதிலை கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

இதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வசமுள்ள பிரதேசசபைகள், நகரசபைகளிலேயே யார் எதிர்கட்சி உறுப்பினர்கள் என்பதையிட்டு மக்கள் பெரும் குழப்பத்திற்கும் தடுமாற்றத்திற்கும் உள்ளாகியுள்ளனர்கள்.

யாழ்.குடாநாட்டில் உள்ள நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசசபைகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடமும் இது தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசசபைகள். நகரசபைகள் அனைத்தும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வசமும் காணப்படுகின்றது.

இதிலும் யாழ்ப்பாணம் மாநகரசபை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களிடம் இருக்க, எதிர்கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசம் காணப்படுகின்றது.

இந் நிலைமையில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, முஸ்லிம் கட்சி உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து ஆளும் கட்சியாக யாழ்மாநகர சபையில் செயல்பட, எதிர்கட்சியாக செயல்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் கூட உறுப்பினர்களிடையே குழப்பமும் பிரச்சினைகளும் நீடித்துக் கொண்டு செல்கின்றது.

யாழ். மாநகர சபையில் எதிர்கட்சி உறுப்பினர்களின் தலைவர் எனக் கூறிக் கொள்ளும் நபர் ஆளும் கட்சியுடன் இணைந்து தலையாட்ட, ஏனைய உறுப்பினர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் அதேவேளையில் ஆளும் கட்சியுடனும் உண்மைக்காக மோதிக் கொள்கின்றார்கள்.

ஆளும் கட்சியில் எதிர்கட்சி உறுப்பினர்கள் போன்று செயல்பட்டவர் தூக்கி எறியப்பட்டு அந்த இடத்திற்கு புதிய அங்கத்தவர் நியமனம் செய்யப்பட்டு ஆளும் கட்சி உறுப்பினர்கள் முரண்பாடுகள் இன்றி சரியோ பிழையோ தமக்குள் ஒற்றுமையாக செயல்பட்டுக்கொள்கின்றார்கள்.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக நின்று ஒற்றுமையே பலம் எனக்கூறி தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை தெரிவுசெய்து அறுதிப் பெரும்பான்மையுடன் சுதந்திரமாக இயங்கக் கூடியவகையில் அனுப்பிவைத்தார்கள்.

இதனை நல்லமுறையில் மக்களுக்காக பயன்படுத்த முடியாமல் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கைகளில் இருக்கும் பிரதேசசபைகளும் நகரசபைகளும் பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கையில் உள்ள பிரதேச சபைகள் நகர சபைகளில் கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஒற்றுமைக்கு வாக்களித்த மக்களை சினம் கொள்ளச் செய்துள்ளதுடன், வெட்கித் தலைகுனியவும் செய்துள்ளது.

எதிர் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆளும் கட்சி உறுப்பினர்களாக நடந்துகொள்ள ஆளும்கட்சி உறுப்பினர்களின் ஒரு பகுதியினரே எதிர்கட்சி உறுப்பினர்கள் போன்று செயல்படும் நிலைமையைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகளும் கூட இத்தகைய செயல்பாடுகளுக்கு சரியான நடவடிக்கைகளை எடுப்பதில்லை.

தமிழ் மக்களுடைய ஒற்றுமையைப் பற்றி தேர்தல் காலத்தில் முழங்கும் கூட்டமைப்புத் தலைமைகள் பிரதேச சபைகள், நகரசபைகளின் உறுப்பினர்களிடையே காணப்படும் ஒற்றுமை இன்மையை சீர்செய்து ஒற்றுமையாகவும் செயல்பட வழிகாட்டாமை தமிழ் மக்களிடையே பலத்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தவகையில் சங்கானை வலிமேற்கு பிரதேச சபையில் இருந்த உறுப்பினர் ஒருவர் தன்னை சாதி கூறியதாகக் கூறி தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியுள்ளதாகக் கூறியதுடன் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டதாகக் கூறினார்.

சிறிது காலத்தில் மீண்டும் பத்திரிகையில் பேட்டி கொடுத்து மக்கள் சேவைக்காக நான் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து கொண்டேன் எனக்கூறி அறிக்கையும் விட்டார்.

இத்துடன் சங்கானை ஆளும்கட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகள் முடிவடையவில்லை. அண்மையில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக தாங்களே நம்பிக்கையில்லா தீர்மானத்தைக்கொண்டுவந்து வெளியேற்றினார்கள்.

அடுத்து மானிப்பாய் பிரதேச சபையை எடுத்துக்கொண்டால் சபை கூடிய நாள் முதல் இன்று வரைக்கும் பிரச்சினையாகவே இருக்கின்றது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோதிலும் எதிர்கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்காமையால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றது.

இங்கும் எதிர்கட்சி கண்மூடியிருந்தது அல்லது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது. இன்றும் கூட வருடாந்த செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து வெற்றிபெற முடியுமா? என்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அந்தளவுக்கு ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் இரண்டாகப் பிரிந்து நின்று கூத்தாடுகின்றார்கள்.

வடமராட்சி வல்வெட்டித்துறை நகரசபையைப் பார்த்தால் எதிர்கட்சியும் தனது பங்களிப்பை வழங்க ஆளும்கட்சி உறுப்பினர்கள் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

சபை நடவடிக்கைகளின்போது பாரிய குழப்பங்களை உண்டாக்கி சபையின் செயல்பாடுகளை குழப்புவதும் ஏனைய எதிர்க்கட்சிகள் விமர்சிக்கும் அளவுக்கு ஒழுங்கற்ற முறையிலும் செயல்பட்டுக் கொள்கின்றார்கள்.

இன்னும் மேலே போனால், சாவகச்சேரியிலும் கூட இதற்கு குறைந்தோமா என்பதைப் போன்று தலைவர் உபதலைவருக்கு எதிராக உயிர் அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

வலி வடக்கு தெல்லிப்பளை பிரதேச சபையை எடுத்துக்கொண்டால் தலைவருக்கும் உப தலைவருக்கும் இடையே ஊடகப் போர் ஒன்றை உபதலைவர் நடத்திக்கொண்டு இருக்கின்றார்.

இவைகளைவிட மேலும் சில சபைகளில் ஆளும்கட்சி உறுப்பினர்களிடையே உள்ளக புகைச்சல் காணப்பட்டாலும்கூட இன்னும் சந்திக்கு வரும் நிலமைக்கு வெடிக்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இத்தகைய பாரிய முரண்பாடுகள், குழப்பங்கள் பிரதேசசபை, நகரசபை உறுப்பினர்களுக்கு இடையே நிலவுகின்றபோதிலும் ஏன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்பது பாரிய கேள்வியாகும்.

சபைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிவிட்டது. என்ன நடந்தாலும் பரவாயில்லையென்ற நிலையில் இருக்கின்றார்களா?

தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை இத்தகைய குழப்பங்களையும் பிரச்சினைகளையும் உண்டாக்கும் உறுப்பினர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனையடுத்து மக்களுக்கு வேடிக்கை காட்ட முனைவார்களேயானால் வடமாகாணசபைத் தேர்தலில் சிலசமயம் அதற்கான விலையைக்கொடுக்க வேண்டியும் கூட ஏற்படலாம்.

ஆகையினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகவும் கட்டுப்பாடாகவும் ஒழுக்கமாகவும் இருக்கவேண்டும். இந்த வகையில் பிரதேசசபைகள், நகரசபைகளின் உறுப்பினர்கள் விடயத்தில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இதனை விடுத்து எங்களுடைய கையாலேயே எங்களுடைய கண்களை குத்த முனைபவர்களை நீக்க வேண்டும். உரிய தண்டனை வழங்கவேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் மக்களுடைய கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கண்மூடி இருப்பதும், காலம் தாழ்த்துவதும் கூட எம் மக்களுடைய ஒற்றுமையை சீர்குலைக்கும் என்பதுடன் நம்பிக்கையீனத்தையும் கூட ஏற்படுத்தலாம்.

விடுதலைக்காக தவித்து நிற்கும் மக்கள் ஒற்றுமையுடன் அளித்த வாக்குகளை கொச்சைப்படுத்தும் நிலமையை உருவாக்கக்கூடாது.

ஏற்கனவே தமிழ் மக்கள் நாட்டில் நிலவும் ஜனநாயகத்திலும் வாக்களிப்பிலும் நம்பிக்கையிழந்து வாக்களிப்பதையே குறைத்துள்ள நிலையில், பிரதேசசபைகள், நகரசபைகளின் உறுப்பினர்களிடையே நடைபெறும் ஒற்றுமை இன்மையும் குழப்பமும் அடுத்த தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா? என்ற கேள்வியைக் கேட்டு வாக்களிப்பதற்குச் செல்வதையே குறைத்துவிடவும்கூடும்.

ஆகையினால் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகள் விரைவாக பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள சபைகளின் உறுப்பினர்களை அழைத்துப்பேசி சுமூகமான தீர்வை உண்டாக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமும் எண்ணமும் ஆகும்.

**வில்லவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலக்கப்படுவாரா விலகிச்செல்வாரா?

பிரதம நீதியரசர் டாக்டர் ஷிராணி பண்டாரநாயக்காவை நீக்குவதற்காக 157 பாராளுமன்ற. உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகர் சமல் ராஜபக்சவிடம் குற்றவியல் பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளார்கள். 225 எம்.பிக்கள் கொண்ட இலங்கைப் பாராளு மன்றத்தில் 161 எம்.பிக்கள் ஆதரவு கொண்ட பெரும்பான்மையை அரசு கொண்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு கொண்ட 75 எம்பிக்களின் கையொப்பமே போதுமானது ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் உட்பட 157 எம்பிக்கள் கையொப்பம் இட்டுள்ளார்கள்.



அதனால் பிரதம நீதியரசருக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு எதிர் நடவடிக்கையையும் அரசு வென்று விடும்.

சர்வதேச அரங்கில் இன்று இலங்கை பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ள நிலையில் ஜெனீவாவில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் பூகோளக்காலக்கிரம கூட்டத்தில் மீளாய்வுக்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கைக்கு அது தாக்கங்களை ஏற்படுத்தலாம். மனிதஉரிமைகள் மீறல் குற்றச்சாட்டுத் தொடரில் இலங்கை மீதான சர்வதேசத்தின் சந்தேகம் அதிகரித்துள்ளது.

ஜெனீவாவில் இலங்கையின் மனிதஉரிமைகள் சிக்கல் மீளாய்வுக்கு எடுக்கப்பட்ட அதே தினத்தில்தான் இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் அவரது கணவர் மீதான லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண தாக்கப்பட்டமை தொடர்பான விடயங்கள் உட்பட பல விடயங்கள் உள்ள போதிலும் 'திவிநெகும' சட்டமூலம் தொடர்பான உயர்நீதி மன்றத்தீர்ப்பே எல்லாவற்றிற்கும் பிரதான காரணம் எனலாம். கடந்த ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சோக்கப்பட்டிருந்தது. 'திவிநெகும' சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசமைப்பின் 13ஆவது திருத்தப்படி மாகாண சபைக்குரிய பட்டியலில் அடங்குபவை என்பதால் அரசமைப்பின் 154 (ஏ) 3ஆம் பிரிவின் கீழ் அந்தச் சட்ட மூலத்தை மாகாணசபைகளின் கருத்துக்கு ஜனாதிபதி சமர்ப்பிக்காத நிலையில் அதனைச் சட்டமாக்க முடியாது என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இதையடுத்து மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்தியஅரசுக்கு மையப்படுத்தும் 'திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) சட்ட மூலத்தை சகல மாகாணசபைகளுக்கும் ஜனாதிபதி அனுப்பியிருந்தார். கிழக்குமாகாணம் உட்பட நாட்டின் 9 மாகாணசபைகளுக்கும் அனுப்பப்பட்டது.

கிழக்குமாகாணசபையில் முஸ்லிம்காங்கிரஸ் தனது 7 உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசு 'திவிநெகும' சட்ட மூலத்தை வெற்றி கொண்டது. சட்டம் நிறைவேற்றப்பட்டது. 9 மாகாணசபைகளில் கிழக்கு உட்பட 8 சபைகள் ஆதரவு தெரிவித்து சட்டமாக்குவதற்கு ஒப்புதல் அளித்தது. இந்தச் சமயத்தில் வடமாகாண சபையை தேர்ந்தெடுக்கப்படாத நிலையில், இயங்காத நிலையில் இது விடயத்தில் அந்தச்சபையின் கருத்து நிலைப்பாடு இதுதான் என்பதை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள அரசின் முகவரான வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் வெளிப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. இதை எதிர்த்து, வடமாகாண ஆளுநருக்கு கருத்து, நிலைப்பாடு சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லையென்பதை முன்னிறுத்தி கூட்டமைப்பு செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பியுமான மாவை சேனாதிராஜா கடந்த மாதம் ரிட் மனுவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கூட்டமைப்பு சார்பாக பிரபல வழக்கறிஞர் எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகி வாதாடினார்.

மாகாணசபையொன்றின் கருத்து நிலைப்பாட்டை அரசமைப்பின் 154(ஏ)3 பிரிவின் கீழ் கோரப்படும் பட்சத்தில் அதனை அந்த மாகாண சபையின் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைக் கொண்ட மாகாணசபையே செய்ய முடியும். மாகாணசபை கலைக்கப்பட்ட நிலையில் அரசின் நேரடி முகவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் என்பவர் கருத்துச் சொல்லவோ அல்லது தீர்மானிக்கவோ முடியாது என்று வழக்கறிஞர் சுமந்திரன் ஆஜராகி வாதாடினார்.

ஆனால் அரசமைப்பின் ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டுக்கு அமைய இத்தகைய ரிட் மனுவை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கிடையாது என்று அரச தரப்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக டி சில்வா பிரசன்னமாகி வாதாடினார்.

இந்த இரண்டு வாதங்கள் தொடர்பிலும் உரிய அரசமைப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு வியாக்கியானம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கிடையாது என அரசதரப்பில் வாதிடப்பட்டது. இதை அரசதரப்பும், மாவை சேனாதிராஜா தரப்பும் ஏற்றுக் கொண்டதற்கிணங்க ரிட்மனு உயர்நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம். அந்த தீர்ப்பில், அரசின் முகவரான ஆளுநர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். அவர் மக்களின் பிரதிநிதியல்ல. ஒரு மாகாணசபையின் கருத்து என்பது அந்தச் சபையின் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளால் தெரியப்படுத்தவேண்டும். எனவே வடமாகாண ஆளுநருக்கு 'திவிநெகும' சட்டமூலம் சம்மந்தமாக எந்தவொரு கருத்தும் சொல்ல முடியாது. அதற்கான அதிகாரம் அவருக்கில்லையென்று தீர்ப்பு வெளிவரவுள்ளதாக தெரிய வருகின்றது. இந்த நிலையில்தான் பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்ற விசாரணை பிரேரணையொன்று அரசால் செய்யப்பட்டு 157 எம்பிக்கள் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வமாக சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதமநீதியரசருக்கு எதிராக மூன்றில் ஒரு பங்கு எம்பிக்களின் கையொப்பம் போதுமானது. ஆனால் இரண்டு பங்குகளையும் தாண்டி கையொப்பம் பெறப்பட்டுள்ளது. பிரதமநீதியரசருக்கு இப்படியாக குற்றவியல் பிரேரணையை முன்வைப்பதால் அரசு அவரை பதவி நீக்கம் செய்யும் அல்லது நெருக்கடியில் இருந்து அவர் தானாக விலகிக் கொள்வதற்காக தனது பதவியை இராஜினாமாச் செய்யலாம்.

பிரதமநீதியரசருக்கு எதிராக இப்படியாக குற்றவியல் பிரேரணையை முன்வைப்பதால் அரசு அவரை பதவி நீக்கம் செய்யும் அல்லது நெருக்கடியில் இருந்து அவர் தானாக விலகிக் கொள்வதற்காக தனது பதவியை இராஜினாமாச் செய்யலாம்.

தற்போது சபாநாயகா 7 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்து பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிப்பார்கள். அதன்பின் விசாரணைஅறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பின்பு உத்தியோகபூர்வமாக பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்படலாம். ஆனால் இலங்கைக்கு இது விடயத்தில் சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகின்றது. இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஜெனீவாவில் இருந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்தவாரம் ஜெனீவாவில் ஆரம்பமான பூகோளகாலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரில் பிரதம நீதியரசரின் விவகாரம் தீவிரமாக ஆராயப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் கூடிய கவனம் செலுத்துவதாக ஐநா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. லண்டனை தலைமையாகக் கொண்ட அம்னஸ்ரி இன்ரெநெஷனல் இந்த விடயத்தை ஜெனீவாவில் சமர்ப்பித்துள்ளது. பிரதம நீதியரசர் விடயத்தில் ஐ.நா. மன்றம் உட்பட அமெரிக்கா, கனடா பிரிட்டன், இந்தியா, ஜோமன் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கிடுக்குப் பிடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை அவமானப்பட்டு மூக்குடைபடுமோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்த விடயத்தில் ஐ.நா.உட்பட மனிதஉரிமை அமைப்புக்கள் இலங்கையை விடுவதாக இல்லை. எப்போதும் மஹிந்தர் தொடர்ந்து வெல்ல முடியுமா? எல்லாவற்றிலும் மீசையை முறுக்க முடியுமா? திமிர் காட்ட முடியுமா? பிரதம நீதியரசர் விடயத்தில் அரசு தோற்குமானால் எதிர் வரும் காலங்களில் ஈழத் தமிழர்களுக்கு நல்ல காலம்தான். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை 2013 ஆம் ஆண்டிலிருந்து ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கலாம். இலங்கையின் மனித உரிமை மீறல்களும், அடக்குமுறையும், அடாவடியும், இலங்கையில் தலைவிரித்தாடுகின்றது என்பதற்கு பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை என்பது வலுவான சான்றாக மேற்குலகத்திற்கு கிடைத்துவிட்டது. இத்தனைக்கும் பிரதமநீதியரசர் செய்த குற்றமென்ன தெரியுமா? 'திவிநெகும' என்ற சட்ட மூலத்தை அரசுக்கு ஆதரவான தீர்ப்பாக இல்லாமல் எதிரான தீர்ப்பாகவும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நீதியான தீர்ப்பாக அளித்துவிட்டார்; முற்றுமுழுதாக சிறுபான்மைச் சமூகங்களுக்கு சார்பான தீர்ப்பாக வழங்கிவிட்டார்; சினத்தின் உச்சக் கட்டம்தான் பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை. இப்போது இந்த விடயத்தில் சர்வதேச அழுத்தம் இலங்கைக்கு அதிகரித்து வருவதனால், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை அரசு வாபஸ் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்படலாம். அல்லது தனது பதவியை அவர் இராஜினாமா செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி எதையும் செய்யலாம்.

ஆனால் நீதி, நியாயமும், தர்மமும் சாகாது என்பதை மஹிந்த சகோதரர்கள் புரியும் நாள் வெகு தொலைவில் இல்லை.

எம்.எம்.நிலாம்டீன்
அட்டாளைச்சேனை.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## முதற்கவிதை



நினைவுகளின்
சங்கமத்தில்
கனவுகளில்
மூழ்கிய எனக்கு
நிஜங்களின்
வலிதனிலே
முதல் தோன்றிய
கைக் குழந்தை
என் முதற் கவிதையே...!

காவ்யா
புளியம்பொக்கணை.

## கொலைவெறி




ஐயோ...!
உந்தன்
கோரப் பசிக்கு
நாங்களா கிடைத்தோம்?

உன் நா நனைக்கும்
ஒரு துளி
இரத்தத்திற்காய்
ஓராயிரம் நோய்களை
எம்மில்....
தொற்ற வைக்கின்றாயே.

ஏ... நுளம்பாரே...
ஏன் உனக்கு
இந்தக் கொலைவெறி?

தேனாள் சுரேஷ்
வேலணை.

## பயனற்றுப் போகும் அழுகை



பிரபஞ்சத்தை நிறைக்கும்
காற்றில்
மூச்சுக்கள்
இன்னும்.... இன்னும்....
கலக்கும்.

நிழலாய்...
எம் வாழ்வின் வாசலில்...
நிரந்தரக் கொலுவிருக்கும்.

எடுத்து வைக்கும்
காலடிகளுக்குள்...
கலகலத்தபடி மறைந்திருக்கும்
மரணம்


ஏதுமற்று வந்தது போல்
அப்படியே செல்கையிலும்....
துணைக்கு வரும் மரணம்
ஜனனங்களில்... தொடக்கப்பட்டு
பெருவெளியில்...
வியாபித்துப் படர்கிறது.

நினைவுகளை அறுத்து
வலியிலிடும் மரணம்
ஜீவன்கள் அத்தனைக்குமாய்...
காத்திருக்கிறது.

பயணப்படும் மரணத்தை
சபிக்க முடியாதபடி
பயனற்றுப் போகும் அழுகை.

சு.க.சிந்துதாசன்
பொலிகண்டி.

## துரோகம்



வெற்றியின் வாசலில் தமிழன் நிற்க
குற்றி போட்டு
வீழ்த்தியது யாரோ?

வீரம் என்று கோசமிட்டவனை
பாரம் என
தாழ்த்தியது யாரோ?

பாசம் என தவழ்ந்தவனை - படு
நாசம் செய்து
வீழ்த்தியது யாரோ?

வேல்.நயன்
புளியம்பொக்கணை

## வாழ்ந்துபார்



மாலையில் மரணிப்போமென
மலர்கள் நினைத்தால்
காலையிலே மலர முடியாது

இருளே தஞ்சமென
மின்மினிப் பூச்சி நினைத்தால்
இரவிலே ஒளிர முடியாது.

காலையிலே இறந்துவிடுவோமென
ஈசல் நினைத்தால்
மாலையில் பறக்கமுடியாது.

சிறகினை சுமையென
பறவைகள் நினைத்தால்
வானிலே பறக்க முடியாது.

வறுமை வறுமையென
மானிடர்கள் நினைத்தால்
வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாது.

மரணம் பற்றியே
மனிதர் நினைத்தால்
வாழ்வை ரசிக்கமுடியாது.

இன்னல்களை எதிர்த்துவாழ
அனைவரும் பழகிக் கொண்டால்
இவ் வையகத்துள்
இன்பமாக வாழ்ந்திடலாம்.

கலைச்சிந்து
கலைவட்டித்திடல்.

## நேசிப்புகளும் துயரங்களும்



அந்த குட்டி வௌவால்
வாழ எவ்வளவு
ஆசைப்பட்டிருக்கும்

தன் இனத்தோடு
கூடி
இரை தேடி
மரங்களில் ஜீவிக்க
எவ்வளவு ஆவல்
கொண்டிருக்கும்

அந்திப் பொழுது
புலரிந்தவுடன்
சந்தி மாமரத்தில்
இராத்திரிப் பொழுதை
கழித்திடும்

ஆனால் நேற்று
மின்சாரக் கம்பியில்
தொங்கியபடி....
வௌவாலின் பரிதாப மரணம்

மேசைக்கு போனபோது
மிதிவெடியில் சிக்கி
உயிர் இழந்த
என் வீட்டு பக்கத்தானை
ஞாபகப்படுத்துகிறது.

## மனதோடு ஒரு மழைச்சாரல்



வானோடு அங்கே மின்னல்கள்
கூத்தாட மேகங்கள் கரைந்து
இங்கே தூறல்கள் சிந்தும்
துளிகளின் நடனம்
இலைகளில் தொடங்க
சாரல்கள் தெறித்து என்
மேனியில் பூக்கும்
மார்கழி வாடையில்
ஆடைகள் நழுவ தூறல்கள்
எனக்கோர் தாவணி
கொடுக்கும் மனதோடு
மயில்கள் தோகைகள்
விரிக்க என்னோடு சேர்ந்து
பூக்காடும் ஆடும்...

ப்ரியா
தொண்டைமானாறு மேற்கு.

## ஊழல்



அரசியல்வாதிகளின்
செல்லக் குழந்தை
அதிகாரிகளின்
நகசிய காதலி
எதிர்க்கட்சிகளின்
பிரச்சார பதாகை
அரசாங்கங்களின்
வரலாற்றுக் கொள்கை.

சி.ஹரிணி.
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

**14.11.2012 - 20.11.2012**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

உதவும் குணத்தால் உயர்ந்தவர்களே! சாதுர்யமாக பேசுவீர்கள். மனஉளைச்சல் நீங்கும். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். மறதியால் பணம், நகைகளை இழக்க நேரிடும். வாகனம் அடிக்கடி பழுதாகும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட வேண்டிய வாரமிது.

**ரிஷபம்**

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

உழைப்பால் உயரும் உத்தமர்களே! வேலைச்சுமை அதிகரிக்கும். சில நேரங்களில் தூக்கம் குறையும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்தப்பாருங்கள். யாருக்காகவும் எந்த வாக்குறுதியும் தர வேண்டாம். கொஞ்சம் அலைச்சல், சகோதரங்களால் சங்கடங்கள் வந்துப் போகும். தலைச்சுற்றல் வரும். நெஞ்சு வலி வரக்கூடும். தானுண்டு தன் வேலை உண்டு என்றிருக்க வேண்டிய வாரமிது.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர்களே! கண் எரிச்சல், அடிவயிற்றில் வலி வந்து போகும். உணவில் பழங்கள், கீரை வகைகளை சேர்த்துக் கொள்வது நல்லது. ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருக்கும். தாய்வழியில் ஆதரவு பெருகும். பழைய சிக்கல்களுக்கு தீர்வு காணும் வாரமிது.

**கடகம்**

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

மிதமாக யோசித்து வேகமாக செயல்படுபவர்களே! தன்னிச்சையாக சில பெரிய காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள். உங்களின் அனுபவ அறிவை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். இளைய சகோதரம் ஆதரவாக இருப்பார். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கடனில் ஒரு பகுதி கரையும் வாரமிது.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

கடந்து வந்த பாதையை மறக்காதவர்களே! சாதுர்யமாகவும், சமயோசிதமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாருடன் இருந்து வந்த மோதல்கள் விலகும். ஒருவித சோர்வு, களைப்பு, படபடப்பு வந்து போகும். பார்வையை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உறவினர்களுடன் இடைவெளி உண்டாகும் வாரமிது.

**கன்னி**

**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

தன்கையே தனக்குதவி என்று வாழ்பவர்களே! வீண் குழப்பங்கள், தடுமாற்றங்கள் நீங்கும். தந்தைவழியில் உதவிகள் கிடைக்கும். கை, கால் வலிக்கும். பெண்களுக்கு ஹார்மோன் பிரச்சினை, சிறுநீர் கோளாறுகள் வந்து போகும். அனுபவ அறிவால் சாதிக்கும் வாரமிது.

**துலாம்**

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சோர்ந்து வருபவர்களை உற்சாகப்படுத்துபவர்களே! உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக செயல்படப்பாருங்கள். தலை வலி, சையனஸ், சளி, பையில்ஸ் தொந்தரவுகள் வந்து போகும். ஓரளவு நிம்மதி கிட்டும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் வாரமிது.

**விருச்சிகம்**

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

அண்டமேசிதறினாலும் அஞ்சாதவர்களே! மனஇறுக்கங்கள் நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். பதவிகள் தேடி வரும். சகோதரங்களுடன் இருந்த சச்சரவு நீங்கும். எவ்வளவு பணம் வந்தாலும் செலவுகள் இருந்து கொண்டேயிருக்கும். தன்னடக்கத்தால் தடைகளைத் தாண்டும் வாரமிது.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

திடீர் முடிவுகள் எடுப்பவர்களே! மாற்று யோசனைகள் மனதில் உதிக்கும். மனதிலே சின்னச் சின்ன சஞ்சலங்கள், எதிலும் பிடிப்பற்ற நிலை, ஆர்வமின்மைவந்துப் போகும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். தொலை நோக்குச் சிந்தனையால் இலக்கை எட்டிப் பிடிக்கும் வாரமிது.

**மகரம்**

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

நல்லது, கெட்டதை சமமாக பாவிப்பவர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். கொஞ்சம் அலைச்சல் இருக்கும். சிலரை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைத்து ஏமாறாதீர்கள். தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வந்து பேசுவார்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் வாரமிது.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நாடிவருவோருக்கு நல்லதைச் செய்பவர்களே! எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். அலைச்சல், வேலைச்சுமை, தூக்கமின்மை, மஞ்சள் காமாலை வரக்கூடும். தாயாருடன் பிரச்சினைகள் வந்து போகும். அவரின் மருத்துவச் செலவுகளும் வரக்கூடும். திடீர் பணவரவு உண்டு. விட்டதைப் பிடிக்கும் வாரமிது.

**மீனம்**

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சொன்னதை முடித்துக் காட்டும் சத்திய சீலர்களே! படபடப்பு, வீண் சந்தேகங்கள் விலகும். எவ்வளவு பணம் வந்தாலும் செலவுகள் இருக்கும். பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம். புது வேலை அமையும். சகோதரங்கள் பக்கபலமாக இருப்பார்கள். கூடாத பழக்க வழக்கங்களை விட்டுவிடும் வாரமிது.

# அளவு மீறி ஆசைப்படாதீர்



ஒரு ஆற்றில் ஏக வெள்ளம். ஒருவன் அக்கறைக்கு அவசியம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். கையில் பணப்பை இருந்தது.

படகுகள் நின்றன. அதில் ஏறினால், படகுக்காரன் ஐந்து ரூபாய் கேட்பானே! மிச்சம் பிடிக்கலாம்! என நினைத்து, அசட்டு தைரியத்தில் ஆற்றுக்குள் இறங்கி நடக்க ஆரம்பித்தான். ஓரிடத்தில் சுழலில் சிக்கினான். பணப்பை அடித்துச் செல்லப்பட்டது. "ஐயையோ! என் பணத்தைக் காப்பாத்துங்க!" என்று கத்தினான். அந்த சமயத்தில் அங்கு நீச்சலடித்து வந்த இளைஞன், வேகமாய் நீந்தி பணப்பையை எடுத்துக்கொண்டு கரையேறினான். அங்கே சிலர் நின்றனர்.

"யாரப்பா! பணப்பையை தவற விட்டது! பிடியுங்க!" என்றான். யாரும் அது தங்களுடையது இல்லை என்றனர். அப்படியானால், பணத்தை தவறவிட்டவன்...அவன் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தது தெரிய வந்தது.

ஐயையோ! பணத்தைக் காப்பாற்று என்று சொன்னவன், எனக்கு நீச்சல் தெரியாது, என்னைக் காப்பாற்று' என்று சொல்லியிருந்தால், அவனைக் காப்பாற்றியிருப்பேனே!" என்று வருத்தப்பட்டான்.

பார்த்தீர்களா! பணத்தாசை உயிரையே குடிக்கிறது. சம்பாதிக்க வேண்டியது தான்! ஆனால், அளவுக்கு மீறிய ஆசையால், உயிருக்கே ஆபத்தை வரவழைத்துக் கொள்ளக்கூடாது! புரிகிறதா!

# நமக்குத் தேவையான விளக்கு



* ராமபக்தியுடன் வாழ்பவர்கள் பரிசுத்தம், மகிழ்ச்சி பெற்று இம்மையிலும் மறுமையிலும் மேன்மை அடைவார்கள்.
* ராமபக்தியுடையவருக்கு ஞானம், வைராக்கியம் தாமாக உண்டாகும். பாவத்திலிருந்து விடுபட்டு வாழ்வர்.
* பார்வை இருந்தாலும், இருளில் நடக்க விளக்கு தேவைப்படுகிறது. அதுபோல நமக்கு அறிவு இருந்தாலும், சரியான வழிகாட்ட ராமபக்தி என்ற ஒளிவிளக்கு தேவை.
* அதிர்ஷ்டம் வந்தால் ஆனந்தக்கூத்தாடுவதும், துன்பம் வந்தால் துவண்டு போவதும் கூடாது. எதிலும் நிதானமாக இருப்பது நல்லது.
* சத்தியம் தான் நமக்கு உற்ற துணை. எப்போதும். உற்சாகத்தை இழக்கக் கூடாது. பிறப்பும், இறப்பும் உலகின் இயற்கை என்பதை உணர்ந்து பணிவோடு நடக்க வேண்டும்.
* உடலையும், உள்ளத்தையும் தூய்மையான நிலையில் வைத்து, பக்தி சிரத்தையுடன் சேவை செய்ய வேண்டும். நல்ல செயல்கள் செய்வதில் தயக்கம் கூடாது.

- ராமாயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்புக்களுடன் நீண்ட பயணம்!

உண்மைச் சம்பவம்

வியட்நாம் நாட்டில் வியட்நாமியப் படைகளுக்கும் கம்யூனிசப் புரட்சிப் படைகளுக்குமிடையில் போர் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதி அது. எங்கும் ஒரே கலகம், அமைதியின்மை, விமானக் குண்டு வீச்சுக்கள், அவலச்சாவுகள், எங்கும் பஞ்சம், பசி, பட்டினி என அவலங்களால் நாடு அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது.

பல்லாயிரக் கணக்கானோர் உயிருக்கு அஞ்சித் தம்மிடமுள்ளவற்றை விற்றுப் பணத்தைத் தரகர்களுக்குச் செலுத்தி அவர்கள் மூலமாக இயந்திரப் படகுகளின் மூலம் அயல் நாடுகளுக்குக் களவாகத் தப்பியோடித் தஞ்சமடைந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் வியட்நாம், மெக்கோஸ்டெல்ரா எனும் பகுதியில் வாழ்ந்துவந்த குடும்பங்களில் ஒன்றாக கொஷிமினின் குடும்பமும் விளங்கியது. அவனது பெற்றோர்கள் விவசாயிகள். அவர்களுக்கு மூத்தவனான 17 வயது பூர்த்தியாகிய நிலையில் மிங் மற்றும் 15 வயதான கொஷிமினும் ஆக இரண்டே இரண்டு ஆண்பிள்ளைகள் மட்டுமே.

போர் மென்மேலும் உக்கிரநிலையை எட்டிக்கொண்டிருந்தது. 18 வயதும் அதற்கு மேற்பட்ட 40 வயதிற்குமிடையிலான ஆண்கள் அனைவரும் கட்டாய இராணுவ சேவைக்காகப் பிடித்துச்சொல் லப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பகுதி முழுவதும் பகலில் தென்வியட்நாமியப்படையினரின் கட்டுப்பாட்டின் வசம் இருக்கும். ஆனால் இரவாகியதும் ஏதோ ஒரு விதத்தில் புரட்சிப் படையினர் வீடுகளினுள் புகுந்து துப்பாக்கி முனையில் நெல்மூடைகள் உணவுத்தானியங்கள் மற்றும் நகைகள் பணம் போன்றவற்றை மிரட்டிப் பறித்துச் செல்வதும் வழக்கமாகிவிட்டது. போரினால் விவசாயமும் பாதிக்கப்பட்டுவிட்டது. மூத்தவனான மிங்கின் வயது இன்னும் ஓரிரண்டு மாதங்களில் 18ஐ அடையும் நிலையில் இருந்ததால் அவனை நிச்சயமாகக் கட்டாய இராணுவ சேவைக் காகப் பிடித்துச் சென்றுவிடு வார்கள் என்பதை நன்குணர்ந்த மிங்கின் பெற்றோர்கள் தம்மிட மிருந்த தங்க நகைகளையும் விற்று அத்துடன் அவர்கள் வசமிருந்த சேமிப்புப் பணத் தினையும் ஒரு தரகருக்குக் கொடுத்து அவரின் மூலமாக மிங் மற்றும் கொஷிமினையும் களவாக நாட்டைவிட்டு எங்கேயாவது பிறநாட்டிற்குக் கொண்டுசென்று விடுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து முடித்தனர்.

சிறுவனான கொஷிமினுக்குப் பெற்றோரை விட்டுப்பிரிய அறவே மனமில்லை. ஆயினும் பெற்றோரின் வற்புறுத்தலின் நிமிர்த்தம் புறப்படவேண்டியதாயிற்று.

அவர்கள் இருவருக்குமுரிய உடைகள் உணவு குடிநீர் என்பன ஒழுங்குபடுத்திவைக்கப்பட்டன. அவர்களின் கைச்செலவிற்காக பணமும் வழங்கப்பட்டது. அவர்கள் எங்கேயாவது ஒரு நாட்டினை அடைந்ததும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சிறிய தந்தையாருடன் தொடர்பு கொள்ளும்படி அவர்களின் தந்தையார் அவரது அவுஸ்திரேலியா முகவரியையும் கொடுத்தார்.

பிள்ளைகள் இருவரும் பெற்றோரைப் பிரியமனமின்றிப் புறப்படும் வேளையில் அழுதபடி கட்டித்தழுவி விடைபெற்றுக்கொண்டனர். படையினர் எவரின் கண்ணிலும் படாமல் ரகசியமாகச் செல்லவேண்டுமென்பதால் மாலைவரை காத்திருந்தனர்.

இரவு 7 மணியாகியது உறவினர் ஒருவர் அவரது மோட்டார் சைக்கிளில் சகோதரர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு காட்டுப் பகுதியினூடாகப் பாயும் ஆற்றங்கரையொன்றில் இறக்கிவிட்டார். அங்கு ஆற்றுநீரில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சிறிய வள்ளமொன்றில் மிங்கும் கொஷிமின்னும் ஏறித் துடுப்பினால் வள்ளத்தை வலித்துச் செல்லத் தொடங்கினார்கள்.

ஆற்றில் வள்ளப் பயணம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரையில் எடுத்தது. ஒருவாறு அதிகாலை 3 மணியளவில் ஆற்றின் கழிமுகத்தையடைந்து விட்டனர் சகோதரர்கள் இருவரும். அங்கே 43 அடி நீளமும் 10 அடி அகலமுமுடைய ஓர் இயந்திர விசைப்படகு அவர்களுக்காகக் காத்திருந்தது. அவர்கள் அதில் ஏற்றப்பட்டுக் கடலில் பயணம் தொடங்கிற்று அப்பொழுது நேரம் அதிகாலை 3.30.

75 பேர்கள் மாத்திரமே செல்லக்கூடிய அப்படகில் 50 ஆண்கள் 30 பெண்கள் மற்றும் 30 சிறுவர்கள் என மொத்தத்தில் 110 பேர்கள், அளவுக்கு மிஞ்சிய நிலையில் ஏற்றப்பட்டிருந்தனர். எல்லோரும் எதுவிதத்திலும் எங்கேயாவது தப்பிச் சென்றுவிடவேண்டும் என்ற ஒரே இலக்குடன் நெருக்கியடித்துக்கொண்டு படகில் இருந்தனர்.

ஒருவாறு வியட்நாமிய கடலெல்லையைத் தாண்டி தென்சீனக் கடற்பிரதேசத்திற்குள் படகு நுழைந்துவிட்டது. இனிமேல் வியட்நாம் படையினரால் பயம் எதுவும் கிடையாது. அப்பொழுதுதான் அனைவரின் முகத்திலும் சற்றுப் பெருமூச்சுடனான நிம்மதி தெரிந்தது. அப்பொழுது காலை 7 மணி.

முதல் நாள் கடலில் புயல் வீசத் தொடங்கியது. படகில் பயணித்தவர்களுக்கு கடற்பயணத்தில் முன் அனுபவம் இன்மையால் அனைவரும் கடற்குமட்டல் (seasick) கோளாறுக்கு ஆளாகி அவதியுற்றனர். பிற்பகலில் புயலின் வேகம் சற்றுத் தணிந்தது. ஆனால் புயலின் சீற்றத்திற்கு முகங்கொடுக்க இயலாது தள்ளாடிய படகில் இருந்து கடலினுள் வீசப்பட்ட படகின் கப்டனை இழக்கவேண்டி நேரிட்டது. அனைவரும் திகைப்பில் ஆழ்ந்துவிட்டனர். துடுப்பு இல்லாப் படகு போலகப்டன் இல்லாத விசைப்படகினைத் திசைதெரியாக் கடலில் எங்ஙனம் செலுத்துவது?

இரண்டாவது நாள் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல, கப்டனை இழந்து அலைமோதும் படகின் இயந்திரத்திலும் ஏதோ கோளாறு ஏற்பட்டுப்



படகிற்கு உந்தாற்றல் இன்மையால் கடலில் தத்தளித்தது. இயந்திரத்தைச் சீர்செய்யும் திறன் உள்ளோர் எவரும் படகில் இருக்கவில்லை. படகு அலைகளின் மத்தியில் கிடந்து தள்ளாடியது. படகிலுள்ளோர் அதிர்ச்சியடைந்தவர்களாக திக்பிரமை பிடித்தவர்கள் போல் அன்றைய இரவைப் போக்கினர்.

ஐந்தாவது நாள் உண்பதற்கான உணவுகள் தீர்ந்துவிட்டதால் பசியினாலும் குடிப்பதற்கு குடிநீரின்மையால் தாகத்தினாலும் மிகவும் சோர்வடைந்துவிட்டனர். அதிலும் சிறுவர்களின் நிலைமை படுமோசமாக இருந்தது. கடலில் இப்படி அவதியுற்று மடிவதை விட வியட்நாமியப் படையினரிடம் பிடிபட்டிருக்கலாமென அந்நிலையில் சகோதரர்களான கொஷிமின்னும் மிங்கும் மனதினுள் எண்ணினர். அவ்வேளையில் படகிலிருந்த எட்டு ஆண்கள் படகின் மேற்தளத்திலிருந்த பலகை மரங்களைப் பிய்த்தெடுத்து அவற்றினைத் துடுப்புகளாகப் பாவித்து கடல் நீரில் வலித்து வலித்துப் படகினை ஓரளவு வேகத்தில் நகரச் செய்தனர். ஆயினும் பசிக்களைப்பு மற்றும் நாவரட்சியால் எதுவும் செய்ய இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

அடுத்த இரு நாட்கள் தாய்லாந்து மீன்பிடிப்படகு போன்ற ஒன்று கடலில் இவர்களது படகினைக் கண்டு இவர்களது படகிற்கு அருகே கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அவர்களது படகுடன் கயிற்றால் பிணைத்து இப்படகு கட்டப்பட்டது. அனைவரும் அப்படகுக்கு மாற்றப்பட்டனர். உணவும், குடிப்பதற்கு குடிநீரும் வழங்கப்பட்டன. ஆனால் வந்தவர்கள் யாரென்பதை அறிந்ததும் அனைவருக்கும் பாதி உயிர்போய்விட்டது. அப்படகில் வந்தவர்கள் கடற்கொள்ளையர்கள். வியட்நாமியப் பயணிகளிடமிருந்த தங்க நகைகள் பணம் சகலதும் அவர்களால் சூறையாடப்பட்டன. பல மணித்தியாலங்களின் பின்னர் மாலை நேரமாகியதும் பெண்களின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு இளம் பெண்களைத் தம்முடன் வைத் துக்கொண்டு ஏனையோரைப் பழுதடைந்த படகிற்குள் இறக்கிவிட்டுவிட்டனர் கடற்கொள்ளையர்கள்.

அன்றிரவு முழுவதும் கடற்கொள்ளையரின் படகிலிருந்து அப்பெண்களின் அலறல்களே கேட்டவண்ணமிருந்தன. அப்பெண்களைக் காட்டுமிரண்டித் தனமாகக் கற்பழித்தபின் மறுநாள் விடியற் காலையில் படகிற்குத் திருப்பி அனுப்பிவிட்டு, படகுடன் பிணைத்திருந்த கயிற்றினைக் கழட்டிவிட்டு அவர்களது படகு சென்று மறைந்துவிட்டது.

எட்டாவது நாள் அனைவரும் உடலில் நீர்பிடிப்பு இன்மையால் (dehydration) செயலற்றுப் போயினர். இந்நிலையில் கடற்கொள்ளையரினால் கற்பழிக்கப்பட்ட பெண்களில் நால்வர் இறந்து போயினர். எதுவும் செய்ய இயலாத நிலையில் அவர்களது சடலங்களைக் கடலில் வீசிவிட்டனர். உயிர்களைத்தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் கிடந்து திண்டாடிக் கொண்டிருந்தனர்.

கடலில் ஒன்பதாவது நாள் தொடக்கம் 12 வது நாள் வரைக்கும் கடற்கொள்ளையர்கள் இடையிடையே வந்து படகினைச் சுற்றி வளைத்துப் பெண்களைக் கற்பழித்துவிட்டுச் சென்றனர். எதிர்ப்புக் காட்டிய ஒன்பது பெண்களையும் மூன்று ஆண்களையும் வெட்டிக்கொன்று கடலில் வீசினர். அவர்களில் ஒரு சிலர் மனமிரங்கியவர்களாகவும் காணப்பட்டனர். குடிப்பதற்குக் குடிநீரையாவது வழங்கினார்கள்.

பதின்மூன்றாவது நாள் அதிகாலையில் சிறிது தூரத்தில் ஓர் சிறிய தீவு தென்பட்டது. அத்தீவிலிருந்து புறப்பட்ட ஓர் படகு இவர்களை நோக்கிவந்தது. உதவி கிடைக்கப்போகின்றதென எல்லோரும் ஆவலுடன் ஏங்கினர். ஆனால் வந்தவர்களும் கடற்கொள்ளையர்களே. அவர்கள் எதிர்பார்த்தது போலக் கொள்ளையடிப்பதற்கு எதுவுமே அகப்படாதமை அவர்களை வெகுண்டெழச் செய்தது. ஆவேசமாகப் புரிந்துகொள்ளமுடியாத மொழியில் திட்டித் தீர்த்தனர். கத்திகளைக் காட்டி மிரட்டினர். தூஷித்தனர். பின்பு ஓர் வியட்நாமிய இளைஞனைப்பிடித்து கத்தியால் வெட்டிக்கொலை செய்தபின் கடலில் வீசினர். அவர்களது படகுடன் இத்னையும் பிணைத்துக் கட்டினார்கள். அவர்கள் படகுடன் இதனையும் 14 மணித்தியாலங்கள் வரையில் இழுத்துச் சென்றனர். இதற்கிடையில் சில பெண்களும் சிறுவர்களும் பசியாலும் தாகத்தினாலும் இறந்து விட்டனர். இறந்தவர்களின் -மீன்களுக்கு இரையாகின.

எஞ்சிய 14 இளைஞர்களையும் தமது படகின் மேற்தளத்தில் குப்புறப்படுக்க வைத்தனர். அவர்களில் சகோதரர்களான கொஷிமின்னும் மிங்கும் உள்ளடங்கியிருந்தனர்.

கடற்கொள்ளையர்கள் குடித்துக் கூத்தாடி மதுபோதையில் அந்தப் பதினான்கு பேர்களில் ஒவ்வொருவராக இடையிடையே கொலைசெய்து கடலில் வீசிக்கொண்டிருந்தனர். இவ்விதமாகப் 10 பேர்கள் கொல்லப்பட்டு வீசப்பட்டுவிட்ட நிலையில் மீதமாக கொஷிமின்னும், மிங்கும் உட்பட நால்வர் மட்டுமே மரணத்தை எதிர்நோக்கிய நிலையில் காத்திருந்தனர்.

அந்நேரம் சற்றும் எதிர்பாராத விதத்தில், தாய்லாந்து நாட்டின் கடற்படை ரோந்துக் கப்பலொன்று அங்கு விரைந்துவந்து கடற்கொள்ளையரின் படகினைச் சுற்றி வளைத்துக்கொண்டது. கடற்கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர். உயிர்தப்பிய நான்கு வியட்நாமிய இளைஞர்களும் மீட்கப்பட்டு ஏற்கனவே வியட்நாமை விட்டுத் தப்பியோடி வந்து புகலிடம் கேட்டுத் தங்கியுள்ள வியட்நாமிய அகதிகள் வாழும் தாய்லாந்து நாட்டு அகதிகள் முகாமுக்கு கொண்டு சென்று விடப்பட்டனர்.

நான்கு மாதங்கள் வரையில் கொஷிமின்னும், தமையனான மிங்கும் முகாமில் தங்கியிருந்த சமயத்தில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள அவர்களின் சிறியதந்தையாருடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டனர். விரைவில் அதற்குப் பதில் வந்தது.

அதில் இவர்கள் இருவரையும் நாட்டைவிட்டு இரகசியமாக அனுப்பியமைக்காக கொஷிமின்னின் தாய் தந்தை இருவரையும் வியட்நாம் அரசு சிறையில் அடைத்துவைத்திருப்பதாகவும் இவர்களை வெகு விரைவில் அவுஸ்திரேலியாவுக்குத் தங்களுடன் சேர்த்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது. பெற்றோரின் நிலைமை அவர்களிருவரையும் பெரிதும் வாட்டியது.

மேலும் மூன்று மாதங்கள் முகாமில் கழிந்துவிட்ட நிலையில் கொஷிமின்னும் மிங்கும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு அங்கு சென்று சிறியதந்தையாரின் குடும்பத்துடன் இணைந்து கொண்டனர்.

ஏழு மாதங்களும் 13 நாட்களும் கழிந்தபின்னர் அன்றுதான் அவர்களிருவரும் சற்று நிம்மதியாகத் தூங்கினார்கள். சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு.

**தமிழில் - ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழமாகப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**க**ண்களே மனத்தின் சாளரங்கள்: எனவே உங்கள் கண்களிலிருந்து பிறர் கண்கள் மூலம் - அவர்கள் மனத்திற்குள் காந்தக் கவர்ச்சியுடன் சிந்தனைகளை உருவாக்க, கண் தொடர்பே சிறந்த வழி என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

மனோதத்துவ ரீதியாகச் சிந்தனைகள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பாயும்போது அதை 'டெலிபதி' என்று அழைப்பார்கள். ஆனால் கண்மொழி, உடல் அளவிலும் மனத்தளவிலும் டெலிபதியை விட மேலான, நிஜமான, தேக ரீதியான தொடர்பு. குரலுக்குப் பதிலாக கண்கள் இங்கு பேசுகின்றன.

கண்மொழி உடம்பு சம்பந்தப்பட்டது. மனம் சம்பந்தப்பட்டது. உணர்ச்சிகளால் தூண்டி விடக் கூடியது.

கண்ணாடிக்கு முன், கண்மொழியையும் கற்றுக் கொள்ளலாம். உங்கள் கண்களின் நிஜமான பாவம், உங்கள் சிந்தனைகளை அடுத்த நபருக்குப் பிரதிபலிக்கிறதா என்பதைக் கண்ணாடிப் பயிற்சி உங்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

கண்மொழியைக் கீழ்க் கண்டவாறு கற்கலாம்.

1. கண்ணாடிக்கு முன் நில்லுங்கள். உங்கள் கண்களை நேரடியாக ஆழமாகப் பாருங்கள் - கண்ணாடிக்குள் 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று தீவிரமாக யோசியுங்கள். (கண்ணாடியில் உங்கள் உருவமே தெரிந்தாலும் அது இன்னொரு நபர் என்றும் அவருக்கு இந்தத் தகவலை நீங்கள் வெளிப்படுத்துவதாகவும் தோற்றம் உண்டாக்கிக் கொள்ளுங்கள்)

2. 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று தீவிரமாக உங்கள் கண்கள்வழி யோசியுங்கள். உங்கள் உருவத்தை இன்னொரு நபராக உருவகப்படுத்தி அவருக்கு இந்தத் தகவலைக் கண்ணால் அறிவுறுத்துங்கள்.

3. உங்களால் பேச முடியாது என்று பாவித்துக் கொள்ளுங்கள். (நீங்கள் பேசுவது பிறருக்குக் கேட்கக் கூடாது என்று நினைத்துக் கொள்ளுங்கள்.) கண்களால் மட்டும் தீவிரமாக உண்மையைப் பிறர் நம்பும் வண்ணம் 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று உணர்த்த முயலுங்கள்.

4. கண்ணாடியில் உங்கள் பிம்பத்திற்கு எதிரில் 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று கண் மொழியில் கூறிய வண்ணம் இருங்கள். (உங்களை நீங்கள் இன்னொரு நபராகப் பாவிக்கிறீர்கள். அவருக்குக் கண் மூலம் உணர்த்த முயலும் செய்தி (நான் உன்னை விரும்புகிறேன்) உங்கள் கண் மொழி தெளிவாக உணர்த்தப்படுகிறது என்று உங்களுக்குத் தோன்றும் வரை பயிற்சியைக் கைவிடாதீர்கள்.

5. கண்மொழி என்ற தனிப்பட்ட காந்த சக்தியின் மூலம் நீங்கள் பிறரைக் கவர்வதற்குப் பத்து தனிப்பட்ட வித்தியாசமான வாக்கியங்களை (நான் உன்னை விருப்புகிறேன் ரீதியில்) சொல்லிப் பாருங்கள்.

6. இந்த பத்து வித்தியாசமான 'கண் உரைகளை' உங்கள் கண்ணாடி முன் சொல்லிப் பாருங்கள். உங்கள் கண்கள் இந்த வாக்கியங்களைத் தானாகவே பேசத் தொடங்கும். உங்களால் இது முடியும் என்று நம்புங்கள். பேசும்வார்த்தைகளின் காந்தசக்தியை உறுதிப்படுத்த எல்லா வெற்றி பெற்ற மனிதர்களுமே கண்மொழியை தினந்தோறும் அதிகப்படி பயன்படுத்தித் தனிப்பட்ட காந்தசக்தியை ஒளிபரப்புகிறார்கள்.

7. கண்மொழியைப் பயன்படுத்த, நீங்கள் கண்ணாடி முன்நின்று பெற்ற பயிற்சி போதும் என்ற நிலை ஏற்பட்டதும், அதை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். முதலில் எதிரில் இருப்பவரின் கண்களுக்குள் நேரடியாக ஆழமாகப் பார்க்கும் கண் தொடர்பை உருவாக்குங்கள். பிறகு கண்மொழியின் மூலம் பேசத் தொடங்குங்கள். வெவ்வேறு தொலைவுகளில் பரீட்சை செய்யுங்கள். உங்கள் காந்த சக்தியின் செயல்பாடு எவ்வளவு தூரம் பலிக்கிறது என்று பாருங்கள்.

கண் தொடர்பு மூலம் மக்களைக் கவர்கின்ற சக்தி - புதிய மந்திரத் தன்மை வாய்ந்த சக்தி - உங்களுக்குள் இருப்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.

தனிப்பட்ட காந்த சக்தியின் அநேக வளமூட்டும் வழிகளில் இது ஒன்றுதான்.

தங்கள்வாய்களின் துணை கொண்டுதான் சிரிக்க முடியும் என்று பலர் தவறாக நினைக்கிறார்கள்.

வாயினால் சிரிப்பது சிரிப்பின் கடைசிப் பகுதி மட்டும்தான் - அதுவும் எப்பொழுதாவதுதான்.

***நிஜமாகவே காந்த சக்தி படைத்தவர்கள் நேசமான நகைச்சுவை உணர்வுடன் சதாகண்களால் சிரித்த வண்ணம் இருக்கிறார்கள் - வாய்களால் எப்பொழுதாவதுதான் சிரிக்கிறார்கள்.***

இந்த அத்தியாயப் பாடம் மிகச் சுலபமான, மிகப் பயன் தரும் தனிப்பட்ட காந்த சக்தி உத்திகளில் ஒன்றான கண்களால் சிரிப்பது பற்றி ஆகும்.

உதட்டினால், வாயினால் சிரிக்க ஆரம்பித்துப் பாருங்கள். அது ஒரு மேம்போக்கான போலியான தோற்றத்தைக் உங்களுக்குத் தரும். கண்ணாடி முன் நின்று அப்படி முயற்சித்துப் பாருங்கள். பிறர் உங்களைக் காண்பது போல் நீங்களே உங்களைப் பாருங்கள். அதன் பிறகு ஒரு பொழுதும் உதடுகள், வாய்த்துணை கொண்டு நீங்கள் சிரிக்கத் தொடங்க மாட்டீர்கள்.

உதடுகளை ஒரு கோணத்தில் நிறுத்துவதால் அல்ல. உண்மையான நேர்மையான (சிரிப்பின் ஆரம்பம்) புன்னகை உங்களுக்குள் உருவாகிறது.

முகத்தில் நேர்மையாக வெளிப்படுத்துவதற்கு முன்னால், நீங்கள் புன்னகையை உங்களுக்குள் உணர வேண்டும். புன்னகையைத் தொடங்கி உணர்த்த முற்படுத்தும் வேளையில் உங்கள் கண்களால் புன்னகைக்க வேண்டும் என்று ஆளுமை நிபுணர்கள் சொல்கிறார்கள்.


இது தனிப்பட்ட காந்த சக்தியின் விதியாகும். கண்களால் புன்முறுவல் செய்யுங்கள்.

கண்ணாடி முன் பரீட்சித்துப் பாருங்கள் - உங்களையே நீங்கள் புதுவிதமாக, காந்த சக்தியுடன் கூடியவராகப் பார்ப்பீர்கள்.

முதலில் நல்ல எண்ணம், நல்ல நகைச்சுவை கூடிய கண்ணோட்டத்தைத் தொடர்ந்து உண்டாக்கிக் கொள்ளுங்கள் - தனிப்பட்ட காந்த சக்தி இந்த இரண்டு குணாதிசயங்களின் தொடர்ந்த வெளிப்பாட்டையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நல்ல எண்ணம், நல்ல நகைச்சுவை உங்கள் கண்ணோட்டத்தில் தொடர்ந்து இடம்பெறுவதால் உங்கள் நல்ல எண்ணம், நல்ல நகைச்சுவை இவற்றை வெளிப்படுத்த நீங்கள் புன்னகை புரியுமாறு உணர்வதும் இயற்கையாக அமைகிறது.

உங்கள் புன்னகையை இயற்கையாய் தொடங்குங்கள் - உங்கள் கண்களால் புன்னகையுங்கள் - உங்கள் கண்களில் நகைச்சுவையுடன் கூடிய ஒளிர்வை உள்ளதாக உணருங்கள். அந்த ஒளிர்வதைத் தீவிரப்படுத்தும் போது உங்கள் கண்கள் சிரிக்கத் தொடங்கும்.



கண்களால் சிரிப்பது என்பது என்னவோ நான் புதிதாகக் கண்டுபிடிக்கிற விடயம் அன்று. தகுதி வாய்ந்த ஆளுமைபயிற்சியாளர்கள், வெற்றி ஆலோசகர்கள், நாடகப் பயிற்சி பள்ளிகள் - இவர்கள் வருடக் கணக்கான இந்தத் துறையில் பயிற்சி அளித்து வருகிறார்கள்.

முதலில் உங்கள் உள்ளுக்குள்ளிருந்து, பிறகு உங்கள் கண்கள் வழியாக நீங்கள் சிரிக்க ஆரம்பிக்க ஓர் அடிப்படையான மனோதத்துவ காரணம் இருக்கிறது. மனோதத்துவ ரீதியாக நீங்கள் பிரக்ஞை பூர்வமாக ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்த முயலும் போது (நீங்கள் நடிகராகவோ, நடிகையாகவோ பல வருஷங்கள் தொழில் முறைப்பயிற்சி பெற்றிருந்தால் ஒழிய) நீங்கள் சுய உணர்வுடையவராக இருக்கிறீர்கள்.

நீங்கள் சுயஉணர்வுடையவராக இருக்கும் போது எளிமையான உணர்ச்சியான புன்னகையை உணர்த்திக் காட்டக் கூட, நீங்கள் செயற்கையாய் உதடுகளை வளைத்தாலோ அல்லது பற்களை வெளியே தெரியும்படி காட்டினாலோ மட்டமாகக் காட்சி அளிப்பீர்கள்.

சுய உணர்வுமிக்க, உதடு வளைக்கும் வெளிப்பாட்டை நீங்கள் தவிர்க்க வேண்டும். அதாவது உங்கள் உதடுகளைப் பற்றி நீங்கள் துளி கூட நினைக்கக் கூடாது.

முகத்தில் காட்டும் உணர்ச்சி வெளிப்பாட்டைப் பற்றியும் நினைக்கக் கூடாது. புன்னகை புரிய வேண்டும் என்று உள்ளுக்குள் உணர்கிறீர்கள். அந்த இனிய உணர்வை இயற்கையாக உங்கள் கண்கள் வழியாக வெளிப்படுத்துகிறீர்கள்.

இதுதான் அப்பொழுது நடக்கிறது. (உங்கள் கண்ணாடி முன் இதை நீங்கள் சோதிக்கலாம்.) புன்னகை புரியவேண்டும் என்று உங்களுக்குள் உணர்ந்து, அந்த இனிய உணர்வை உங்கள் கண்களில் தோன்றும் நல்ல நகைச்சுவையுடன் கூடிய நீங்கள் வெளிப்படுத்தத் தொடங்கும் போது, உங்கள் முழு முக வெளிப்பாடும் சுபாவமான முறையில் மாறுகிறது - உங்கள் பிரக்ஞை பூர்வமான முயற்சி எதுவும் இல்லாமலே.

உங்கள் கண்களைச் சுற்றி 'சிரிப்பு வரிகள்' தன்னிச்சையாகச் சுருங்குகின்றன. உங்கள் கண்களில் பிரகாசம் அதிகமாகிறது - அவை கவர்ச்சி கூடப் பெற்று பார்வை சுவாரஸ்யம் பெறுகிறது. உங்கள் உதடுகள் தளர்கின்றன. உங்கள் வாயின் முனைப் பகுதி மேல் நோக்குகின்றன. உங்கள் தாடைகள் மேல் நோக்குகின்றன., உங்கள் முகபாவமே மேல் நோக்கி நிற்கிறது. சில விநாடிகளில் - சுய உணர்வுடன் கூடிய அழுத்தம் எதுவுமின்றி - உங்கள் முகபாவம் இயற்கையாக இனிமையாக, பிரகாசமாக, நல்ல நகைச்சுவையுடன் கூடியதாக அமைகிறது.

இந்த நல்ல நகைச்சுவையுடன் கூடி, புன்னகை புரியும் கண்களின் உணர்ச்சி வெளிப்பாடு, அநேக நேரங்களில் பொதுவாக விரும்பப்படுகிறது. தேவையானதாக அமைகிறது.

ஆனால் உங்களுக்குத் தேவை என்று தோன்றினால் சூழ்நிலைக்குத் தேவைப்பட்டால் பெரிய அகலமான, நட்புணர்வுடன் கூடிய புன்னகையைப் பரவ விடுங்கள். ஆனால் உதடுகளைப் பிரித்தால், பற்களை விரித்தால் பெரிய முழு புன்னகையை நீங்கள் வெளிப்படுத்தி விட வேண்டும். ஏனென்றால், புன்னகை புரிய உதடுகளைப் பிரித்து விட்டு அரையும் குறையுமாகச் சிரித்தால் அது சுய உணர்வு மிக்க மழுப்பலான அசட்டுச் சிரிப்பாய் விடும்.

மிகுந்த பாதுகாப்பான சிறப்பான வழி, தொடர்ந்த நல்லெண்ணம், நல்லநகைச்சுவை கூடியகண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வதுதான். அப்பொழுது உங்கள் சிரிப்பு, சிரிக்க வேண்டுமென்ற உள் உணர்ச்சியிலிருந்து இயற்கையாகத் தொடங்கும்.

பிறகு கண்களால் சிரியுங்கள். அங்கிருந்து இயற்கை அதன் வழி நடக்கட்டும்.

பல நூற்றாண்டுகளாக உலகின் மகத்தான சிந்தனையாளர்கள் ஒரு மனிதன் எப்படிச் சிரிக்கிறான் என்பதை முக்கியமாக கவனித்து வந்திருக்கிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் பத்திரிகை ஆசிரியராக, எழுத்தாளராக இருந்த கிறிஸ்டியன் நெஸ்டல் போலீ எழுதினார்.

'ஒருவன் எப்படிச் சிரிக்கிறான் என்பதை வைத்து அவனது குணாதிசயத்தைக் கண்டுபிடிக்கலாம். சில மனிதர்கள் ஒருபொழுதும் சிரிப்பதில்லை; அவர்கள் பல்லை மட்டும் காட்டுகிறார்கள்.'

அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த மதவாதியான ஜான்காஸ்பர் லவாடர் சொன்னார்:

'சிடுமூஞ்சித்தனத்தை விட வேண்டா வெறுப்பான புன்னகை அருவருக்கத் தக்கது'.

தனிப்பட்ட காந்த சக்தி, கவர்ச்சிகரமான புன்னகையைத் தேவையாக்குகிறது; ஏனென்றால் காந்த சக்தி என்பதே - பிறரைக் கவரும் சக்திதான்.

உங்கள் காந்த சக்தி வாய்ந்த கவர்ச்சிகரமான சிரிப்போடு குரலுக்கும் காந்த சக்தி தரும், கவர்ச்சி தரும் விஷயத்தைக் கண்டு பிடிப்போம்.


***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தள்ளாடும் வயதிலும் உடற்பயிற்சி

பிரித்தானியாவைச் சேர்ந்த 93 வயதான முதியவர் ஒருவர் தற்போதும் ஜிம்மிற்கு சென்று உடற்பயிற்சி மேற்கொள்ளுகின்றாராம்.

தமது உடல் எடையையே தாங்கிக்கொண்டு எழுந்து நடக்க சிரமப்படும் இந்த தள்ளாடும் வயதிலும் உடற்பயிற்சி செய்து திடகாத்திரமாக வாழத் துடிக்கும் இந்த முதியவரின் செயல் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.







# சாதனை என்றால் எதையும் செய்யலாம்!

இரண்டு நபர்களே இருந்து பயணம் செய்யக்கூடிய சிறியவகை கார் ஒன்றினுள் 18 பேர் அமர்ந்து உலக சாதனை படைத்துள்ளார்கள்.

இச்சாதனையில் பங்குபற்றியவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவின் Climb Fit குழுவிவைச் சேர்ந்தவர்களாவர்.






# இப்படியும் ஓவியங்களை உருவாக்க முடியுமா?





ஜேர்மனைச் சேர்ந்த 47 வயதான ரெயினர் டாட்ஹான் எனும் கலைஞர் ஒலி அலைகளைப் பயன்படுத்தி வித்தியாசமான முறையில் ஓவியங்களை உருவாக்கி அசத்தியுள்ளார்.

பலவகையான பரிசோதனைகளுக்குப் பின்னர் சொனிக் ஆரட் (Sonic Art) எனும் முறையில் இந்த ஓவியங்களை உருவாக்கிய அவர் இதற்காக கணினி மற்றும் விசேட மென்பொருட்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# முதன்முறையாக அரிய விண்வெளி புகைப்படங்கள் ஏலம்

.விண்வெளி ஆராய்ச்சியின் ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட 4,500 புகைப்படங்களே இவ்வாறு ஏலத்திற்கு வருகின்றன. இந்த புகைப்படங்களை ஐரோப்பியாவைச் சேர்ந்த புகைப்பட சேகரிப்பாளர் விற்பனைக்கு வைக்க உள்ளார்.

நிலவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், வேறு சில அரிய விண்வெளி புகைப்படங்களும் இந்த ஏலத்தில் இடம்பெறவுள்ளன.









# இப்படி ஒரு பூந்தோட்டத்தை பார்த்ததுண்டா?





இத்தாலியின் ரோஸான்னோ நகரில் அமைந்துள்ள சொப்பிங் சென்டர் ஒன்றில் வினோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள பூந்தோட்டமானது உலக சாதனையையும் படைத்துள்ளது.

வழமைக்கு மாறாக அங்குள்ள சுவர்களிற்கு செங்குத்தாகப் இப்பூந்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது தரைக்குச் சமாந்தரமாக காணப்படும் இப்பூந்தோட்டமானது 1,263 சதுர மீட்டரில் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 44,000 வகையான பூ மரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா விமர்சனம்



## யாருக்குத் தெரியும்

ஜெயப்பிரகாஷின் மருமகன் நடத்தும் தோல் தொழிற்சாலைக்குள் 6 பேர் மாட்டிக் கொள்கிறார்கள். மூடப்பட்ட ஆலைக்குள்ளிருந்து வெளிவரமுடியவில்லை. அந்த 6 பேருக்கும் தாங்கள் யார் என்பது மறந்து போயிருக்கிறது. அதாவது ஒருவித வாயுவை சுவாசித்ததால், குறைந்தகால மறதி நோயால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த 6 பேரில், 3 பேர் கொலைகாரர்கள். மற்ற மூன்று பேரை கொல்ல வந்தவர்கள். ஆனால் இப்போது, யார் கொல்ல வந்தவர், யார் கொலை செய்யப்படப்போகிறவர் என்பதை அவர்களே மறந்திருக்கிறார்கள்.

இந் நிலையில், ஜெயப்பிரகாஷின் மகள் போலீசில் புகார் கொடுக்க, போலீஸ் ஆலைக்குள் நுழைகிறது. அப்போது 6 பேருக்கும் நினைவு திரும்புகிறது. யார் எதிரி? யார் நண்பர்கள்? என்பது தெரிய ஆரம்பிக்கிறது. அவர்கள் யார்? அந்த தொழிற்சாலைக்குள் ஏன் வந்தார்கள்? நினைவு தெரிந்த பிறகு நடப்பது என்ன என்பதை திகிலுடன் சொல்கிறது மீதி கதை.

போலீஸ் இன்ஸ்பெக்டர் கலாபவன் மணி, கேட்டரிங் நடத்தும் ஹரிஸ்ராஜ், சஞ்சனா சிங், எல்லாவற்றுக்கும் மூல காரணமான சூரி, இன்ஸ்பெக்டர் தர்மா, நாற்காலியில் கட்டப்பட்டே கிடக்கும் திலீப்ராஜ் என ஆலையில் மாட்டிக் கொள்ளும் அனைவரும் தாங்கள் யார் என்று தெரியாமல் தவிப்பதும், எதிரி, அவனா இவனா என்று அலைபாய் வதிலும் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். சஞ்சானா சிங் ஆண்களுக்கு இடையில் மாட்டிய பெண்ணின் உணர்வுகளை பிரதிபலித்திருக்கிறார். ஒரே இடம், பல கேரக்டர்கள், தொடரும் வசனங்கள் என்றாலும் எதிர்பார்க்க வைக்கும் பரபப்பான திரைக்கதையால் விறுவிறுப்பாகச் செல்கிறது படம்.

தோல் தொழிற்சாலைக்குள் உள்ள திகிலை விட அதற்கு வெளியே இருக்கும் சதியும், அது தொடர்பான ஆக்ஷன் பிளாக்கும் படத்துக்கு பலம். ஒவ்வொருவரின் பிளாஷ்பேக்கை சொல்லி அவர்களை அறிமுகப்படுத்தும்போது திடுக் திடுக்குகள். கலாபவன் மணி திகிலூட்டிப் பேசுவதும், திடுக்கிடும் திருப்பமாக மாறுவதும் என்று ஏகத்துக்கு பயமுறுத்துகிறார்.

கண்ணனின் ஒளிப்பதிவு பயத்தை இன்னும் அதிகப்படுத்துகிறது.

ஒரே இரவில் நடக்கும் கதை என்பதால் ஒளிப்பதிவாளரின் வேலை அதிகம். ஆனாலும் பிளாஷ்பேக் காட்சிகளையாவது நல்ல வெளிச்சத்தில் படம் பிடித்திருக்கலாம். படத்தின் கதைக் களத்துக்கும் விறுவிறுப்பிற்கும் ஏற்ப ஒளிப்பதிவாளர் இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டிருக்கலாம். திகில் படங்கள் வரிசைகட்டி நிற்கும் நேரத்தில் வித்தியாசமான கதையைத் தர முயற்சித்திருக்கிறார் இயக்குநர். ஆனால் பயமுறுத்துவதிலேயே கவனம் செலுத்துவதால் சினிமாவுக்கான மற்ற அம்சங்களை மறந்திருக்கிறார்.

# எதிர்ப்பு வருமா?



பிரபல சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் மிட் நைட் சில்ரன் என்கிற நாவல் திரைப்படமாக உருவாகியுள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், இந்து- முஸ்லிம் தம்பதியினரின் காதலை பிரதானப்படுத்தி இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஸ்ரேயா நாயகியாக நடித்துள்ளார். தீபா மேத்தா இயக்கியுள்ளார்.

இதற்கிடையில் இந்தியாவில் பல மாநிலங்களில் அடுத்த மாதம் இப்படத்தை திரையிட ஏற்பாடு நடந்து வருகிறமையால் நடிகை ஸ்ரேயாவுக்கு எதிர்ப்புகள் கிளம்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கோச்சடையானிலிருந்து கே.எஸ்.ரவிக்குமார் திடீர் வி



ரஜினி நடிப்பில், அவரது இரண்டாவது மகள் சவுந்தர்யா இயக்கத்தில் உருவாகி வரும் படம் கோச்சடையான். இதில் மேற்பார்வை பொறுப்பை டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் கவனித்து வந்தார். இந்நிலையில் படத்தில் ஷூட்டிங் எல்லாம் முடிந்து கிராபிக்ஸ், சவுண்ட் உள்ளிட்ட பணிகள் நடந்து வரும்நிலையில், ரவிக்குமார் திடீரென மேற்பார்வை பொறுப்பிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதில் இயக்குநர் மாதேஷ் அந்த பொறுப்பை ஏற்று இருக்கிறார்.

# அதிர்ச்சியில் அனுஷ்க



கோலிவுட்டில் அனுஷ்காவுக்கு ரசிகர்களின் எண்ணிக்கைய குறைய தொடங்கி உள்ளதாம். இதற்கு காரணம் தாண்டவம் ப அனுஷ்காவின் கதாபாத்திரமும், அவரது நடிப்பும் அவரது அபிமானத்துக்குரிய ரசிகர்களுக்கே பிடிக்கவில்லையாம். அதனால் அவரது பெருவாரியான ரசிகர்கள் தற்போது காஜல் அகர்வால், சமந்தா போன்ற நடிகைகள் பக்கம் திரும்பி விட்டனராம். இத்தகவலை சிலர் டுவிட்டர் மூலம் அனுஷ்காவுக்கே தெரியப்படுத்தி வருகிறார்களாம். இதனால் அதிர்ந்து போயுள்ள அனுஷ்கா, தனது ரசிகர்களை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியாக இரண்டாம் உலகம் படத்தில் வித்தியாசமான இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறேன். அது உங்களது எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் என்று டுவிட்டர் மூலம் ரசிகர்களுக்கு தெரிவித்தி ருக்கிறாராம்.

## காஜலின் அதிர்ஷ்ட சின்னம் கார்த்தி...



தமிழ் சினிமாவின் தற்போதைய கலக்கல் ஜோடி என பெயரெடுத்துள்ளவர்கள் கார்த்தி - காஜல் அகர்வால். 'நான் மகான் அல்ல' திரைப்படத்தின் மூலம் ரசிகர்கள் மனங்களில் இடம்பிடித்த இந்த ஜோடியை வைத்து பல விளம்பரப் படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. ராஜேஷின் புதிய திரைப்படமாக 'ஆல் இன் ஆள் அழகுராஜா' திரைப்படத்திற்கும் இவர்களிருவரையே ஜோடியாக தெரிவுசெய்துள்ளனர்.



## கார்த்தியுடன் ஜோடி சேரும் லண்டன் நடிகை

வெங்கட்பிரபு இயக்கும் படம் 'பிரியாணி' கார்த்தி ஹீரோ. இப்படத்தின் டெஸ்ட் ஷூட்டை இயக்குநர் நடத்த, சக்தி சரவணன் ஒளிப்பதிவு செய்தார். இது பற்றி பட யூனிட்டார் கூறும்போது, இப்படத்தில் தமிழ் ஹீரோயின்களை நடிக்க வைக்க எண்ணினார். அது கைகூடவில்லை. இந்நிலையில் இங்கிலாந்தை சேர்ந்த மேண்டி தக்ஹர் என்ற நடிகையை ஒப்பந்தம் செய்துள்ளார் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்குநர் ராஜசேகர் இயக்கும் படம் 'யா யா'. நகைச்சுவையுடன் கூடிய காதல் கதையாக இது உருவாகிறது. 'யா யா' என்றால் ஆங்கிலப் பெயரா என்கிறார்கள். இது ஆங்கிலப் பெயர் இல்லை. தமிழ்ப் பெயர்தான். இதற்கு அர்த்தம் இருக்கிறது. படத்தில் வரும் ஹீரோ, ஹீரோயின் பெயர்களை இணைத்து இந்த பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. சென்னை, திருச்சி, கும்பகோணம் பகுதிகளில் ஷூட்டிங் நடக்கிறது. பாடல் காட்சிகள் மலேசியா, ஹொங்காங்கில் படமாக உள்ளது என்கிறார் இயக்குநர் ராஜசேகர்

## 'யா யா' வில் ரம்யா நம்பீசன்




## ஸ்கைஃபோல்

ஜேம்ஸ்பாண்ட் வேலை பார்க்கும் உளவுத்துறை அமைப்பில் மேலதிகாரியாக வேலைபார்க்கிறார் ஒரு வயதான பெண்மணி. அவரைப் போட்டுத் தள்ளவேண்டும் என்று அலைகிறது வில்லன் கோஷ்டி.

அவர்களிடம் இருந்து அந்தப் பெண்மணியை ஜேம்ஸ்பாண்ட் காப்பற்றினாரா என்பதை பரபரப்பான திரைக்கதையுடன் சொல்லி முடிக்கிறது SKYFALL.

படம் ஓப்பனிங்கிலேயே ஜேம்ஸ்பாண்ட் வரும் காட்சியில் மெல்ல வாசல் வெளிச்சத்தில் நிழல் தெரிவதும் மெல்ல மெல்ல உருவம் தெரிவதுமான காட்சியில் இருந்தே ஜேம்ஸ்பாண்டின் அதிரடியான ஆட்டம் ஆரம்பித்துவிடுகிறது. அடுத்து கார் சேஸிங் காட்சி, வில்லன் ஒருவனைப் பிடிக்க ரெயிலிலேயே புல்டோசர் பயன்படுத்துவது எல்லாம் செமகலக்கலான சீன்கள்.

ஜேம்ஸ்பாண்டுடன் வேலை பார்க்கும் பெண் சுடும் போது ஜேம்ஸ்பாண்ட் மீது குண்டு பாய்ந்து அவர் பொத்தென ரெயிலில் இருந்து ஆற்றுக்குள் விழும் காட்சியில் படம் பார்க்கும் ஒவ்வொரு ரசிகனையும் சீட்டின் நுனிக்கே வரவைத்துவிடுகிறார் இயக்குநர். ஜேம்ஸ்பாண்ட் சுடப்பட்டு விழுந்ததும் படத்தில் வரும் சில விநாடி அமைதியில் தியேட்டரும் ஜேம்ஸ்பாண்டுக்காக உச் கொட்டுகிறது.

தேளைக் கையில் வைத்துக் கொண்டு குடிக்கும் காட்சியில் நமக்கும் கொஞ்சம் திக் திக் என்றுதான் இருக்கிறது. ரயில் வரும் பாதையில் வெடி வெடிப்பதால் உருவான ஓட்டை வழியாக ரயில் பாதாளம் உள்ளே வந்து விழும் காட்சி, ரயில் மீது ஓடி வந்து ஜேம்ஸ்பாண்ட் ஏறும் காட்சிகள் என்பன பிரமிக்க வைக்கும் காட்சிகள்.

கேரக்டர்கள் பேசும் இடங்களில் இசை இல்லாமல் இருப்பது கூட எவ்வளவு அழகாக இருக்கிறது. ஜேம்ஸ்பாண்ட் SKYFALL செல்ல காரில் வரும் போது வரும் இசை செமசூப்பர்&

ஜேம்ஸ்பாண்டாக நடித்திருக்கும் டேனியல் கிரக் செமயாக நம்மை இம்ப்ரஸ் பண்ணுகிறார். ஜேம்ஸ்பாண்ட் வரும் காட்சிகளில் எல்லாம் ஒலிக்கும் ரசிகர்களின் கைத்தட்டல் கடைசியில் ஜேம்ஸ்பாண்ட் லோகோ போடும் வரை கொஞ்சமும் குறையாமல் இருக்கிறது.

சென்ற வாரத்திலேயே பல நாடுகளிலும் ரிலீசான ஜேம்ஸ்பாண்ட் 007 SKYFALL இதுவரை வெளியான ஜேம்ஸ்பாண்ட் படங்களின் வசூலை முறியடித்துவிட்டது.

## அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் அஜீத்...!



'பில்லா-2' படத்திற்கு பிறகு அஜீத், விஷ்ணுவர்தன் இயக்கத்தில் ஒருபடத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் அஜீத் ஒரு காரில் இருந்து மற்றொரு காருக்கு தாவுவது போன்று ஒரு காட்சி. இந்தக்காட்சியில் தானே நடிப்பதாக அஜீத் கூறியுள்ளார். இதனையடுத்து அந்தக்காட்சியை படமாக்கியபோது, அஜீத் ஒரு காரில் இருந்து இன்னொரு காருக்கு தாவும்போது எதிர்பாரா விதமாக சிலிப்பாகி விழுந்துவிட்டார். இதில் அஜீத்துக்கு வலது காலில் அடிப்பட்டது. நல்லவேளையாக சிறு காயங்களுடன் அவர் உயிர்தப்பினார்.

## கவர்ச்சியில் கலக்கும் ஹன்சிகா



சினிமாவுக்கு வந்த நேரத்தில் இந்த பூனையும் பால் குடிக்குமா? என்பது போல்தான் ஸ்பொட்டில் பச்சை புள்ளையாட்டம் அமர்ந்திருப்பார் ஹன்சிகா. இப்போது தன்னைச் சுற்றி போட்டு வைத்திருந்த வட்டத்தை உடைத்துவிட்டு வெளியேறி அதிரடி கவர்ச்சி நடிகையாக உருவெடுத்து நிற்கிறாராம். இதனால் ஏற்கனவே தெலுங்கு சினிமாவில் மையம் கொண்டுள்ள ஏனைய கவர்ச்சி கதாநாயகிகளெல் லாம் ஹன்சிகாவின் அதிரடி பிரவேசத் துக்கு முன்னால், நாமெல்லாம் காணாமல் போய் விடுவோமோ என்று கதிகலங்கிப்போய் நிற்கிறார்களாம்.

## விக்ரம், ஜீவா நடிக்கும் 'டேவிட்' ரீலிஸ் தள்ளிவைப்பு



விஜய் நம்பியார் இயக்கத்தில் விக்ரம் மற்றும் ஜீவா நடிக்கும் படம் 'டேவிட்'. தமிழ் மற்றும் இந்தியில் ஒரே நேரத்தில் உருவாகும் இந்தப் படத்தை தெலுங்கிலும் டப் செய்து வெளியிடுகிறார்கள். விக்ரம் மீனவராகவும், ஜீவா இசைக்கலைஞராகவும் நடிக்கும் இந்தப் படம் பொங்கல் பரிசாக திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது 'டேவிட்' ரிலீசை பெப்ரவரி மாதத்திற்கு தள்ளி வைத்துள்ளனர்.

## செல்போனை தவறவிட்ட 6 அடி உயர மோகினி!



'யமுனா' படத்தின் ஓடியோ வெளியீட்டிற்காக வந்திருந்த நடிகை நமீதா, மேடை ஏறி மைக்கைப் பிடித்ததும், கூடியிருந்த ரசிகர்கள் கூட்டம் மச்சான்ஸ், மச்சான்ஸ்... என்றது., ஓ.... என ஆர்ப்பரித்த கூட்டத்தைப் பார்த்து ஐ லவ் யூ மச்சான்களே... என்று ஸ்வீட் கிஸ் எல்லாம் கொடுத்த நமீதா, நீண்டநாட்களுக்குப் பின் மச்சான்களை அதான் ரசிகர்களை பார்த்த உற்சாகத்தில் தன் விலையுர்ந்த செல்போனை மைக் மேடை அருகேயே விட்டு சென்றுவிட்டார். நிகழ்ச்சி தொகுப்பாளர் ராகவ் மகேஷ், பார்த்து எடுத்து நமீயிடம் சேர்ப்பித்தார். இந்த மேடையில்தான் நமீக்கு 6அடி உயர மோகினி எனும் பட்டமும் கொடுத்து வாழ்த்தியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடலாம் வா!

காட்டில் உள்ள மரத்தின் மேல் சேவல் ஒன்று வாழ்ந்து வந்தது. அது காட்டுவாசியானதால் கண்டதை எல்லாம் தின்று உடல் கொழுத்துத் திரிந்தது; நல்ல பலசாலியாகவும் இருந்தது. அது, கொக்கரக்கோ' என்று கத்தினால் காடே அதிரும்.

அது இருந்த மரத்தின் வழியாக தினந்தோறும் நரி ஒன்று செல்லும். போகும் போதும் வரும்போதும் எப்படியாவது இந்தக் கொழுத்த சேவலைப் பிடித்து, ஒருநாள் உணவாக்கிக் கொள்ள வேண்டும், என்று எண்ணியவாறு ஆசையுடன் சேவலைப் பார்க்கும். சேவலுக்கு நரியின் பார்வை புரிந்தது. அதனால் தனக்கு என்றேனும் ஆபத்து நேரிடலாம் என்று கருதி அது எச்சரிக்கையுடன் இருந்தது.

சேவல் அந்த மரத்தை விட்டு இறங்காத காரணத்தினால், தன் எண்ணத்தை ஈடேற்ற முடியாமல் தவித்துப் போயிற்று நரி.

இந்தச் சேவலைத் தந்திரத்தால்தான் வளைத்துப் போட்டு, தனக்கு விருந்தாக்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தது. ஆகவே, ஒருநாள் நரி அவ்வழியே வரும்போது அது மரத்தின் கீழ் அமர்ந்து சேவலிடம் பேச ஆரம்பித்தது.

"அழகிய சேவலே! உனக்கு விஷயமே தெரியாதா? இன்று நம்முடைய சிங்கராஜா ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். இன்று முதல் ஒரு வருடத்துக்கு யாரும், யாருக்கும் பகை கிடையாது. இது சமாதான ஆண்டு. எந்த விலங்குக்கும், மற்ற விலங்கால் பிரச்சினை வரக் கூடாது. பிரச்சினை வந்தால் கடும் தண்டனை தரப்படும்.

எனவே, எதிரிகளாக இருந்த விலங்குகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து விட்டன. அவை காட்டோர அருவிப் பகுதியில் நிலாவெளிச்சத்தில் ஊலல்லல்லா பாட்டுப் பாடி ஆடிக் கொண்டிருக்கின்றன. எல்லா விலங்குகளும் ஆளுக்கு ஒன்றை ஜோடி சேர்த்துக் கொண்டன. எனக்குத்தான் யாரும் இல்லை என்று நினைத்தபோது, நீ என் ஞாபகத்துக்கு வந்தாய். வா, நாமிருவரும் சேர்ந்து அருவிக் கரைக்குப் போய் மற்ற விலங்குகளுடன் சேர்ந்து ஜாலியாக இருக்கலாம்," என்றது.

நரி பேசப் பேச சேவல் அதைப் பற்றிச் சிறிதும் கவனிக்காமல் வேறு ஒரு உயர்ந்த கிளைக்குச் சென்று தலையை இங்குமங்குமாக ஆட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த நரிக்கு எரிச்சலாக இருந்தது.

"நான் எவ்வளவு இனிய செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீ என்னவென்றால் மரக்கிளைக்கு மேலே சென்று எதையோ வேடிக்கைப் பார்க்கிறாயே," என்றது.

"நரியாரே, நீங்கள் சொன்னதைக் கேட்டேன். ஆனால், அதைவிட முக்கியமான சமாசாரத்தை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன்," என்றது.

"அதை விட முக்கியமான சமாசாரமா? அது என்ன?" என்றது நரி.

"வெகு தூரத்தில் இரண்டு உருவங்கள் ஓடி வந்து கொண்டிருக்கின்றன!" என்றது சேவல்.


"அவை எப்படி இருக்கின்றன?" என்று பயத்துடன் கேட்டது நரி.

இரண்டும் நாக்கை தொங்க விட்டிருக்கின்றன. அதன் கண்கள் பளபளவென ஜொலிக்கின்றன. அங்கும், இங்கும் பார்த்து எதையோ மூக்கால் முகர்கின்றன. அதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. உங்களை விட உயரமாக இருக்கின்றன. ஆ... இப்போது கூர்மையான கோரைப் பற்களும் தெரிகின்றன. ஒருவேளை அவை ஓநாய்களோ," என்றது சேவல்.

"நாசமாப் போக, அவை ஓநாய்களில்லை. வேட்டை நாய்கள். பார்த்தால் கடித்துக் குதறி விடும்," என்று கூறியவாறு ஓட்டமெடுத்தது நரி.

நரி ஓடுவதை பார்த்து சேவல் சிரித்தது.


பூனை வீட்டுக்குச் செல்ல வழி காட்டுங்கள்







படத்தில் உள்ள 12 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்.



© Birdorable




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அம்மாவின் ஆதங்கம்!

இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும் தொலைபேசி அழைப்பையும் பொருட்படுத்தாமல், தன் தாயின் கடமையில் மூழ்கியிருந்தான் வசந்தன்.

மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்த அந்த மகராசி தன் ஒரே பெண் பிள்ளையையும். மூத்த மகனையும், கணவனையும் இழந்து விதவையாகியும் சோராது உழைத்து, அவர்கள் வெளிநாடு சென்றுவிட, தன் இளைய மகன் வசந்தனே கதியென இருந்தாள்....

இருந்தாள் என்பதைவிட் கிடந்தாள் என்பதே பொருத்தமானது... பிள்ளைகளிற்காய் உருகி... உருகி.. உடல் தேய்ந்த அத்தாய் உருக்குலைந்து நோயுற்று படுத்தபடுக்கையாகி 10 வருடங்கள். அன்றாட கடைமையில் இருந்து அன்னம் அருந்துவது வரை தன்மகன் கையே கதியெனக் காத்திருக்கும் இயலாமை...

மகன் வசந்தன் என்றால் பெயரில் மட்டும்தான் வசந்தம் தொங்குகிறதே தவிர...

கோடிஸ்வரனோ...? லட்சாதிபதியோ அல்ல... தன் கை,கால் அசைந்தாலே உணவு என்ற நிலை.

போதாக்குறைக்கு காதல் என்னும் பெயரில், எந்தவிதமான சொத்தோ... பணமோ இன்றி சொந்தத்தில் தேடிக்கொண்ட மனைவி. பேர் சொல்ல ஆண், பெண் என இரண்டு பிள்ளைச் செல்வங்கள். அவனது வருமானத்தில் அவர்களிற்குக் கொடுக்கும் உணவை விட அவர்கள்மேல் பொழியும் அன்புதான் மிகையானது.

என்னதான் அன்பைப் பொழிந்து நடந்தாலும் கடை ஊழியனான வசந்தனால் எவ்வளவைத்தான் மனைவியின் கையில்கொடுத்துவிட முடியும்? பற்றாத பணத்தைத் தரும் கணவனிடம் மனைவி அன்பைப் பொழிவதற்குப் பதிலாக வழங்கும் ஆத்திர வார்த்தைகள் தான் அதிகம்.



தாயை நினைத்து வேலைமுடிந்து ஓடிவரும் வசந்தனுக்கோ... அந்தத் தாயானவள் மலம் சலமென அளைந்து ஈமொய்க்க... தன் வரவினைப் பார்த்து தவம் கிடக்கும் அன்னையின் முகம்.. அதில் வடியும் கண்ணீர் களைப்பைப் போக்கி உற்சாகத்தைக் கொடுத்து இயந்திரம் போல் இயங்க வைக்கும்... அன்னையின் உடை அகற்றி... உடல்கழுவி... உடைமாற்றி.. வாசனை தடவி... அகற்றிய உடைகளைத் தோய்த்து உலரவைக்கும் அளவிற்கு அன்னை முகம் பலம் கொடுக்கும்...

ஆனாலும் அம்மாவின் விழிகளில் ஒழுகும் கண்ணீர் ஆயிரம் கதையை அவனுக்கு எடுத்துரைக்கும். தாயருகே அமர்ந்து அம்மா... என்பான்.

"வசந்தா... என் கண்ணே... உனக்கு ஏன்ரா இந்தக் கஸ்ரம்... மற்றப்பிள்ளைகள் சுகமாக வெளியே இருக்க... நீ மட்டும் என்னோடு..." சற்று நிறுத்திக் கதைக்க முடியாத விம்மலோடு... தொடர்ந்தாள். "நீ தனியே என்னால் படும் கஸ்ரத்தைப் பார்க்க என்னால் பொறுக்க முடியுதில்லையடா..." என விம்மினாள்.

பேரக்குழந்தைகளை அளையத்துடிக்கும் ஆசை அவள் விழிகள் தேடுவதில் தெரியும்.

இதற்கிடையில் வசந்தனின் மனைவியோ. பிள்ளைகளோ... தாயின் அறைப்பக்கம் நாடுவதே இல்லை. அது அவர்களின் ஆசாரத்தை துலக்குவதாக எண்ணம். பாவம் பிள்ளைகள் என்ன செய்யும் தாயின் கட்டளைக்குப் பணிந்து அடங்கிவிடுவார்கள்...

அதைவிட உச்சக்கட்டமான மனைவியின் அன்போ... தாயாரோடு அளையும் கணவனுக்கென தனியாக ஒதுக்கிவைக்கப்பட்ட சாப்பாட்டுக் கோப்பையோடு... தண்ணீர் தம்ளர் ஒன்று. தாயின் அழுக்கு அவனுடன் ஒட்டி விடும் என்ற அருவருப்பு.

ஐயோ பாவம்... இம்மட்டிற்கும் வாடகை வீட்டில் குடியிருந்தாலும் ஏதோ மின்வசதி இருந்தது. பற்றாத வருமானத்தில் மனைவிபோடும் உணவு தாய்பிள்ளைகளின் உடை அலங்காரவகை போக சிறுகச் சிறுக சேமித்ததன் பயன்தான் அக்குடியில் தேவையற்றுக் காணப்படும் தொலைபேசியும்... தொலைக்காட்சிப் பெட்டியும். அவளின் சிக்கனம் வசந்தனின் அன்றாட உடையில் மட்டும் நன்கு பிரதிபலிக்கும்.

தாயின் அருகே உறங்கிய வசந்தன். தம்பி... தம்பி... வசந்தா.. எனும் அனுங்கல் கேட்டு எழுந்தான் என்பதை விட, பதறியெழுந்தான் என்பதே பொருந்தும். உடையோடு சலமும் மலமுமெனக் கழித்து... தாய் அவஸ்த்தைப்படுவதைக் கண்டு பதைபதைத்து உடைமாற்ற லைற்ரைப் போட விரைந்தவன்... சற்று நிதானித்து குப்பி விளக்கினை வழமைபோல் ஏற்றினான்.

இவ்வளவிற்கும் மின்குமிழைப் போடாமைக்கும் ஓர் காரணம் உண்டு. என்ன செய்வது லைற்ரைப்போட்டால் மனைவி, மக்களின் உறக்கத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும். அதுவேறு தொல்லையென, இயன்றவரை நிம்மதி தேடும் எண்ணம் என்பதை விட ஏலாத தாய்க்கு தான் படும் மேலதிக வேதனையைக் காட்டவிரும்பாத பாசம்.

தொலைபேசி மீண்டும் [illegible]ரல் எழுப்பியது சற்றுக் களைத்து மனவாட்டத்துடன் சற்று சுவரோடு சாய்ந்த வசந்தன்... அதனை எடுத்து காதில் பொருத்தி ஹலோ [illegible] என்றான் ஈனஸ்வரமான குரலில்....

"ஹலோ... வசந்தனா..? நான் அண்ணன் கதைக்கிறேன்... அம்மா பாடு எப்படி? அக்காவும் எடுத்துக் கேட்கச் சொன்னார்". வெளிநாட்டு மக்களின் கரிசனை... பாவம் அவர்கள் தான் என்ன செய்வார்கள் தம்பி இருக்கிறான் என்னும் ஆறுதல்...

தாய்க்கென ஒவ்வொருமாதமும் மருந்துச் செலவிற்கென ஐந்தோ.. பத்தோ அளந்து அண்ணா அக்கா மாறிமாறி அனுப்புவதோடு சரி... பெற்றகடன் தீர்ந்த ஆறுதல் அவர்களிற்கு. தம்பி ... தம்பி மனைவி பிள்ளைகளின் வயிறு குளிர, பெற்றவளின் பணிவிடை மத்தியில் வசந்தன் கடையில் ஓடியோடி உழைத்தால் தான் உண்டு. அம்மாவின் சுகம் கேட்கும் உறவு மட்டும் இன்னும் ஒட்டிக்கொண்டு இருக்கும் நிலை. தொலைபேசி தொடர்கிறது. எப்படியப்பா இப்ப இருக்கின்றது...? அண்ணன் குரல். பெற்றவள் இன்றோ... நாளையோ கூட தாங்குவாளா...? எனும் நிலையில்... துயரம் தொண்டையுள் பாறையாக அடைக்க, "கஸ்ரமாகத்தான் அண்ணா இருக்கு... அக்காவிற்கும் சொல்" என்று தாயிடம் தொலைபேசியை காதருகே பொருத்தி... "அம்மா... அண்ணா கதைக்கிறார்...." என்றான்.

கதைக்கக் கூடிய நிலையை இழந்த தாய்... மகனின் குரல் கேட்டு விம்முகின்றாள்... தாய்படும் வேதனையைப் பொறுக்காது "வசந்தன் இந்தக் கடையின் பெயரை எழுதிக்கொள்" என.... ஓர் கடையின் பெயர் தரப்படுகின்றது... அம்மாவின் இறுதிச் சடங்குக்கென பணம் பெறும் இடம்.... தொலைபேசி நிறுத்தப்படுகின்றது. எழுதிய பேப்பரையும் தாயையும் மாறி மாறி பார்க்கின்றான் வசந்தன்....

தாய் முகம் தன்னையே நோக்கிச் சரிந்து வருந்துவது தெரிகின்றது.... அம்மாவிற்கு கடன் தீர்க்க பணமும் வந்துவிட்டதா...? என் அம்மா என்னை விட்டுப்போகப் போகின்றாவா...? மெல்ல எழுந்து தாயின் கட்டிலில் போய் அமர்கின்றான்... தாயின் தலையை மடிமீது எடுத்து வைத்து நெற்றியை முகத்தைத் தடவி வருடுகின்றான்... அவனுக்கு ஏதோ தாயோடு கதைக்க வேண்டுமென்ற ஆதங்கம்... கலங்கிய கண்களுடன் குனிகின்றான்....

அன்னையின் முகமும் அவனையே நோக்குகின்றது.... அம்மா.... என்னம்மா.... என்னைவிட்டுவிட்டுப் போகப்போறியா...? நீ எனக்கு சுமையென்றா... எண்ணி வருந்துகின்றாய்..? பழகப்பழக உன் சுமை எனக்கு வேணும் போல் அல்லவா அம்மா இருக்கின்றது... உன்னைப் பிரிந்து நான் நின்மதி பெறவா...? நான் உன்மடி மீது செய்யாத அசிங்கமா தாயே நீ எனக்குக் கொடுத்தாய்...? எனக் குழறினான் வசந்தன்... தாயின் விழி நீரும், மகனின் விழிநீரும் கட்டிலை நனைக்க, அந்தத் தாய் முகம் சரிய வசந்தன் நிமிர்ந்தான். தேகமே பதற தாயை அணைத்து உலுப்பியபடி... அம்மா... அம்மா... அம்மா... மகனைப் பார்த்தபடி அவன் கதையில் முகம் மலர தாயானவள் அவன்மடி மீது மீளாத்துயிலானாள். நேரமோ.. நள்ளிரவு 1.00 மணி.

அம்மா... தாயே...ஊரே அதிர கதறிய குரல்கேட்டு... மனைவி... மக்கள் பதறியடித்தெழுந்து அன்றுதான் அவள் தாயருகே வந்து நின்று ஒப்புக்கு விம்மினார்கள்... குரல்கேட்டு நிமிர்ந்த வசந்தன் தன் மனைவி மக்களை மாறிமாறிப் பார்த்தான்... பின் தாயின் உறங்கும் முகம் நோக்கி அம்மா.. உனக்கு உன் பிள்ளையாகிய என்னைப் போல் பார்க்க என் மனைவியின் பிற்காலம் நானில்லாவிடில்... என்பிள்ளைகள் பார்க்குமா..? நீ ஊட்டிய பாசம் என்னைத் தூண்டியது. ஆனால் பத்து வருடம் நான் பட்ட பாட்டைப்பார்த்து கலங்காத என் மனைவியின் மரத்த மனம் என்பிள்ளைகளைத் தொடராதா..? ஏக்கப்பெரு மூச்சுடன் தன் தாயின் இறுதிக்கடனைச் செய்வதற்கு ஆயத்தமானான். எங்கோ தொலைவில்... பட்டினத்துப் பிள்ளையார் பாடல்....

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று....."

***

**தீவகதியாகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் சுடர்



# தன்னம்பிக்கை அழகைத் தரும்

உள ரீதியாக தன்னம்பிக்கை அதிகரித்தால் பெண்களின் அழகு கூடும் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள்.

அழகு என்பது உடல் தொடர்புடையது மட்டுமல்ல, அது உள்ளம் தொடர்புடையது என்கின்றனர் வல்லுநர்கள். எங்கே தன்னம்பிக்கை அதிகரிக்கிறதோ அங்கே அழகு மிளிரும் என்பது அவர்களின் கூற்று. உள்ளத்தில் தன்னம்பிக்கை ஒளி உண்டானால் முகத்தில் பொலிவு கூடும் என்பது வல்லுநர்களின் கருத்து.

அழகாய் இருக்க வேண்டும், அழகான தோற்றம் பெற வேண்டும் என எந்தப் பெண்ணும் விரும்புவது இயற்கை. நாம் நேசிக்கும் ஒருவர் அல்லது ஒரு பொருள், அல்லது வேறு ஏதாவதாக இருக்கலாம். அது நம்மைவிட்டு போகும் போது, அல்லது இல்லாமல் போகும் போது, நாம் அதற்காக ஏங்கும் நிலை ஏற்படலாம். ஆனால் நாம் எதை இழந்தாலும் அழகு எப்போதும் நம்மைவிட்டு அகல்வதேயில்லை. அது எப்போதும் நம்மிடமே உள்ளது. ஆனால், நமக்குத்தான் வயதாகிவிட்டதே என எண்ணி அழகை நாம் பேணாத காரணத்தால் தான் அழகிழந்தவர்களாக நாம் நம்மைகருதுகிறோம்.

இழந்த அழகைப் பெற நாம் முதலில் நம்மீது நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும். நாம் அழகானவர், இனிமையானவர் என எண்ணிக் கொள்வது அழகின் முதல் படியாகும். இது போன்ற மெல்லிய உணர்வுகள் கூட நமது முகத்தை அழகுபடுத்தும்.

உணர்வுகள் மட்டுமல்ல, நல்ல ஆரோக்கியமான வாழ்க்கைமுறை கூட அழகாய் இருப்பதற்கு தேவைப்படுகிறது. அழகான மென் உணர்வுகளைப் பெற நல்ல தேக ஆரோக்கியம் மிக அவசியமாகும். நல்ல ஆரோக்கியம் என்பது திடகாத்திரமாக சுறுசுறுப்பானவர்களாக இயங்குவதேயாகும். சுறுசுறுப்பு நல்ல சத்தான உணவை உட்கொள்வதன் மூலமே பெறமுடியும். நல்ல ஆரோக்கியத்தைப் பெற முதலில் மன அமைதியைத் தேடிக்கொள்ளுங்கள்.

அமைதியில்லாத உள்ளத்தில் அழகான மென்மையான எண்ணங்களுக்கிடமில்லை. எந்தப் பிரச்சினையையும் உங்களால் எதிர்த்துப் போராட முடியும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அச்சம் விலகும் அந்த மனத்தைரியத்தில் ஒரு அமைதி மனதில் ஏற்படுவதை உங்களால் அறிந்துகொள்ள முடியும்.

மன அமைதி ஏற்படும் போது மிகுந்த நிதானத்துடன் அன்றாட வேலைகளை திருப்தியுடன் செய்து முடிக்க முடியும். அமைதியாக உறங்கவும் சாப்பிடவும், நண்பர்கள் உறவினர்களுடன் இனிமையாக பழகவும் முடியும்.

நல்ல நினைவுகள் இல்லாமல் போகும். பட்சத்தில் அழகாக இருக்கிறோம் என்ற நினைப்பிற்கே இடமில்லை.

பிரச்சினைகள் மனதை பாதித்து விடுவது இயற்கையே. பிரச்சினைகள் சகலருக்கும் உண்டு. பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அது அவசியமானது. பிரச்சினைகளுடன் வாழ்வது அதைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது உடலை மிகவும் பாதித்து விடும். மன இறுக்கத்தை ஏற்படுத்தி விடும்.

எனவே பிரச்சினைகளை மனதில் போட்டுக் குழப்பிக் கொண்டிராமல் அதனையிட்டு நெருங்கிய நண்பர்களுடன், அல்லது உங்களுக்கு மிக வேண்டியவர்களுடன் அப்பிரச்சினையையிட்டு மனம் திறந்து பேச வேண்டும். பிரச்சினை இருக்கிறதே என்று விட்டு விடாமல் மனத்தெளிவுடன் ஏனைய வீட்டு வேலைகளை மேற்கொள்ளலாம்.

அல்லது ஏதவாது கீர்த்தனைகள், சுலோகங்கள் தெரிந்திருந்தால் அவைகளை கொஞ்சம் சப்தத்துடன் பாடலாம். இதனால் மனம் இலேசாகும். இதனால் பிரச்சினைகள் மறக்கப்பட்டு மனப்பாரம் குறைந்து சாந்தமடைகிறது. முயற்சி செய்து பாருங்கள்.



# மனைவியின் எதிர்பார்ப்புக்கள்!

- அன்பாக , பிரியமாக இருக்க வேண்டும்.
- மனம் புண்படும்படி பேசக் கூடாது.
- கோபப்படக்கூடாது.
- சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது
- பலர் முன் திட்டக்கூடாது.
- எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்கக் கூடாது.
- முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
- மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
- சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்
- மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
- வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வெண்டும். பாராட்ட வேண்டும்.
- பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
- வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேசவேண்டும்.
- மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
- ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
- பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
- ஒளிவு மறைவு கூடாது.
- மனைவியை நம்ப வேண்டும்.
- முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
- மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பாராட்டக் கூடாது.
- அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்பட வேண்டும்.
- தனக்கு இருக்கும் கஸ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
- உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
- சின்னச் சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
- சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
- அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும். ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
- நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
- சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
- எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டுச் சொல்ல வேண்டும்.
- சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
- எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
- மனைவியின் பிறந்த நாளை நினைவில் வைத்திருக்க வேண்டும்.
- மனைவிக்குப் பிடித்தவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
- மனைவி வீட்டாரைக் குறை சொல்லக் கூடாது.
- கைச் செலவுக்கு மனைவியிடம் பணம் கொடுக்க வேண்டும்

# பாசிப்பருப்பு இட்டலி



பாசிப்பருப்பில்

அதிக அளவு நார்ச்சத்து, கல்சியம், புரோட்டீன், விட்டமின் சி, மக்னீசியம், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய சத்துக்கள் அதிக அளவில் இருக்கின்றன. இந்த பாசிப்பருப்பு இட்டலி மிகவும் சத்து நிறைந்தது.

**தேவையான பொருட்கள்..**

பாசிப்பருப்பு - 2 கப். உளுந்து - 1 கை. உப்பு - தேவையான அளவு.

**செய்முறை...**

பாசிப்பருப்பு, உளுந்தை 2 மணி நேரம் ஊற வைத்து இட்டலி மாவு பதத்திற்கு அரைத்துக் கொள்ளவும். மாவில் தேவையான அளவு உப்பு சேரத்து கலந்து 6 முதல் 7 மணி நேரம் மாவினை புளிக்க விடவும். மாவு புளித்தவுடன் இட்லி தட்டில் ஊற்றி 8 முதல் 10 நிமிடம் வேக வைத்து எடுக்கவும்.

**குறிப்பு:**

தேவைப்பட்டால் 1 கப் இட்டலி அரிசியை ஊற வைத்து அரைத்து கொண்டு மாவுடன் சேரத்து புளிக்கவிட்டு இட்டலிகளாக சுடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. கலைச்செல்வி. பருத்தித்துறை

**கேள்வி :** பெண் வயது 35. உடல் நிறை 90கி.கி வரை உள்ளது. அதிகம் சாப்பிடுவதும் இல்லை. நான் அவசரமாக தொழில் செல்வதால் காலை உணவு உட்கொள்வதே இல்லை. இருந்தும் உடல் எடை அதிகரிப்பது ஏன்?


**பதில் :** பலருக்கு பயன்தரக்கூடிய கேள்வி இது. பலர் நகர வாழ்க்கையின் அவசரயுகத்தில் காலைச்சாப்பாடு உட்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. காலையில் குழந்தைகளை பாடசாலைக்குத் தயார் செய்யவேண்டும். கணவனுக்கு உணவு கொடுக்கவேண்டும். மனைவியும் வேலைக்குச் செல்ல வேண்டும். எனவே, பெண்கள் அதுவும் தொழிலுக்கு செல்பவர்கள் காலை உணவை தவிர்ப்பது வழமையாக நடக்கும் ஒரு விஷயம் தான். இதுபோலவே விரதம் இருப்பவர்களும் கூட தாம் காலை விரதம் அனுஷ்டிப்பதால் மூன்று வேளை உணவு முற்றாக கைவிடப்படுகிறதுதானே. அதனால் உடல் எடையும் குறையும் என எதிர்ப்பார்க்கிறார்கள். ஆனால் இதற்கு எதிர்மாறானதே நடக்கிறது. காரணம் விரதம் இருக்கும் இல்லத்தரசிகளும் (Housewifes) உங்களைப் போல் தொழில் செய்யும் பெண்களும் காலை உணவை அவசரம் காரணமாக கைவிட்டாலும் மதிய உணவு இடைவேளை வருவதற்கிடையில் குறைந்தது. 2 பால் தேநீராவது அருந்தி விடுவார்கள். இந்தப் பாலிலும் சீனியிலும் உள்ள கலோரிகள் சாதாரண காலை உணவிலுள்ள கலோரிகளைவிட மிக அதிகமாகும். இது தவிர உங்களைப்போல் அலுவலகம் செல்பவர்கள் அங்குள்ள ஒவ்வொரு ஊழியருக்கு பிறந்த தினம் திருமண தினம் என்பவை கொண்டாடவேண்டுமென வற்புறுத்தி கேக், ரோல், பற்றிஸ் மென்பானம் என்பனவற்றை மிகையாக உண்பதும் உண்டு.

இது தவிர காலை உணவை தவிர்த்தால் இடையில் இரண்டு கப் பால் தேநீரும் அருந்தாது விட்டால், பகல் உணவு மிக அதிகளவில் உண்ண நேரிடும். காலை உணவுக்குமாக சேர்த்து மதிய உணவை 'ஒரு பிடி' பிடிப்பது நடக்கிறது. காலை உணவை விட்டாலும் உடல் எடை அதிகரிக்க இவை காரணங்களாக இருக்கலாம்.

தொழிலுக்குச் செல்லும் ஆண்களும் பெண்களும் காலையுணவு, மதிய உணவு ஆகிய இரண்டையும் அவசரமாக உண்பதால் இரவு வீடு வந்து ஆறுதலாக சேர்த்து வைத்து இரவு உணவை 'ஒருபிடி' பிடிக்கிறார்கள். இரவில் அளவுக்கதிகமாக உண்ணல், உடனேயே நித்திரைக்கு போதல் முதலியன.

எடை அதிகரிக்க முக்கிய காரணம் என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இரவு உணவில் சோறு, பிட்டு, ரொட்டி, இட்லி, தோசை முதலிய கலோரி அதிகமுள்ள உணவுகளை தவிர்க்கவேண்டும். இலகுவான இடியப்பம், கடலை, கௌபி உண்டு அதனுடன் பப்பாசி, அப்பிள், முதலின உண்டு வயிற்றை நிரப்பலாம். வயிறு நிரம்பாவிட்டாலும் சிலரில் Gastritis முதலிய வயிற்று எரிச்சல், நித்திரையின்மை முதலிய பிரச்சினைகள் வரலாம். எனவே உசிதமான வழியில் வயிற்ற நிரப்பப் பார்க்க வேண்டும்.

## உடல் எடையை குறைக்க வழி



டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

இன்னொரு வழியானது தேநீருக்கு பாவிக்கும் சீனிக்கு பதிலாக செயற்கை இனிப்புகளை பாவிப்பதாகும். இதேபோல கொழுப்பு உணவுகளை தவிர்க்கவேண்டும் என்பது உள்களுக்கு முன்பே தெரிந்திருக்கும்.

பலர் அறியாத ஒரு [illegible] இனிப்பு, மாச்சத்து என்பனவும் உடல் எடையை அதிகரிக்கும் [illegible] ஜெலி, [illegible] ஜாம், வட்டிலப்பம், ஐஸ்கிறீம், யோக்கட், சோஸ், (Sauce) [illegible] மற்றும் இயற்கை பழங்களை Mixi யில் அடித்து குடிக்கும்போதும் [illegible] ல் எடையை தங்குதடையின்றி அதிகரிக்க உத[illegible].

[illegible], கட்லட், பேஸ்ட்ரி, பணிஸ் [illegible]தது, கொழுப்பு என்பன [illegible]ால் உகந்தவை அல்ல. அப்[illegible]கத்தான் உண்பது என நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது. பழங்கள் உள்ளன. தேநீர் வேளையில் பழங்கள் உண்ணலாம். நிலக்கடலை, கௌப்பி, பருப்பு வகை உள்ளன அப்படியும் நாவை கட்டுப்படுத்த முடியாவிடில் நீங்கள் செயற்கை இனிப்புகளைக்கொண்டு உண்டாக்கப்பட்ட கேக், ஜாம், மென்சோடா, சோஸ் முதலியன உணவுகளை மாற்றீடாக பாவிக்கலாம்.

சிலர் இயல்பாகவே பசி அதிகமுள்ளவர்கள். இவர்களுக்கு பசி வருவது அவர்களின் குற்றமல்ல. இவர்கள் அவ்வேளை தண்ணீரை நிறைய அருந்தலாம். உடல்பயிற்சி, மருந்துகள் என்பன உணவுக்கட்டுப்பாட்டுடன் சேர்த்து செயற்படுத்தினால் உடல் எடை குறைய இலகுவாகும். Lipo Protein Lipase எனும் வகை ஆங்கில மருந்து உண்ணும் கொழுப்பை செமிக்காது மலத்துடன் கழித்துவிடும். இது இப்போது இலங்கையிலும் கிடைக்கிறது. மலம் கழிக்கும்போது எண்ணெய்யாக மிதப்பதை கண்ணால் காணலாம். இம்மருந்து சட்டப்படி 12 வருடங்களாக அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

**வாசகர்களே!**
**உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

**உடல் நலம்**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**



உடல் நலம்

## கர்ப்பிணிகள் பப்பாளி பழம் சாப்பிடலாமா?



கர்ப்பமாக இருக்கும் போது எந்த உணவை சாப்பிட்டாலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதில் முக்கியமாக பப்பாளிப் பழத்தை கர்ப்பிணிகள் சாப்பிடக் கூடாது என்று மருத்துவர்களும், முன்னோர்களும் சொல்வார்கள். கருத்தடை மாத்திரைகளை பயன்படுத்தி கருவை அழிப்பதை விட, பப்பாளியின் காயை சாப்பிட்டு வந்தால், கரு உருவாகாமல் தடுக்கலாம் என்ற ஒரு நம்பிக்கையும் உண்டு.

ஏனெனில் பப்பாளியில் லாடெக்ஸ் என்னும் பொருள் உள்ளது. இது கர்ப்பிணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே இதனை கர்ப்பத்தின் ஆரம்ப நிலையில் சாப்பிட்டால், அதில் உள்ள லாடெக்ஸ் நிச்சயம் கர்ப்பத்தை கலைத்துவிடும். அதுவே கர்ப்பமாக இருக்கும் போது சற்று தாமதமாக இந்த பப்பாளியை சாப்பிட்டால், குறை பிரசவத்தில் குழந்தை பிறக்கும்.



நிறையப் பெண்களுக்கு பப்பாளி அலர்ஜியை ஏற்படுத்தும். இதனால் ஏற்படும் அலர்ஜிக்கு லாடெக்ஸ் அலர்ஜி என்று பெயர். இந்த அலர்ஜியால் பாதிக்கப்பட்ட பெண்கள், இதை பார்த்தாலே அவர்களுக்கு அந்த அலர்ஜி வேலை செய்ய ஆரம்பித்துவிடும். மேலும் இந்த அலர்ஜி உள்ள பெண்கள், வாழைப்பழம், கோதுமை மற்றும் அப்பிள் போன்றவற்றை கூட சாப்பிட முடியாத நிலையில் பாதிக்கப்படுவர்.

ஆகவே பப்பாளிப் பழமாக இருந்தாலும் சரி, காயாக இருந்தாலும் சரி, கர்ப்பிணிகள் இதை முற்றிலும் தவிர்ப்பது பாதுகாப்பானது. அதிலும் இந்தப் பப்பாளியைச் சாப்பிட வேண்டுமென்றால், உங்கள் மருந்துவரை அணுகி பின்னர் சாப்பிடுங்கள்.

## மருத்துவக் குணம் மிக்க பூசணிக்காய்



பல்வேறு மருத்துவக் குணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பூசணிக்காய்க்கு வெண்பூசணி, கல்யாணப்பூசணி என்ற பெயரும் உள்ளது. இந்த பூசணிக்காயை சமைத்துச் சாப்பிட்டால் நரம்பைப் பற்றிய நோய்கள், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப்புண் மேகவெட்டை, ஆகியவை உள்ளவர்களுக்கு நோயின் தீவிரம் குறையும்.

உடல் சூட்டைத் தணிக்கும், சிறுநீர் வியாதிகளை நீங்கும். சதா காலமும் உடல் வலி இருப்பவர்கள் பூசணிக்காயை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டால் உடல்வலி தீரும். ரத்த சுத்திக்கும், ரத்தக்கசிவு நீங்கவும், வலிப்பு நோய் சீராகவும், குடலில் உள்ள நாடாப்புழுக்கள் வெளியேறவும் மற்றும் சிறுநீரக நோய்கள் போன்றவற்றை குணப்படுத்த வெண்பூசணி பயன்படுத்தப்படுகிறது.

வெண்பூசணிக்காயின் சாறு 30 மில்லியளவு எடுத்து ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துச் சாப்பிட்டால் இதய பலவீனம் நீங்கும், இரத்தம் சுத்தியாகும். பூசணிக்காய் சாற்றைத் தயாரித்து தினசரி 30 மில்லியளவு சாப்பிட்டு வந்தால் தொடர்ந்த இருமல்,நெஞ்சுச்சளி குணமாகும். நீரிழிவு நோய் கட்டுப்படும்.

பூசணிக்காய் சாறு 120 மில்லியளவு தயாரித்து ஒரு தேக்கரண்டி தேனும், தேவையான அளவு சர்க்கரையும் கலந்து சாப்பிட்டு வந்தால், சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்கள் நிவர்த்தியாகும். சிறுநீரில் ஏற்படும் இரத்தம், சீழ் கலந்த சிறுநீர் வெளியேறுதல் நின்றுவிடும்.

பூசணிக்காயின் கதுப்புப் பகுதியை மட்டும்(தோல், பஞ்சுப் பகுதி நீக்கி) சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வேகவைக்கவேண்டும். வெந்தபின் இதை எடுத்து சாற்றைப் பிழிந்து நீரைச் சேகரித்து 60 மில்லியளவு தயாரித்து இதில் சிறிது கற்கண்டு சேர்த்து தினம் 2, 3 வேளை சாப்பிட்டு வந்தால் கல்லீரல் பாதிப்பால் ஏற்பட்டு வரும் மஞ்சள் காமாலை நோய் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

47

நா.யோகேந்திரநாதன்

சீதேவிக் கிழவி கொடுத்த மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோற்றிலும் கோழி இறைச்சிக் கறியிலும் ஒரு பகுதியைச் சின்னன் இளையவன் வீட்டில் கொண்டுவந்து கொடுத்தாள்.

இளையவனுக்கு அதைச் சாப்பிட்டபோது கிழவி தங்கள் குடும்பங்களின் மேல் காட்டும் அன்பும் அக்கறையும் நினைவுக்கு வந்தது. ஆனால் சொர்ணத்துக்கும் தனக்குமிடையில் உருவாகி வரும் நெருக்கத்தைக் கிழவி தெரிந்துகொண்டால் அது முழு மணியாறன் மூலையையும் எரித்துவிடும் என்பதையும் பல உயிர்களையும் பலிகொண்டு விடும் என்பதையும், அவன் நன்கு உணர்ந்துகொண்டான். உணவு மிகவும் சுவையாக இருந்தபோதும் அது உள்ளே இறங்க மறுத்தது.

ஒருவாறு அவன் உணவை முடித்துவிட்டு முற்றத்தில் போய் பனையில் சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டான். சொர்ணத்தைத் திருமணம் செய்வது என்பது எவ்வகையிலும் சாத்தியமில்லை என்பதை அவன் தெளிவாகவே புரிந்துகொண்டபோதிலும், அவளை மறப்பது கூட நினைத்துப் பார்க்கவே முடியாதது என அவனுக்குத் தோன்றியது. அவனின் மனம் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு குழப்பங்களில் சிக்கித் தவித்தது. தனது சிக்கலை மனதிற்குள் போட்டுக் குழப்புவதை விட யாரிடமாவது சொன்னால் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்போல் தோன்றியது.

எவரிடம் இது பற்றிக் கதைக்கலாம் என்று யோசித்தபோது முதலில் நினைவுக்கு வந்தவள் கமலிதான். ஆனால் அது கமலி மூலம் முத்துலட்சுமியின் காதுக்கு எட்டி, சின்னனுக்குப் போய் விட்டால் அது ஒரு புதிய பிரச்சினையைக் கிளப்பிவிடும். எப்படியிருப்பினும் தான் மனம் திறந்து கதைக்க எல்லாவிதத்திலும் சிவஞானம் பொருத்தமானவனாகவே பட்டது.



ஒவ்வொரு ஞாயிறும் சிவஞானம் வல்லிபுரக் கோவிலுக்குப் போவது வழமை. மறுநாள் அவனுடன் கூடிக்கொண்டு அங்கு போனால் எவ்வித இடையூறுமின்றி மனம் விட்டுப் பேசமுடியும் என்று கருதினான். அதிகாலையில் எழுந்து சீவி விட்டுக் கோவிலுக்குப் போவதாக முடிவு செய்து கொண்டான். மறுநாள் காலையில் இளையவன் சிவஞானம் வீட்டுக்குப் போனபோது அவன் ஏற்கனவே கோவிலுக்குப் புறப்பட்டுப்போய்விட்டான்.

இளையவன் அவசர அவசரமாக சைக்கிளை வல்லிபுரம் நோக்கி மிதிக்க ஆரம்பித்தான். மனதில் இருப்பதைச் சிவஞானத்திடம் கொட்டாவிட்டால் நெஞ்சே வெடித்துவிடும்போல் அவனுக்குத் தோன்றியது.

இளையவன் சைக்கிளை ஒரு கடைக்கு முன்பாக நிறுத்திப் பூட்டிவிட்டுக் கோவில் முகப்புக்கு வந்த போது சிவஞானம் கும்பிட்டு முடித்து விட்டு வெளியே வந்துகொண்டிருந்தான். மேல் சட்டை இல்லாத சிவந்த மேனியும் நெஞ்சிலும் நெற்றியிலும் போடப்பட்ட நாமமும் காதில் வைக்கப்பட்டிருந்த வில்வம் இலைகளும் அவனை ஒரு உண்மையான கிருஸ்ண பக்தனாகவே காட்டியது. இளையவனைக் கண்டதும் அவன், "என்னடாப்பா இண்டைக்குப் புதினமாய்க் கோயிலுக்கு வந்திட்டாய்?" எனக் கேட்டான்.

இளையவன் வலிந்து ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டு, "கஷ்டம் வந்தால் கடவுளிடம் வரத்தானே வேணும்?" என்றான். சிவஞானம் ஆச்சரியத்துடன் அவனின் முகத்தைப் பார்த்துவிட்டு "என்ன கஷ்டமோ உனக்கோ?" என வினாவினான்.

"கஷ்டம் மனதுக்குத்தான்" என்று விட்டு ஒரு பெருமூச்சை வெளியேற்றினான் இளையவன்.

சிவஞானத்திற்கு எதுவுமே புரியவில்லை.

"சரிசரி நான் அந்தப் பூவரசடியிலை கிடக்கிற கல்லில இருக்கிறன் கும்பிட்டிட்டு வா" என்று விட்டு சிவஞானம் பூவரசை நோக்கி நடந்தான்.

இளையவனுக்குக் கோவிலைக் கும்பிட அதிக நேரம் எடுக்கவில்லை. வெளிவீதியைச் சுற்றிக் கும்பிட்டு விட்டு, வெளியில் ஒரு வாளியில் வைத்திருக்கும் நாமத்தை அள்ளிப் பூசிக்கொண்டு, வில்வம் இலையையும் அலரிப் பூவையும் கையில் எடுத்துக்கொண்டு வந்தான். அப்போதெல்லாம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஆலயங்களுக்கு உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சொர்ணம் தன் மீதுவைத்த விருப்பம் நிறைவேற்றப்பட்டால் அவளும் அவனைப்போல் வெளியில்தான் நின்று வணங்க வேண்டும் என நினைத்தபோது அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கடலையும் அரிசிப்பொரியும் கொண்ட பையை சிவஞானம் இளையவனிடம் நீட்டினான். அவனும் அதை வாங்கிக் கொறிக்க ஆரம்பித்தான்.

கோடை வெய்யிலின் வெம்மை பூவரச மர நிழலின் குளிர்ச்சியைக் கூட இரக்கமின்றி விரட்டியடித்தது. நல்ல காற்று வீசி மணலை மேலெழுப்பி விளையாட்டுக் காட்டியது. கோவில் பின் வீதியில் நின்ற ஆலமரமும் அதன் கீழ் அமைந்திருந்த மடமும் பக்தர்களின் ஓய்வு விடுதிபோன்று அடைக்கலமளித்தது.

சிவஞானம் "என்னடா... என்ன பிரச்சினை. சொல்லு" எனக் கேட்டான். இளையவன் தானும் சொர்ணமும் ஒருவரையொருவர் விரும்புவது பற்றியும் அதன் விளைவுகள் தொடர்பாகத் தனக்குள்ள அச்சம் பற்றியும் தயங்கித் தயங்கிச் சொல்லி முடித்தான்.

"சிங்கண்ணன் கமலி விசயத்திலை விதானையார் நியாயமாய்த்தானே நடந்தவர்" என இடைமறித்தான் சிவஞானம்.

"அந்தக் காதலை விதானையார் முதலே அறிஞ்சிருந்தால் அவரே சிங்கண்ணனை மாமரத்திலை கட்டிப்போட்டு அடிச்சிருப்பார். கமலியையும் எப்பிடியெண்டாலும் பொன்னுக்குட்டி அம்மானைக்கொண்டு கட்டுப்படுத்தியிருப்பார்."

"சிங்கண்ணன்ரை பிரேதத்தை நாங்கள் ஒரு பக்கமும், நீங்கள் மற்றப்பக்கமும் தூக்க சப்போட் பண்ணினவர் தானே" இளையவன் மெல்லச் சிரித்தவாறே சொன்னான் "எல்லாமே சிங்கன் செத்தபிறகுதானே சாதியருக்கை சண்டை வராமல். தடுக்க அவர் கையாண்ட தந்திரம்!"

"ம் அப்பிடியும் இருக்கும் போலை தான் கிடக்குது" என ஆமோதித்த சிவஞானம் சில நிமிட மௌனத்தின் பின் திடீரெனக் கேட்டான். "இப்ப நான் கமலியைக் கலியாணம் கட்டினால் என்ன செய்வினம்?"

இளையவன் திகைத்தே போய்விட்டான்.

"அவள் சிங்கண்ணன்ரை பெண்சாதியல்லே?"

"உண்மை... அதாலை தான் அவள் சம்மதிச்சால் நான் அவளை கட்டத் தயார்... சிங்கண்ணன் எதுக்காகச் செத்தாரோ அந்த இலட்சியம் அவரோடை அழிஞ்சு போகக்கூடாது"

கமலி இப்போதும் குங்குமப் பொட்டு வைப்பதையும் தனது தாலியைக் கழற்றி சிங்கனின் படத்துக்குப் போட்டிருப்பதையும் இளையவன் நினைத்துப் பார்த்துக்கொண்டான்.

"அவள் விரும்ப மாட்டாள் எண்டுதான் நினைக்கிறன்?"

"விரும்ப வைக்கவேணும்... ஏனென்டால் இது தனிநபர்கள் பிரச்சினையில்லை. ஒரு சமூக மாற்றம் தொடர்பான பிரச்சினை" என்றான் சிவஞானம் மிகவும் உறுதியான குரலில்.

சில விநாடிகள் தூரத்தே தெரிந்த சவுக்கு மரங்களுக்குப் பின்னால் மிக வேகமாக ஓடிய வெண்மேகங்களையே பார்த்துக்கொண்டிருந்த இளையவன் ஒருவித தயக்கத்துடன், "அப்படியெண்டால் என்ரை பிரச்சினையும் சமூக மாற்றம் சம்பந்தப்பட்டது தானே?" எனச் சொல்லி இழுத்தான்.

"உண்மைதான். ஆனால் என்ரை படிப்படியானது உன்ரை தலைகீழ் மாற்றம்" என்றான் சிவஞானம்.

இளையவனும் அதை உணர்ந்திருந்தான். அது மட்டுமன்றி அதன் காரணமாக எழும் எதிர்விளைவுகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் தன்னிடம் இல்லை என்பதையும் அவன் தெளிவாகவே தெரிந்திருந்தான்.

இளையவனின் முகம் வாடிவிட்டதை அவதானித்த சிவஞானம், "அவசரப்படத்தேவையில்லை... பொன் கந்தையா இந்தமுறை எலெக்சனிலை வெண்டால் சில மாற்றங்கள் ஏற்பட வாய்பிருக்கும். வா போவம்?" என்று விட்டு எழுந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வடக்கின் பல பகுதிகளிலிருந்தும் வந்த பக்தர்கள் வல்லிபுர ஆழ்வார் கோவில் வளாகமெங்கும் காணப்பட்டனர். பின் வீதியில் நின்ற அந்த ஆலமரத்தின் கீழ் கடலை வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. மணி வண்டில்காரர், ஐஸ்பழவியாபாரிகள், காப்புக் கடைகள் என அந்த ஆலமரம் ஒரு குட்டிச் சந்தை போலவே காட்சியளித்தது. வேறு ஒரு புறத்தில் சுளகு கடகம் பனையோலைப் பெட்டிகள் என்பவற்றின் வியாபாரம் இடம்பெற்றது. வடபகுதியில் துன்னாலைச் சுளகுக்கு விசேட மதிப்புண்டு.

இருவரும் கடலை கச்சான் என்பவற்றை இரண்டு கடதாசிப் பைகளில் வாங்கிக்கொண்டு ஒவ்வொரு வல்வெட்டித்துறைப் பழச் சோடாக்களையும் வாங்கிக் குடித்து விட்டுப் புறப்பட்டனர்.

இருவரும் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போதே தங்கள் பிரச்சினைகளை கனகரத்தினத்திடம் சொல்லி ஆலோசனை கேட்பதென முடிவெடுத்தனர்.

இருவரும் மந்திகை மருத்துவமனையின் முன்பாக வந்த போது சிவஞானம் எதிர்ப்பக்கமாக இருந்த கடையிலிருந்து கையில் சுடுநீர் போத்தலுடன் வடிவேலன் வருவதைக் கண்டுவிட்டு சைக்கிளை நிறுத்தினான்.

அவன் "என்ன வடிவேலு?" ஆருக்குச் சுகமில்லை?" என வடிவேலுவைப் பார்த்துக் கேட்டான். வடிவேலு இளையவனைக் கண்டதுமே மிரளத் தொடங்கி விட்டான். கூட்டத்தில் கமலியைக் கல்லெறிந்து காயப்படுத்திய பின்பு மணியாறன்மூலையைச் சேர்ந்த எவரைக் கண்டாலும் உதறல் எடுக்க ஆரம்பித்துவிடும்.

சைக்கிளில் காலை ஊன்றியவாறு நின்ற சிவஞானம் "மீண்டும் என்னடாப்பா . என்ன பிரச்சினை?" எனக் கேட்டான்.

"அது காசி முதலாளியை ஆஸ்பத்திரியிலை விட்டுக் கிடக்குது. பெண்சாதி, பிள்ளையள் எல்லாம் உங்கை தான் நிக்கினம்?" என்றான் வடிவேலு தட்டுத்தடுமாறியவாறே?

"ஏன் என்ன நடந்தது"? எனச் சிவஞானம் வியப்புடன் கேட்டான்.

"ஏதோ காலமை சார்ஜன்ட் சின்னத்தம்பி ஜீப்பிலை வந்தார். இரண்டு பேரும் தனிய இருந்து கனநேரம் கதைச்சவை. இடைக்கிடை சின்னத்தம்பியின் குரல் பெரிசாய் கேட்டது. பிறகு அவர் ஜீப்பையும் எடுத்துக்கொண்டு போட்டார்!"

"பிறகு....?"

"பிறகு .. கொஞ்ச நேரத்தாலை முதலாளி நெஞ்சுக்கை குத்துது எண்டு அவதிப்பட்டார். மூச்செடுக்க ஏலாமல் கஷ்டப்பட்டார். உடனை காரிலை இஞ்சை கொண்டு வந்திட்டம்"

"இப்ப . என்ன செய்யுது?"

"ஊசி போட்டு படுத்தி விட்டுக் கிடக்கிது.... அவ்வளவு கடுமை இல்லையெண்டு டாக்குத்தர் சொல்லுறார்" என்றுவிட்டு உள்ளே போனான் வடிவேலு.

சிவஞானம் தங்களுக்கு எதிராகப் போடப்பட்ட பொய்முறைப்பாடு சம்பந்தமாக ஏதோ சிக்கல் காசியின் தலையில் விழுந்து விட்டிருக்க வேண்டும் எனவும், அதனால காசி அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும் எனவும் ஊகித்துக்கொண்டான்.

இளையவன் சிவஞானத்திடம் "என்ன போய்ப் பார்க்கப்போறியே?" எனக் கேட்டான்.

சிவஞானம் "இல்லை!" என்றான்.

"ஓ.. உங்களை ரிமாண்டுக்கு அனுப்பினவரெல்லே"? என மெல்லச் சிரித்தவாறே இளையவன் கேட்டான்.

"அதுக்கில்லை. என்னை இப்ப கண்டால் மனுஷனுக்கு பிறசர் ஏறி மண்டையைப் போட்டாலும் போட்டுடும்"

அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே இரண்டு கார்கள் வந்து மருத்துவமனை முற்றத்தில் நின்றன. அதிலிருந்து கீலா, சிவப்பிரகாசம், அப்புக்காத்து, தங்கராசன் என ஒரு பெரும் பிரமுகர் கூட்டமே இறங்கியது.

"இதிலை நிக்கிறது அவ்வளவு நல்லதில்லை. என்னைக் கண்டால் தங்கராசன் ஏதாவது வலியக் கொழுவல் போடுவான். போவம் வா?" என்று விட்டு சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான் சிவஞானம்.

இன்ஸ்பெக்டர் டயல் காசி போட்டது பொய் முறைப்பாடு என்பதை சட்ட பூர்வமாக விளங்கிக் கொண்டுவிட்டார். ஆனால் சார்ஜண்ட் சின்னத்தம்பி போன்ற ஒரு சிரேஷ்ட அதிகாரியை அவர் இழக்க விரும்பவில்லை. எனவே பொய்முறைப்பாடுகளின் குற்றம் முழுவதையும் காசியிலேயே சுமத்தி அறிக்கை எழுதுவதாக அவர் முடிவெடுத்து விட்டார். காசிக்கு முதலில் 14 நாள் விளக்கமறியல் தப்பாது என்பதை சின்னத்தம்பி தெரிவித்த பின்பே அவருக்கு நெஞ்சுக்குத்து ஆரம்பித்தது என்பதைச் சிவஞானம் அறிந்திருக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட் 2013 மாயையான கவர்ச்சி!

இலங்கையின் 66 ஆவதும் மஹிந்த அரசின் எட்டாவது மான வரவுசெலவுத் திட்டத்தை கடந்த வாரம் சபையில் சமர்ப்பித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச. வரவு செலவுத்திட்டம் எப்படியெல்லாம் அமையும் என எதிர்கட்சிகள் தெரிவித்தனவோ அப்படியெல்லாம் அமைந்து மஹிந்த அரசின் மன பிரதிபலிப்பை அப்படியே படம்பிடித்துக் காட்டியிருக்கிறது 2013 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம். நகர் பற்றியெரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனின் கதையைப் போல நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளம் நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது, பொருளாதாரச்சுமை அப்பாவி மக்கள் மீது சுமத்தப்பட்டு அவர்கள் அல்லாடி தள்ளாடிவரும் நிலையில், தனிமனிதனுக்குரிய ஒரு நாள் செலவினம் பலமடங்காக அதிகரித்திருக்கும் நிலையில் அவை எவற்றுக்கும் உரிய தீர்வினை வழங்காது இராணுவ வீட்டுக்கடன், பாதுகாப்புச் செலவினம் என்பவற்றிற்கான நிதியை வாரியிறைத்து அப்பாவி மக்களை நரக வேதனைக்குள் தள்ளியிருக்கிறது மஹிந்த அரசின் வரவு செலவுத்திட்டம்.

குறித்த வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட முதலே அது தொடர்பான ஊகங்கள் வெளிவந்திருந்தன.

அபிவிருத்தியை விட போரியல் அபிவிருத்தியே முக்கியப்படுத்தப்படும் எனவும், அப்பாவி மக்களின் வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட எந்த உருப்படியான செயற்றிட்டங்களும் முன்வைக்கப்பட மாட்டாது எனவும் பொருளாதார வல்லுநர்கள் கடந்த காலத்தில் ஆருடம் தெரிவித்திருந்தனர். ஆனால் அபிவிருத்தி பற்றி பல்வேறு மேடைப்பேச்சுகளில் வெட்டி வீழ்த்திய அமைச்சர்கள் பொருளாதார வல்லுநர்களினதும் எதிர்கட்சிகளினதும் கூற்றுக்களை முற்றாக மறுதலித்து வந்தனர். ஆனால் அமைச்சர்களின் பேச்சுகளை முற்றாக மறுதலித்து ஏழைகள் வாழ முடியாத தேசமாக இலங்கையை மாற்றும் வரவு செலவுத் திட்டத்தை சபையில் வழங்கியிருக்கிறது மஹிந்த அரசு. பொதுமக்களின் எல்லா எதிர்பார்ப்புகளும் தவிடு பொடியாகிய வரவுசெலவுத் திட்டத்தால் மக்கள் மீளமுடியாத அதிர்ச்சிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். குறித்த வரவு செலவுத்திட்டம் மக்கள் நலனற்ற வெறும் எழுத்து மூல ஆவணம் என எதிர்கட்சிகள் தெரிவிப்பதைப்போல இப்பட்ஜெட் அமைந்துள்ளமை மறுக்க முடியாத உண்மை என்கின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.


இராணுவ வீட்டுக்கடன் உட்பட பல்வேறு பாதுகாப்பு நலன்களை முன்னிலைப்படுத்தி குறித்தவரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் மக்களுக்கு அடிப்படையில் கவர்ச்சியான மாயையைக் காட்டும் திட்டங்களை உள்ளடக்கிய வரவுசெலவுத் திட்டம் கடந்த வியாழக் கிழமை சபையில் நிதியமைச்சராக விளங்கும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் அடிப்படை தேவைகளான சுகாதாரம், கல்வி போன்றவற்றிற்கு குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வித்துறை அபிவிருத்திக்கு 6 வீத ஒதுக்கீடு வழங்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க உட்பட அரசில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர்கள் முழங்கித்தள்ளியபோதிலும் மொத்த தேசிய உற்பத்தியில் வெறும் 4.1 வீத ஒதுக்கீடே கல்விக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை மாணவர்கள் மத்தியிலும் கவர்ச்சியை காட்டுவதும் இவ் வரவு செலவுத் திட்டத்தின் நோக்கமாக இருந்துள்ளது. ஜனாதிபதி சபையில் வரவு செலவு திட்டத்தை சமர்பித்துக் கொண்டிக்கும் போது சபை நடவடிக்கைகளை பார்வையிட வந்த மாணவர்களின் சப்பாத்துகள் கிழிந்திருந்ததை பார்த்து தன் மனம் சஞ்சலப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி ஒவ்வொரு வருடமும் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு சோடிச் சப்பாத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சபையில் முன்மொழிந்தார். அத்துடன் வறிய மாணவர்களுக்கு பால், முட்டை அரையாண்டு சீருடை என்பன இலவசமாக வழங்கப்படும் என வரவு செலவுத்திட்டத்தில் தெரிவித்திருக்கிறார். ஆனால் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பற்றியோ போரால் பாதிக்கப்பட்டு செயலிழந்துள்ள பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்தி பற்றியோ ஜனாதிபதி தனது வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடாமை வேதனைக்குரியதாகும் குறிப்பாக. போரால் மோசமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் பற்றி ஒரு வார்த்தையே குறிப்பிடாமல் அந்த பாடசாலைகளை முன்னிலைப்படுத்தாமல் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார் ஜனாதிபதி.

கொடூரப் போரின் காரணமாக வடக்கு கிழக்கில் அபிவிருத்தியை காணாத பாடசாலைகள் ஏராளம் உண்டு. குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பலபாடசாலைகள் இன்னும் கொடூர போரின் சாட்சிகளை தாங்கியபடி நிற்கின்றன. வகுப்பறைக் கட்டடங்கள் கூரைகள் இழந்த நிலையிலும் சில பாடசாலைகளில் சுவர்கள் இடிந்த நிலையிலும் காணப்படுவதால், கற்றல் நடவடிக்கைகளின்போது மாணவர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில பாடசாலைகளில் வகுப்புகள் மரநிழலில் நடாத்தப்படும் அவலமும் இருக்கிறது. மேலும் சில பாடசாலைகளில் ஆய்வுகூடங்கள், நூலக வசதிகள், கணனி வசதிகள் எட்டாக்கனியாக இருக்கின்றன. ஆனால் அந்த பாடசாலைகள் குறித்து ஜனாதிபதி எவ்வளவு தூரம். அக்கறையெடுத்து தனது வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கினார் என்பது சந்தேகமாக இருக்கிறது.

அத்துடன் வடக்கு கிழக்குப் பகுதியில் தொடர்ந்த கடும்போரில் சிக்கித்திணறி தமது அனைத்து வாழ்வாதாரங்களையும் இழந்து, இழக்கப்பட்ட அவயவங்களுடன் தமிழ்மக்கள் அல்லாடி தள்ளாடி வருகின்றனர். அவர்களின் வீடுகள், வளங்கள், தொழில் முயற்சிகள் போரின் பெயரில் பறித்தெடுக்கப்பட்டு அவர்கள் தறப்பாள் கொட்டகைகளுக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். கைக்குழந்தைகளும் மழை, வெயில், குளிர், காற்று என அனைத்து காலநிலைகளும் மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப்போல் அவர்களின் மீள்குடியமர்வுக்கும் நலனோம்புக்கும் ஒதுக்கிய நிதியின் அளவு அவர்களின் வாழ்வாதார அபிவிருத்தியில் மஹிந்த அரசு காட்டும் அக்கறையை படம் பிடித்து காட்டியிருக்கிறது.

அத்துடன் தற்போதைய மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் நிதிப்பற்றாக்குறையால் பாரிய பின்னடைவை சந்தித்திருக்கிறது. குறிப்பாக தற்போது தறப்பாள்களும் தகரக்கொட்டகைகளும் மரக்குற்றிகளும் வழங்கப்பட்டு மீள்குடியேற்றம் என்ற போர்வையில் தவிக்க விடப்பட்டிருக்கும் மக்கள் பாரிய வறுமையை சந்தித்திருக்கின்றனர். வழங்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளும் தகரங்களும் கடந்த மாரிமழையின்போது வங்கக்கடலில் மையங்கொண்ட நீலம் புயலின் தாக்கத்தினால் போதும் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக இவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரணம் 'யானைப் பசிக்கு சோழப்பொரியாகவே' உள்ளது. இந்நிலையில் இவர்களிற்கான வீட்டுத்திட்டங்களும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் குறைந்தளவு நிதியை ஒதுக்கி பாதுகாப்பு செலவினம்,




பொலிஸ்துறை அபிவிருத்தி, ஏனைய ஆடம்பர கட்டுமான அபிவிருத்தி சுற்றுலாத் துறை அபிவிருத்தி என்பவற்றிற்கு அதிகளவு நிதியை ஒதுக்கியிருப்பது பொதுமக்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத் தியிருக்கிறது.

போரால் பாதிக்கப்பட்டு எந்தவித கட்டுமானங்களும் இன்றி நடுத்தெருவில் தவிக்கவிடப்பட்டுள்ள அப்பாவி தமிழ் மக்கள் தொடர்பில் எந்தவித கவனமும் 2013 வரவு செலவுத்திட்ட சமர்பிப்பில் காட்டப்பட்டதாக தெரியவில்லை. குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்கள் பல போரின் கொடூர அழிவுகளைத் தாங்கி இன்னும் புதர்மண்டிய பிரதேசங்களாக அழிவின் சாட்சியாக காணப்படும் நிலையில் அப்பிரதேசங்களிற்கு அதிகளவு நிதியை ஒதுக்கி அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதை விடுத்து இராணுவ வீட்டுத்திட்ட கடனுக்கு சுமார் நூறு கோடியை ஒதுக்கி இராணுவ மேலாதிக்கத்தை முன்னிலைப் படுத்தியிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே கொடூரபோரில் உடைக்கப்பட்ட வீடுகளை கட்டிக் கொடுக்க, மக்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகளை வழங்க முன்னுரிமை கொடுக்காது படையினருக்கு வீட்டுத்திட்ட கடன் உதவிகளை வழங்கியிருப்பது இலங்கை அரசின் உண்மையான நோக்கத்தை அப்படியே படம்பிடித்து காட்டியிருக்கிறது.

ஏற்கனவே பால்மா போன்றவற்றின் விலைகள் எகிறிக் காணப்படுகின்றன. குறிப்பாக குழந்தைகளுக்கான பால்மா பொருட்களின் விலைகளும் வரலாறு காணாத வகையில் அதிகரித்து காணப் படுகின்றன. இந்நிலையில் இப்பொருட் களுக்கான வரிக்குறைப்பை மேற்கொள்வதை விடுத்து 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான வரிகளை அதிகரித்திருப்பது அப்பாவி மக்களின் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றியிருக்கிறது. இதனால் பால்மாக்களின் விலைகளும் அதிகரிக்கப்படலாம் என்ற அச்சம் அப்பாவி மக்களின் மேலோக்கியிருக்கிறது. அத்துடன் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பது தொடர்பில் எந்தளவு கவனமும் செலுத்தப்படவில்லை. இந்த பட்ஜெட்டிலாவது அந்த எதிர்பார்ப்பு நிறைவேறும் என காத்திருந்த மக்களை அரசின் பட்ஜெட் சமர்ப்பிப்பு இலவு காத்த கிளிபோலாயிருக்கிறது.

போர் முடிந்துவிட்டது பயங்கரவாதம் வேரோடு பிடுங்கப்பட்டது என்று ஒவ்வொரு வருடமும் காலிமுகத்திடலில் வெற்றிவிழா கொண்டாடி மகிழும் அரசு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு ஏன் 289.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது. அதாவது நடப்பு ஆண்டு பட்ஜெட்டோடு ஒப்பிடும்போது சுமார் 60 மில்லியன் ரூபா ஏன் அதிகமாக ஒதுக்கப்பட்டது என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

இதேவேளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் தமக்கு சம்பள உயர்வு வழங்காவிடில் போராட்டத்தில் குதிப்போம் என தெரிந்திருக்கும் நிலையில் அவர்களின் கோரிக்கைகள் எந்தளவில் அக்கறையுடன் பார்க்கப்பட்டது?

அத்துடன் அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய அதிகரிப்பு என்பன பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அப்பாவி மக்களை கவரும் நடவடிக்கையும் அவர்களின் ஆதரவை பெறும் முயற்சியும் இப்பட்ஜெட் ஊடாக எடுக்கப்பட்டிருப்பது புலனாகின்றது. குறுங்கால நோக்கம் கொண்டுள்ள திட்டங்களை முன்மொழிவதன் ஊடாக இதை சாதித்துக்காட்டியிருக்கிறது அரசு. அந்த வகையில் விவசாயிகளுக்கு மானிய உதவி, கிராமம் தோறும் தகவல் தொழில் நுட்ப நிலையம் திறப்பு, உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்புகளுக்கான நிதியொதுக்கீடு, சிறிய வர்த்தக நிறுவனங்களுக்கான வற் வரி நீக்கம், விவசாயிகளுக்கான கடன் உதவித் திட்டம், விவசாயிகளுக்கான கடன் வட்டி நீக்கம், இளைஞர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பு உதவி, கலைஞர்களுக்கானதும் ஊடகவியலாளர்களுக்கானதுமான கடன் உதவி, 65 வயதுக்கு மேற்பட்ட வேலையற்ற முதியவர்களுக்கு மாதாந்த 5000 ரூபா கொடுப்பனவு, கடற்தொழில் மக்களுக்கான நிலைய அமைப்பு உட்பட சில கவர்ச்சியான திட்டங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனாலும், இத்திட்டங்கள் மக்கள் எதிர்பார்த்தளவில் ஒரு சிறிய அளவைத்தான் பூர்த்தி செய்திருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார ஆய்வாளருமான ஹர்ஷி.டி. சில்வா தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை இப்பட்ஜெட்டில் தமிழ் மக்கள் குறித்து எள்ளளவேனும் சிந்திக்கவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர். இதேவேளை இப்பட்ஜெட்டை சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி நீதியான அதிகாரப்பகிர்வுக்கு மாகாணசபை முறையில் மாற்றம் ஏற்படுத்தப் படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனும் துணை நிற்க வேண்டும் எனவும் தெரிவித்திக்கின்றார். தமிழ்மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை கருத்தில் கொண்டு வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிவுகள் எதையும் முன்வைக்காது தமிழ்மக்களை நல்லிணக்கத்திற்கு துணைபுரிய வருமாறு அழைப்பது எந்தவகையில் ஏற்புடையது என்று கேட்கின்றநர் தமிழ்மக்கள்.

— ஹரன் —

**போர் முடிந்துவிட்டது பயங்கரவாதம் வேரோடு பிடுங்கப்பட்டது என்று ஒவ்வொரு வருடமும் காலிமுகத்திடலில் வெற்றி விழா கொண்டாடி மகிழும் அரசு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு ஏன் 289.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது. அதாவது நடப்பு ஆண்டு பட்ஜெட்டோடு ஒப்பிடும்போது சுமார் 60 மில்லியன் ரூபா ஏன் அதிகமாக ஒதுக்கப்பட்டது என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி பரவும் தீபாவளித் திருநாள்



இந்தியாவிலும் இலங்கை முதலான நாடுகளிலும் வாழும் இந்துமத மக்கள் தீபங்களின் திருநாள் என அழைக்கப்படும் தீபாவளித் திருநாளை மிகவும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் கொண்டாடுகின்றனர்.

இத்திருநாளில் வீடுகளில் முக்கியமான அனைத்து இடங்களிலும் விளக்குகள் ஏற்றிவைத்து கொண்டாடுகின்றனர். இந்நாளில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் இனிப்புப் பண்டங்கள் வழங்கி மகிழ்ச்சியோடு அன்பைப் பரிமாறிக் கொள்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எந்தவித பாகுபாடும் இல்லாமல் வெடி கொளுத்தி பூரிப்படைகின்றனர்.

இந்தியாவில் நாடு முழுவதும் தீபாவளி கொண்டாடப்பட்டாலும் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு காரணங்களுக்காக இப்பண்டிகை கொண்டாடப்படுவதாகத் தெரியவருகின்றது.

பூமாதேவியின் மகனான நரகாசுரன், கடவுளர் உள்ளிட்ட தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். அவர்களின் வேள்விகளுக்கு இடையூறாக இருந்து பல்வேறு கொடுமைகளைச் செய்துவந்தான். சத்தியபாமாவின் (பூமாதேவி) உறவினரான சுரலேகாவின் எல்லைகளிலும் நரகாசுரன் அட்டகாசம் செய்யத் தொடங்கினான். இதனால் சுரலேகா, இந்திரன் உள்ளிட்ட தேவர்களும், முனிவர்களும் கிருஸ்ணனிடம் சென்று முறையிட்டனர்.

கிருஸ்ணன் தேரோட்டியாக அமர்ந்து சத்தியபாமாவை போருக்குத் தேரில் அழைத்துச் சென்றார். போரில் நரகாசுரனின் அம்பினால் கிருஸ்ணன் மயக்கமுற்று வீழ்ந்தார். இதனைக்கண்டு சினம்கொண்ட சத்தியபாமா, நரகாசுரனுக்கு எதிராக வில்லினை எடுத்து அம்புகளைத் தொடுத்து நரகாசுரனைக் கொன்றாள்.

பூமாதேவி நரகாசுரனின் இறந்தநாளை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொண்டார். அதன்படி மக்கள் வானவேடிக்கை களையும், பட்டாசுகளையும் வெடித்து தீமைகளை ஒழித்த தினமாக தீபாவளித் திருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இது ஒரு கதை.

அடுத்தது, வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த இந்தத் தீபாவளி பண்டிகையை வடஇந்தியாவில் மக்கள், 14ஆண்டுகள் வனவாசம் போன இராமனும், சீதையும் அயோத்திக்கு திரும்பி வந்த திருநாளாகக் கொண்டாடுகின்றனர். இராமன் வனவாசம் சென்ற இடத்தில் சீதையை, இராவணன் சூழ்ச்சி செய்து கடத்திச் சென்றான். இதையடுத்து சீதையை மீட்க இலங்கை சென்று இராவணனோடு போரிட்டு இலங்கையைத் தகர்த்து சீதையை மீட்டு வந்தான் இராமன்.

இராமன் இல்லாமல் அயோத்தி மாநகரமே14 ஆண்டுகள் இருளில் மூழ்கியிருந்ததாக நினைத்த அந்நாட்டு மக்கள், இராமன் திரும்பி வந்ததும் பகலவனை கண்ட பனிபோல் இருள் நீங்கி மாநகரமே ஒளிபெற்றதாக எண்ணி தீபங்களை ஏற்றி விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இராவணனை வீழ்த்திய பிறகு வெற்றி வாகையோடு அயோத்திக்குத் திரும்பிய இந்நிகழ்ச்சியே வடமாநிலங்களில் தீபாவளியாக சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

இந்த ஐதீகங்கள் எந்தளவு சரி, உண்மை என்பதற்கு அப்பால் மக்கள் தங்கள் குடும்பத்தினருடனும், உறவினருடனும் மகிழச்சியைப் பகிர்ந்து கொண்டாடும் ஒரு பண்டிகை என்ற வகையில் தீபாவளி ஒரு குதூ கலமான நாள்தான்.

## பம்பல் கதை

# விலங்குகள் பேசினால்...



முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன், காட்டு வழியாகச் சென்றான் அவன். அங்கே புலியிடம் சிக்கிக் கொண்டிருந்த துறவி ஒருவரைக் காப்பாற்றினான்.

மகிழ்ந்த துறவி, பறவைகள், விலங்குகள் என்ன பேசினாலும் இன்றுமுதல் உனக்குக் கேட்கும், "இப்படிப்பட்ட ஆற்றல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை யாரிடமும் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் தலை வெடித்து நீ இறந்து விடுவாய். போய் வா" என்றான்.

துறவியை வணங்கிவிட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் அவன். வழியில் இருந்த விலங்குகள் பறவைகள் பேசிக்கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. தற்செயலாகக் கிடைத்த விந்தையான ஆற்றலை எண்ணி மகிழ்ந்தான் அவன்.

இரவு நேரம், அவனும் அரசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது சிறிதளவு தேனும் ஒரு உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன.

அங்கிருந்த எறும்பு ஒன்று, "ஓடி வாருங்கள், கூட்டமாக ஓடி வாருங்கள், நமக்கு இனி உணவுப் பஞ்சமேஇல்லை. அரண்மனை மதுக்குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ் சோற்றுமலையே நமக்காகக் கிடக்கிறது", என்று உரத்த குரலில் தன் கூட்டத்தை அழைத்தது.

இதைக் கேட்ட அரசன், இரண்டு சொட்டு தேன், தேன்வெள்ளமா? ஒரு உருண்டை சோறு பெருஞ்சோற்றுமலையா? இந்த எறும்பிற்கு அறிவே இல்லையா? இப்படியா வர்ணிப்பது? என்று நினைத்தான், அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

தன்னை மறந்து கலகலவென்று சிரித்தான் அவன்.

அருகிலிருந்த அரசி, "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒன்றும் இல்லை," என்று மழுப்பினான் அவன்.

சாப்பிட்டு முடித்த அரசன் பட்டு மெத்தையில் படுத்தான். அரசி வெற்றிலை பாக்கு மடித்துத் தந்து கொண்டிருந்தாள். அறையில் இனிய மணம் பரவியது.

அங்கிருந்த ஆண் ஈ ஒன்று, பெண் ஈயை அழைத்து, "எவ்வளவு இனிய சுழல் வா! நாம் இருவரும் அரசனின் முதுகில் இருந்து ஓடியாடி விளையாடுவோம். மகிழ்ச்சியாக இருப்போம். இதைப் போன்ற நல்வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்?" என்றது.

என் முதுகு இந்த ஈக்களுக்கு மெத்தையா? என்று நினைத்தான் அரசன். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மீண்டும் கலகலவென்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்" என்று கேட்டாள் அரசி.

"ஒன்றும் இல்லை" என்று வழக்கம் போல மழுப்பினான் அவன்.

"உண்மையைச் சொல்லுங்கள். என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனிமேல் உங்களுடன் பேசமாட்டேன். என் மீது உயிரையே வைத்திருப்பதாக நீங்கள் சொன்னதெல்லாம் நடிப்பு" என்று கோபத்துடன் சொன்னாள் அவள்.

"என் உயிருக்கும் மேலாக நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். நான் சிரித்ததற்கான காரணம் மட்டும் கேட்காதே" என்றான் அவன்.

"நீங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும்" என்று வற்புறுத்தினாள் அவள்.

"உண்மையைச் சொன்னால் என் உயிர் போய்விடும்" என்றான் அவன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் சிரித்ததற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும்" என்று அடம்பிடித்தாள் அவள்.

"என்ன செய்தாலும் தன் மனைவியைச் சமாதானப் படுத்த முடியாது" என்று உணர்ந்தான் அவன்.

என் உயிரைவிட உனக்கு நான் சிரித்ததற்கான காரணம் தெரிய வேண்டும். நாளை மாலையில் உனக்கு அந்த உண்மையைச் சொல்கிறேன். அப்படியே என் பிண ஊர்வலத்துக்கும் ஏற்பாடு செய்து வை என்று வருத்தத்துடன் சொன்னான் அவன்.

பொழுது விடிந்தது. வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவ வந்தான் அவன். மாலையில் இறக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் சோகமாக இருந்தான். அரண்மனை முழுவதையும் அரசன் இறக்கப் போகும் செய்தி பரவி இருந்தது.. உலாவிக் கொண்டிருந்த அவன் பின்னால் வளர்ப்பு நாய் சோகமாக வந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில் அரண்மனைச் சேவல் பெட்டைக் கோழிகள் சூழ ஆரவாரமாக உலாவிக் கொண்டிருந்தது.

இதைப் பாரத்த நாயால் கோபத்தை அடக்க முடியவில்லை. "ஏ! சேவலே! உனக்குச் சிறிது கூட நன்றி கிடையாதா? நமக்கு இவ்வளவு காலம் உணவு அளித்துக் காப்பாற்றியவர் இந்த அரசர். இன்று மாலை இவர் இறக்கப் போகிறார். எல்லோரும் சோகமாக இருக்கின்றனர். இந்தச் சூழலில் நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயே? இது நியாயமா?" என்று கேட்டது.

அதற்குச் சேவல், "நம் அரசர் பெரிய முட்டாள். அவருக்கு இருப்பது ஒரே ஒரு மனைவி. அவளுக்காக உயிரைவிடத் துணிந்துள்ளார். எனக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள் நீயே பார். என் பேச்சைக் கேட்டுத்தான் அவர்கள் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை தருவேன். மனைவிக்காக இந்த அருமையான உயிரை நான் இழக்க மாட்டேன்", என்று பதில் சொன்னது.

"இந்தச் சிக்கலிலிருந்து அரசர் உயிர் பிழைக்க வழி இருக்கிறதா?" என்று கேட்டது நாய்.

"அரசர் மட்டும் அரசியிடம் உன்னைச் சவுக்கால் நூறு அடி அடிப்பேன். அதன் பிறகுதான் உண்மையைச் சொல்வேன் என்று சொல்லட்டும். எல்லாம் நல்லபடியாக நடக்கும்", என்றது சேவல்.

நாயும் சேவலும் பேசிக் கொண்டிருந்ததை ஒன்று விடாமல் கேட்டான் அரசன். அரண்மனை திரும்பினான்.

மாலை நேரம் வந்தது. அவன் அருகே வந்த அரசி, "இப்பொழுது உண்மையைச் சொல்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நீ முதலில் சவுக்கால் நூறு அடி பெற வேண்டும். அதன்பிறகு நான் உண்மையைச் சொல்லிவிட்டு இறந்து விடுவேன்" என்றான் அரசன்.

"நான் சவுக்கடி பெற்றுக் கொள்கிறேன். எப்படியும் உண்மை தெரிந்தாக வேண்டும் என்றாள்" அவள்.

அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான் அரசன். கையில் சவுக்கை எடுத்த அவன் அவளை ஓங்கி அடித்தான்.

பத்து அடியைக் கூட அவளால் தாங்க முடியவில்லை. மென்மையான அவளுடைய உடலிலிருந்து குருதி கசியத் தொடங்கியது. "ஐயோ! போதும் அடிப்பதை நிறுத்துங்கள். உங்கள் உண்மையும் வேண்டாம். சவுக்கடியும் வேண்டாம்", என்று அலறினாள் அவள்.

சவுக்கால் அடிப்பதை நிறுத்தினான் அவன். அதன்பிறகு இருவரும் பிரச்சினையின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரா.புத்திரசிகாமணி

# பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டும் மலையகத் தலைமைகள்!

**தொழிலாளர்களை ஒன்று சேரவிடாமல் பிரித்து வைத்து ஆளும் இந்த கங்காணிமார் எனும் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி கணக்குப்பிள்ளைமார் வீட்டில் தண்ணி அடித்து ஏழைத் தொழிலாளர்களின் உழைப்பை பங்கு போட்டுக் கொள்கின்றனர்.**



மலையக தொழிற்சங்கத் தலைவர்களின் போட்டா போட்டியினால் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் கழுத்துகள் மேலும் நெரிக்கப் படுகின்றன.

இன்று மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் சுட்டெரிக்கும் பிரச்சினையாக இருப்பது சம்பள உயர்வு.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல், வறுமைக் கோட்டிற்கு கீழ் பொருளாதார நெருக்கடியினால் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், கோதுமை மாவின் விலை ஆறு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவினால் உற்பத்தி செய்யப்படும் பாண் உட்பட அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. இரவில் ஒரு வேளை சோறும். காலை, பகல் உணவாக மாப்பதார்தங்களை அதாவது ரொட்டி, புட்டு, தோசை என உட்கொண்டு பழக்கப்பட்டவர்கள்.

தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்குத் தாரை வார்க்கப்படுவதற்கு முன் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பல மானியங்கள் கிடைத்தன.

ஒரு வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கு பால் மா, ஐந்து வயது வரையிலான பிள்ளைகளுக்கு இலவசமாகப் பகல் உணவு, 12 வயது வரையிலான பிள்ளைகளுக்கு இலவசமாக கோதுமை மா என வழங்கப்பட்டன.

இதற்கும் மேலதிகமாக அரிசி, சீனி, கோதுமை மா, கடலை போன்ற தானிய வகைகள் மானியவிலையில் தோட்டங்களுக்கே கொண்டுவந்து வழங்கப்பட்டன. சில காலங்களில் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது தோட்ட நிர்வாகங்கள் மண்ணெண்ணெய்யையும் கொண்டு வந்து தொழிலாளர்களுக்கு விநியோகித்தனர்.

இத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் சௌக்கிய சுகாதார சேவைகளைக் கண்காணிக்கவும் சிகிச்சை அளிக்கவும் உதவி தோட்ட வைத்திய அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

இந்த வைத்திய அதிகாரிகள் மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்குச் சென்று பார்வையிடுவர். நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாமல் இருப்பவர்களை அவர்களின் வீடுகளிலேயே பரிசோதனை செய்து, வேண்டிய சிகிச்சை அளிப்பர். இதற்கு எந்தவிதமான கட்டணமும் அறவிடப் படமாட்டாது. அனைத்தும் இலவச சேவையாகவே வழங்கப்பட்டன.

இதோடு நின்று விடவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு மற்றும் சுற்றாடல்களில் அன்றாடம் சேரும் குப்பைகளையும் கழிவுகளையும் லயத்திற்கு லயம் குப்பைக் குழிகள் வெட்டப்பட்டு அங்கு சேகரித்து நெருப்புமூட்டி அழிக்கப்படும். இதற்கென துப்பரவு தொழிலாளர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்புகள் தனியார் கம்பெனிக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின் தொழிலாளர்களுக்கு கிடைத்த மற்ற அனைத்து சலுகைகளும் இல்லா தொழிக்கப்பட்டுவிட்டன. சில தோட்டங்களில் கூட்டுறவு சங்கக் கடைகள் பெயரளவில் இயங்குகின்றன. இந்த தோட்டக் கூட்டறவு சங்கக் கடைகள் தொழிலாளர்களின் பங்கு பணத்திலேயே இயங்குகின்றன. தொழிலாளர்கள்தான் பங்குதாரர்கள். தொழிலாளர்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைப்பதில்லை.

அங்கு முகாமையாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் தோட்டக் காரியாலயத்தில் தலைமை எழுதுவினைஞராக இருப்பவரும் கூட்டாக இணைந்து நகரில் இருக்கும் ஒரு கறுப்புக்கடை முதலாளியை கைக்குள் வைத்துக் கொண்டு தரம் குறைந்த மலிவான பொருட்களைக் கொண்டு வந்து கூடுதலான விலைக்கு விற்கின்றனர். தொழிலாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட இக்கடைகளும் தொழிலாளர்களையே சுரண்டுகின்றன.

தொழிலாளர்களுக்கு மாதக்கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்கப்படுவதால் பொருட்களின் விலைகள் இரட்டிப்பாகவே இருக்கும். மாதக் கடைசியில் சம்பளம் வாங்கச் செல்லும் தொழிலாளர்கள் வெறும் கையுடன் விக்கித்துப் போகின்றனர்.

இது மட்டும் என்று நினைத்து விடக்கூடாது. தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் ஒரு வழியிலும் சுரண்டப்படுகின்றது.

அதாவது தோட்டங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்களாக கடமையாற்றுபவர்கள், கணக்குப் பிள்ளை மற்றும் கங்காணிமாரின் துணையுடன் பகல் கொள்ளையடிக்கின்றனர். தமக்கு வேண்டிய நம்பிக்கையாளர்களாகத்தெரிவு செய்து கைக்குள் வைத்துக்கொள்கின்றனர். இவர்கள் வேலைக்கு வந்தாலும் வராவிட்டாலும் இவர்களுடைய பெயர் பதியப்பட்டுவிடும். அதேவேளை தினசரி வேலை செய்யும் தொழிலாளர்கள் கொண்டுவரும் தேயிலை, றப்பர் எடைகளைக் குறைத்தும் வெட்டியும் வேலைக்கே வராத தமது கைத்தடிகளுக்கும் பெயர் போட்டு விடுவார்கள்.

மாதக் கடைசியில் சம்பளம் வழங்கப்படும் போது வேலைக்கே வராதவர்கள் கைநிறையச் சம்பளம் வாங்குகிறார்கள். தினசரி கஸ்ரப்பட்டவர்கள் வயிற்றெரிச்சலுடன் செல்வார்கள்.

இப்படி கள்ளத்தனமாகப் பெயர் போட்டு சம்பளம் வாங்கியவர்களின் பெயர் பட்டியலுடன் அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் கங்காணிமார் ஒருசிறு தொகையை சம்பந்தப்பட்ட நபருக்கு கொடுத்துவிட்டு எஞ்சியதை எல்லாம் வசூலித்து கணக்குப் பிள்ளையிடம் ஒப்படைத்துவிடுகின்றனர். இன்று தோட்டங்களில் கங்காணிமார்களாக இருப்பவர்கள் எப்படியோ ஒரு தொழிற் சங்கத்தின் கமிட்டித் தலைவராகவே இருப்பார். இந்த கங்காணி வேலைக்காகவே தோட்டங்களில் பல தொழிற் சங்கங்கள் உருவாக்கப்பட்டு தொழிலாளர்கள் பல கூறுகளாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டிய ஒன்று.

தொழிலாளர்களை ஒன்று சேரவிடாமல் பிரித்து வைத்து ஆளும் இந்த கங்காணிமார் எனும் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி கணக்குப்பிள்ளைமார் வீட்டில் தண்ணி அடித்து ஏழைத் தொழிலாளர்களின் உழைப்பை பங்கு போட்டுக் கொள்கின்றனர்.

இந்த கங்காணிமாரின் தலைவர்கள் தான் மாவட்ட மாநில மத்தியகுழு உறுப்பினர்களாகவும் நிர்வாக செயற்குழு உறுப்பினர்களாகவும் பதவிகளைப் பெறுகின்றனர். இவ்வாறு கங்காணிமார்களாகவும் தலைவர்களாகவும் இன்று வந்தவர்கள் தான் இன்று பல பெரிய தொழிற்சங்கத்தின் தலைவர்களாகவும் பொதுச் செயலாளர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருக்கின்றனர். எனவே, தொழிலாளர்களின் பிரச்சினைகளும் அவர்கள் எவ்வாறு சுரண்டப்படுகின்றார்கள் என்பதும் இந்த தலைவர்களுக்கு தெரியாத ஒன்று அல்ல. அது புதிதும் இல்லை.

இப்படி அடிமட்டத்தில் இருந்து வந்து பெரிய பதவிகளில் இருக்கும் தலைவர்கள் இன்று பழையதை எல்லாம் மறந்தவர்களாக சவால்விடுகின்றனர். இவர்கள் எல்லோருமே தொழிலாளர்களின் நன்மைகளுக்காகவே தொழிற்சங்க கூடாரங்களை அமைத்தவர்கள். எத்தனை கட்சிகளில் இருந்தாலும் அவர்களின் நோக்கம் ஒன்றுதானே. அதாவது தொழிலாளர் சேவை.

ஆனால், இப்பொழுது நடப்பது என்ன? இந்த தொழிலாளர்களின் தோழர்கள் நீயா? நானா? யார் பெரியவர் என்றும் கொம்பு சீவுகின்றனர். இவர்கள் தமது சுயலாபத்துக்காக எக்கேடு கெட்டும் போகட்டும் ஏன் இந்த ஏழைத் தொழிலாளர்களின் கழுத்தை நசுக்க வேண்டும்? தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் இன்னும் ஐந்து மாதங்களில் காலாவதியாகிவிடும். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. வழமையாகவே கூட்டு ஒப்பந்தக் கட்சிகள் நாம் ஒன்றும் செய்யவில்லை எங்களை குறை கூறுபவர்கள் முடிந்தால் பேரம் பேசட்டும் என்று கடைசி நேரத்தில் கூறுவார்கள்.

ஐயா! நீங்கள்செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் பல குறைபாடுகளும் தவறுகளும் காணப்படுகின்றன. தோட்ட நிர்வாகங்கள் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில்லை என்று நீங்களே ஒப்புக்கொள்கின்றீர்கள்.

தவறுகள் திருத்தப்படலாம் கூடிப் பேசுவதன் மூலம் குறைகள் களையப்படலாம். மனம் உண்டானால் இடம் இல்லாமல் போகாது நிச்சயம் வழி உண்டு.

வெறுமனே சம்பள உயர்வும் கூடுதல் இறாத்தலுக்கு கைக்காசு என்றும் இல்லாமல் நாம் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டி உள்ள சேமநல அடிப்படைத்தேவைகளையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஏன் உருவாக்கக்கூடாது என்பதுதான் இன்று நம்முன் நிற்கும் கேள்வி.

ஏன் இப்பொழுதே திட்டமிட்டு செயல்பட ஆரம்பிக்கக்கூடாது? நீங்களே ஏன் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்கள் கூட்டு ஒப்பந்தத்தை விமர்சிப்பவர்கள் என்று பிரித்துப்பார்க்கிறீர்கள்.

நாம் எல்லோருமே தொழிலாளர்களுக்கு சேவை செய்ய வந்தவர்கள். நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடி ஒரே மேசையில் அமர்ந்து மனம்விட்டுப் பேசுவோம். உறுதியான ஒரு கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவோம். அதை வைத்துக் கொண்டு தோட்டத் துரைமார் சம்மேளனத்துடன் பேரம் பேசுவோம் என்று பெரிய மனதுடன் அழைத்துப் பேசலாம் அல்லவா? இதை ஏன் நீங்கள் விரும்புவதில்லை. இப்படிச் செய்வதால் வெறும் தலைவர்களாக இருக்கும் நீங்கள் நாளை மக்கள் தலைவர்களாக வரவேற்கப்படுவீர்கள்.

இப்பொழுதும் ஒன்றும் காலம் கடந்து விடவில்லை. நிறையவே இருக்கின்றது. இதை விட்டுவிட்டு நாங்கள் ஒதுங்கிக்கொள்கிறோம். முடியுமானால் நீங்கள் பேசிப்பாருங்கள் என்று வீம்பு பேசுவது பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போல் அல்லவா இருக்கின்றது. நீங்கள் திருந்தவே மாட்டீர்களா?

***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லோக்சபா தேர்தலுக்கு

# முழுவீச்சில் தயாராகும் ஜெயலலிதா!

*கடைசி நேரத்தி லாவது ஜெயலலிதாவை மனமாற்றிவிடலாம் எதற்கும் பொறுமையாக இருங்கள் என பி.ஜே.பியின் தேசியத் தலைவர்கள் தமிழக பி.ஜே.பி தலைவர்களை அறிவுறுத்தியுள்ளனர். எனவே, ஆட்சிக்கு வந்து 3 மாதத்தில் மின்வெட்டினை வெட்டியாடுவேன் என ஆசைகாட்டிய ஜெயலலிதா இன்னும் இதில் தவறுவது ஏன் என்பது பற்றி தமிழக பி.ஜே.பியினர் அடக்கியே வாசிக்கின்றனர். தேசியளவில் காங்கிரஸ் கட்சியை வசைபாடுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.*





அடுத்த லோக்சபா தேர்தல் 2014 ல் தான் நடக்கவேண்டியது என்றாலும் ஆட்சியிலுள்ள காங்கிரஸ் ஊழல் குற்றச்சாட்டில் திண்டாடி வருவதால், முன்கூட்டியே தேர்தல் வரலாமென காங்கிரஸ் கட்சி கூட எதிர்பார்த்து வருகின்றது. எதிர்கட்சிகளுக்கு இது விஷயம் இன்னும் சந்தோஷம் தரும் விடயம் என்பதால் அவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் தயாரிப்புகளைத் தொடங்கியுள்ளனர். மேற்கு வங்க முதல்வரும் காங்கிரசின் கூட்டணியிலிருந்து அண்மையில் விலகியவருமான மம்தா பானர்ஜியும் தேர்தலுக்கு தயாராகும்படி தன் கட்சியினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மம்தா பானர்ஜியை விட அரசியலில் மூத்தவரும் வயதில் மூத்தவருமான ஜெயலலிதாவிற்கு இத்தேர்தல் மம்தாவை விடவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. தற்போது 64 வயதாகும் ஜெயலலிதா 2014 இல் 66 வயதை எட்டியிருப்பார். அதற்கடுத்த லோக்சபா தேர்தல் 2019 இல் வரும்போது ஜெயலலிதாவின் வயது 71 ஆகிவிட்டிருக்கும். அந்த வயதில் அவரால் ஓடியாடி மத்திய அரசியலின் சுறுசுறுப்பான தேவைக்கேற்ப செயலாற்றமுடியுமா என்பது சந்தேகமே. எனவே, இந்தமுறை 2014இல் அல்லது ஒருவேளை அதற்கு முன்பே கூட நடக்கக்கூடிய தேர்தல் ஜெயலலிதாவுக்கு 'வாழ்வா சாவா' தேர்தல்தான் எனலாம். ஏனெனில் கலைஞர் கருணாநிதி போல வெறுமனே தமிழக முதல்வர் பதவியுடன் மட்டும் திருப்திப்படுபவரல்ல ஜெயலலிதா. அவரது அரசியல் கனவு பிரதமர் நாற்காலியே ஆகும். இது அவரது ராஜகுரு சோவினால் ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டது. (இப்போது தமிழகத்தின் 40 லோக்சபா தொகுதிகளும் தன் வசமாகவேண்டுமென விரும்பும் ஜெயலலிதா, அதற்காக இப்போது முதற்கொண்டே அமைச்சர்களை விரட்டிவிரட்டி வேலைவங்கத் தொடங்கியுள்ளார். ஒவ்வொரு லோக்சபா தொகுதிக்கும் கட்சியளவில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் வேலையை தொடங்கவும் உத்தரவிடப்பட்டுவிட்டது. தனித்துப் போட்டி என்ற கோதாவில் அ.தி.மு.கவினர் தயாரிப்பில் இறங்கியுள்ளனர். அ.தி.முகவுடன் கூட்டணி கிடைக்காதா என வாய்பிளந்து ஆர்வமாக காத்துக் கிடக்கும் தமிழக மற்றும் தேசிய பி.ஜே.பி கட்சியினருக்கு இது ஏமாற்றம் தரும் விடயம் என்பது வேறுகதை.

எனினும் கடைசி நேரத்திலாவது ஜெயலலிதாவை மனமாற்றிவிடலாம் எதற்கும் பொறுமையாக இருங்கள் என பி.ஜே.பியின் தேசியத் தலைவர்கள் தமிழக பி.ஜே.பி தலைவர்களை அறிவுறுத்தியுள்ளனர். எனவே ஆட்சிக்கு வந்து 3 மாதத்தில் மின்வெட்டினை வெட்டியாடுவேன் என ஆசைகாட்டிய ஜெயலலிதா இன்னும் இதில் தவறுவது ஏன் என்பது பற்றி தமிழக பி.ஜே.பியினர் அடக்கியே வாசிக்கின்றனர். தேசியளவில் காங்கிரஸ் கட்சியை வசைபாடுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

இதேவேளை ஜெயலலிதாவை பொறுத்தவரை கட்சியினரை ஊக்கப்படுத்த வாரியத் தலைவர் முதலான அரசுப் பதவிகளை கட்சியினருக்கு வாரி வழங்கத் தீர்மானித்துள்ளார். தேர்தலில் அ.தி.முக வெல்லாத தொகுதிகளுக்குரிய அமைச்சர்களின் தலை உருளும் என்ற செய்தியும் அதிக வாக்கு எண்ணிக்கை வித்தியாசத்தில் அ.தி.மு.க வெல்லும் தொகுதி அமைச்சர்களுக்கும் கட்சி நிர்வாகிகட்கும் முறையே சிரேஷ்ட அமைச்சு பதவிகளும் கட்சி மற்றும் அமைச்சுப் பதவிகளும் தரப்படும் என்ற செய்தியும் தெளிவாக விடுக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா காரியத்தில் இறங்கிவிட்டார் என்பது கட்சியினருக்கு தெளிவாகத் தெரியும். ஜெயலலிதாவின் எதிரிகளுக்குமே இது தெரிந்த விஷயம்தான். அதனால் தி.மு.க அதன் பங்குக்கு டெசோ மாநாடும் அதன் நகலை எடுத்துக் கொண்டு ஸ்டாலினும் டி.ஆர் பாலுவும் ஐ.நா பயணம், நவநீதம் பிள்ளையுடன் சந்திப்பு என தடல் புடலாக ஸ்டண்ட் காரியங்களை மறுமுனையில் முடுக்கிவிட்டுள்ளது. ஏனெனில் தி.மு.க தனது கடந்த ஆட்சி சாதனை என்றோ, தற்போது மத்திய அமைச்சரவையிலுள்ள தனது அமைச்சர்களின் சாதனை என்றோ கூவிக்கூவி விற்க எதுவுமே கலைஞர் வசமில்லை.

லோக்சபா தேர்தலில் என்ன கோஷம் கிடைக்கும் என மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்ட கலைஞரிடம் வசையாகச் சிக்குண்டவிடயம் தான் ஈழத்தமிழர் விவகாரமாகும். வெளுத்து வாங்குவோம் இதை வைத்தே தேர்தலில் வெல்வோம் என்பது தான் தி.மு.கவின் திட்டம். முடிந்தால் தே.மு.திகவையும் வளைப்பது என்பது கலைஞருடைய மேலதிக உபாயமாகும். ஆனால் தே.மு.தி.கவை உடைத்து எதிர்கட்சித் தலைவர் பதவியை விஜய்காந்திடமிருந்து பறித்து தி.மு.கவுக்கு தருவது மூலம் அவ்விரு கட்சிகளுக்கும் சிண்டு முடிய ஜெயலலிதா முயல்வதும் கலைஞருக்கு தெரியாததல்ல.

அதே நேரம் காங்கிரசுடனான கூட்டணியை தொடர்வதா என்ற சிக்கலும் தி.மு.கவுக்கு உள்ளது. அ.தி.முகவுக்கு சமிக்ஞைகளை அனுப்ப காங்கிரஸ் தயார் என்பதும் கலைஞருக்கு தெரியவந்துள்ளது. காங்கிரசிடம் மண்டியிட ஜெயலலிதா தயாரில்லை என்பதுடன் போக்கிடமற்ற கட்சியாகவே காங்கிரஸ் உள்ளது என்பது எவருக்கும் தெரிந்த உண்மைகளாகும். தே.மு.தி.கவுடன் சேர்வது முடியாவிட்டால் தி.மு.க கூட்டணியையே தொடர்வது என்பதைத் தவிர காங்கிரசுக்கு வேறு வழியில்லை.

ஆனால், காங்கிரசுமே கூட முன்கூட்டிய தேர்தலுக்கு தயாராகி வருவது அதன் சமீப நடவடிக்கைகளில் தெளிவாகியுள்ளது. கட்சி தோற்கக்கூடும் என்பதான உணர்வு சோனியாவிடமும் ராகுலிடமும் தெளிவாகவே உள்ளது. எனவே பல்வேறு பேரணி, கூட்டம், தொகுதிவிஜயம் என்ப வற்றை காங்கிரஸ்கட்சி நாடாளாவிய ரீதியில் முடுக்கிவிட்டுள்ளது. இவ்வாறு இருந்தபோதும் தமிழகத்தில் காங்கிரசின் நிலை தொடர்ந்தும் பரிதாபகரமாகவே உள்ளது. பல கோஷ்டிகளாக பிரிந்துள்ள கட்சி பல படிகளை இன்னும் தாண்டினாலே லோக்சபா தேர்தலில் தேறமுடியும். கூட்டணியும் சரியாக அமையாவிடில் இன்னும் சிக்கல்கள் ஏற்படலாம்.

தமிழக பி.ஜே.பி.யின் நிலை தற்போது ஏறுமாறாகவே உள்ளது. விஜய்காந், பாட்டாளி மக்கள் கட்சி, வைகோவின் மறுமலர்ச்சி தி.மு.க என பல கட்சிகளும் பி.ஜே.பியுடன் மறைமுக பேச்சுகளில் இறங்கி இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. ஆட்சியமைக்கக்கூடிய தேசிய கட்சி என்பதால் அக்கட்சியின் மவுசு அதிகரிப்பது என்பது உண்மையே. தி.மு.கவுமே கூட பி.ஜே.பியுடன் அணிசேர்வதன் கடைசிக்கட்ட திட்டத்தை தயாராகவே வைத்துள்ளதாம்.

ஆனால் அ.தி.மு.கவுடனான கூட்டணிக்கே பி.ஜே.பியின் தேசியதலைமையும் தமிழக தலைவர்களும் முன்னுரிமை தரும் விடயமாக கருதுகின்றனர். மாநில ஆட்சியில் அ.தி.மு.க இருந்தபோதும் அக்கட்சிக்கு அவ்வளவாக கெட்ட பெயர் இல்லை என்பதால் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்வதால் ஆட்சி இயந்திரத்தின் அனுகூலங்களை உரிமை கொண்டாடும் அதேநேரம் ஆளும்கட்சியின் கெட்டுப்போகாத பெயரையும் பயன்படுத்தலாம் என்பதும் பி.ஜே.பியின் சிந்தனையாகும். ஆனால் தனித்து நின்று 40 இடங்களை வென்று பின்பு மத்தியில் யாருக்கும் பெரும்பான்மை இராதவேளையில் பேரம்பேசி 3 வது அணிமூலம் பிரதமராவது என்ற தன் 'மாஸ்டர் பிளானை' கைவிட ஜெயலலிதா தயாரில்லை. இப்போதைக்கு அவரது காட்டில் மழை. மேலும் இப்போது விட்டால் எப்போதுமே பிரதமராக முடியாது என்பதும் ஜெயலலிதாவுக்குத் தெரியும். பி.ஜே.பியுடன் கூட்டணி வைத்தால் அதன் கூட்டாளிகளான ஜெ.டி.பி, சிவசேனா, அகாலிதலம் முதலிய கட்சிகள் போல பி.ஜே.பியை சேர்ந்த ஒருவரையே பிரதமராக ஏற்க நேரிடும் என்பதை ஜெயலலிதா அறியாதவரல்ல.

***

**அபிஜித்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# காதல் கண்ணாமூச்சி விளையாட்டா?

**உ.வேதநாயகம், உடுவில்.**
கே:– சேவையிலிருந்து ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெறத்தொடங்கியது முதல் வீட்டில் எனக்கு மதிப்பேதும் இல்லையே?
ப:– சம்பளத்தை விட பென்சன் குறைவாக இருப்பதால் வீட்டில் மதிப்பும் குறைவது இயல்புதானே?



**த.மணிவாசகம், திருமலை.**



கே:– இப்போதெல்லாம் என் மனைவி எடுத்ததற்கெல்லாம் என்மீது எரிந்து விழுகிறாளே?
ப:– கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமும் இருக்கும் என்று என்னை நானே தேற்றிக்கொள்வது போல நீரும் உம்மை தேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

**வே.இளங்கோ, மன்னார்.**
கே:– காதலை வெறும் கண்ணாமூச்சி விளையாட்டாகக் கருதுகிறாளே எனது காதலி?
ப:– கவனம்; எங்கேயாவது வழுக்கி விழுந்து விடப்போகிறாள். எச்சரித்துவையும்



**உ.வேதநாயகம், உடுவில்.**
கே:– சேவையிலிருந்து ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெறத்தொடங்கியது முதல் வீட்டில் எனக்கு மதிப்பேதும் இல்லையே?
ப:– சம்பளத்தை விட பென்சன் குறைவாக இருப்பதால் வீட்டில் மதிப்பும் குறைவது இயல்புதானே?



**த.மணிவாசகம், திருமலை.**
கே:– இப்போதெல்லாம் என் மனைவி எடுத்ததற்கெல்லாம் என்மீது எரிந்து விழுகிறாளே?
ப:– கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமும் இருக்கும் என்று என்னை நானே தேற்றிக்கொள்வது போல நீரும் உம்மை தேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.



**வே.இளங்கோ, மன்னார்.**
கே:– காதலை வெறும் கண்ணாமூச்சி விளையாட்டாகக் கருதுகிறாளே எனது காதலி?
ப:– கவனம்; எங்கேயாவது வழுக்கி விழுந்து விடப்போகிறாள். எச்சரித்துவையும்

**க.அறிவழகன், கொழும்பு – 06.**
கே:– குதர்க்கமான பதில் வேண்டாம். தாயா, தாரமா உயர்ந்தது என்ற எனது சந்தேகத்தைத் தீர்த்துவையும் பித்தரே?
ப:–தாய்க்குப் பின் தாரம் என்ற முதுமொழி உமது சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும்





**து.துஷ்யந்தன், மட்டக்களப்பு.**
கே:– எனது அம்மாவிடம், பாராட்டுப்பெற்றுக் கொள்ள என் மனைவி எப்படி நடந்துகொள்ள வேண்டும் பித்தரே?
ப:–வாத்தியார் மெச்சிய மாணாக்கனும் இல்லை. மாமியார் மெச்சிய மருமகளும் இல்லை என்பதெல்லாம் இந்தக் காலத்துக்குப் பொருத்தமில் லாத பழமொழி இந்தக் காலத்துப் பெண்களுக்குத் தத்தமது மாமிமாரை எப்படி வழிக்குக் கொண்டுவருவ தென்ற இரகசியத்தை கணவர்மார் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லவே இல்லை.




**செ.இந்திராணி, சித்தங்கேணி.**
கே:– ஒரு அறிவாளி எப்போது முட்டாளாகிறான் பித்தரே?
ப:–மற்றொருவரை முட்டாள் என்று தப்புக் கணக்குப் போடும் எந்தவொரு அறிவாளியும் தன்னைத்தானே முட்டாள் ஆக்கிக்கொள்கிறான்.



**து.கண்ணன், பூநகரி.**
கே:– உண்மையில் தாலி ஒரு பெண்ணுக்கு

## சொற்சிலம்பம் போட்டி இல: 547



அனுப்புபவர் பெயர் :..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 547

சொற்சிலம்பம் 547 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 5 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள் ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### மேலிருந்து கீழ்

01. ஒரு பருப்பு வகை
02. தேர்க்கயிறு
03. ஒன்றாகக் குவிக்கப்பட்டதால் வருவது
04. கணிதக் குறியீடு
05. வானத்தில் தவழ்ந்து செல்வது
06. தன்னுடைய
09. உயர்திணை, தன்மை, பன்மை, பால்பகா
11. கூடவும்
13. கை கால்களுக்கு பெண்கள் பூசுவது
14. சிலப்பதிகார நகரம்
15. சொல்லுதல்
17. அசைச்சொல்
18. எங்களுடையது
19. நவீன
23. காந்திஜியின் கடைசி வார்த்தை

### இடமிருந்து வலம்

01. துப்பாக்கி
04. கூடியிருக்கின்ற
07. ஒரு திசையின் சுருக்கம்
08. பிள்ளையார்
10. கண்ணுக்கினிய
12. கற்றுக்கொள்
15. அழை
16. காற்று
18. சுறுசுறுப்பான மிகச்சிறிய பிராணி
20. கயிறு
21. சமய
22. பலம்
24. கனகச்சிதம்
25. தயிருக்குத் தம்பி

## சொற்சிலம்பம் போட்டி இல: 545 விடைகள்

**மேலிருந்து கீழ்**
01. ஏகாதசி, 02.கவனிப்பு, 03. போல, 04.கர்வம், 05.பின்னம், 06.குறும்புத்தனம், 08.கதகளி, 12.பல்லக்கு, 15.உன், 16.உதவி, 18.வகு, 19.விகட, 21.மற, 22.தரு

**இடமிருந்து வலம்**
01. ஏகபோகம், 05. பிகு, 07.காவலர், 08.கன்று, 09. தனி, 10. வந்தனம், 11. சிப்பம், 13. கம்பு, 14. புல், 15.உளி, 17. லவன், 19. வித, 20.தமக்கு, 22.தகன, 23.வெறுத், 24. விரும்

## போட்டி இல. 545 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** வே.கார்த்திகேசு, விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

**2ஆம் பரிசு** நா.இரத்தினராசா, அளம்பில், முல்லைத்தீவு.

**3ஆம் பரிசு** கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா, ஓய்வு நிலை கிராம அலுவலர், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) மூ.முத்துராஜா,**
திகிரி லேன்,
தும்பளை, பருத்தித்துறை.
**(2) பி.செல்வநாயகம்,**
இல.108-5/3 மனிங் பிளேஸ்,
கொழும்பு -06.
**(3) சின்னையா செல்வராஜ்,**
இல.9/5 பி.10, மஜீத் பிளேஸ்,
அவிசா வெலைவீதி, வெல்லம்பிட்டிய.
**(4) லசந்த பிரியன்,**
இல-64/22. கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.
**(5) வி.கீர்த்தனா,**
அனிஞ்சிலடி ஒழுங்கை,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.
**(6) அ.இ. பாக்கியராஜா,**
இல-88/1 பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு- 06.
**(7) கோ.பிறேமாவதி,**
உப்புக்குள வீதி,
ஊர்காவற்றுறை.
**(8) சி.உதயகுமார்,**
கைதடி மேற்கு,
கைதடி.
**(9) திருமதி சுரேகா அனுரமணன்,**
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
**(10) சி.கிஷ்ணவேள்,**
'வசந்த பவனம்',
மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்



யாழ்ப்பாணக் கோட்ட 16 வயதுப் பிரிவினருக்கான கால்ப்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதியது. தொடக்கம் முதல் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இருந்தும் கிடைத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை அந்த அணி தவறவிட்டது. முதல் பாதி ஆட்டம் கோல் எதுவும் போடத நிலையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் அணியின் ஆதிக்கம் வலுப்பெற்றது. சரியான கோல் அடிக்கும் வாய்ப்புக்களை அந்த அணி சொதப்பியது. இறுதி வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

போட்டியின் சம்பியனை தீர்மானிக்க ஆட்டம் பெனால்டி உதையை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. பெனால்டி உதைகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி 7:6 என்ற கோல் கணக்கில் வென்றது.

## உலகக்கோப்பையை சொந்த மண்ணில் வெல்லத் தெரியாதவனுக்கு



சர்வதேசக் கிரிக்கெட் சபையால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களானது துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக சாதகத்தன்மையையும், பந்துவீச்சாளர்களுக்கு எதிரானவையுமாகக் காணப்படுவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய மாற்றங்களின்படி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பவர்பிளே அல்லாத ஓவர்களில் 30 யார் வட்டத்திற்கு வெளியே 4 வீரர்களை மாத்திரம் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இது 5 களத்தடுப்பாளர்களாகக் காணப்பட்டது.

இந்த மாற்றம் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பெரிதும் சாதகமாகக் காணப்படுவதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். தான் ஒரு துடுப்பாட்ட வீரர் என்ற போதிலும், இந்த மாற்றம் கிரிக்கெட்டிற்கு எதிரானது எனவும், சுழற்பந்து வீச்சாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முதலிடத்தில் ஜோகோவிச்

டென்னிஸ் அரங்கில் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச டென்னிஸ் வாரியம் வெளியிட்டுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடால், டேவிட் பெரர் ஆகியோர் டாப்-5 வரிசையில் நீடிக்கின்றனர்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் 5வது இடத்தில் இருந்து 4வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மகளிருக்கான ஒற்றையர் தரவரிசையில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் ஆகியோர் முதல் மூன்று இடங்களில் நீடிக்கின்றனர்.

இந்தியாவின் சானியா மிர்சா ஒற்றையரில் 275வது இடத்தில் இருந்து 280வது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஆனால் இவர் இரட்டையர் பிரிவில் 12வது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.



## அவுஸ்திரேலியா விருதைப் பெற்றார் சச்சின்



உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கருக்கு ஆஸ்திரேலியாவின் உயரிய விருதான ஓர்டர் ஒப் அவுஸ்திரேலியா விருது வழங்கப்படும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஜுலியா கடந்த மாதம் அறிவித்தார்.

இதற்கு அந்நாட்டு எம்.பி ஒருவர் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹைடன் எதிர்ப்பு தெரிவித்தனர். மற்றொரு முன்னாள் வீரர் தில்பானிஸ்ட் ஆதரவு தெரிவித்திருந்தார். இந்நிலையில் சச்சின் டெண்டுல்கருக்கு ஓர்டர் ஒப் அவுஸ்திரேலியா விருது வழங்கப்பட்டது. மும்பையில் நடந்த நிகழ்ச்சியில், அவுஸ்திரேலிய மந்திரி சிமோன் கிரியன் இந்த விருதை சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கினார்.

இதன்மூலம் அவுஸ்திரேலியாவின் இந்த உயரிய விருது பெறும் 2வது இந்தியர் என்ற பெருமையையும் சச்சின் பெற்றுள்ளார். இதற்கு முன்பு முன்னாள் அட்டர்னி ஜெனரல் சோலி சொராப்ஜி இந்த விருதினைப் பெற்றார்.

வலதுகை ஆட்டக்காரரான சச்சின் இதுவரை 190 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 15533 ஓட்டங்களும், 463 ஒருநாள் போட்டிகளில் 18426 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

மொத்தம் 100 சதங்கள் அடித்து புதிய உலக சாதனையையும் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில் அறிமுகமாகும் பேஸ்புக் கைப்பேசிகள்



சமூக வலைத்தளங்கள் மத்தியில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட பாவனையாளர்களை தன்னகத்தே கொண்டு அசைக்க முடியாத அரசனாக பேஸ்புக் திகழ்கின்றது.


இத்தளமானது HTC நிறுவனத்துடன் இணைந்து தனது உற்பத்தியில் உருவாக்கப்பட்டு வரும் கைப்பேசிகளை அறிமுகப்படுத்துவதற்கு தயாராகி வருகின்றது.

Opera UL எனும் பெயரைத் தாங்கி வரவுள்ள இக்கைப்பேசிகள் Android 4.1.1 Gelly Bean இயங்குதளத்தினைக் கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுவருகின்றது.

தவிர இக்கைப்பேசிகள் 1280 x 720 Pixels Resolution கொண்ட HD தொடுதிரையினை உள்ளடக்கியதாகவும், 1.4GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor இனையும் கொண்டுள்ளது.

மேலும் இக்கைப்பேசிகளில் Adreno 305 graphic தொழில்நுட்பமும் உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## VLC Media Playerன் புதிய பதிப்பினை தரவிறக்கம் செய்வதற்கு




**VLC Media Player** ஆனது ஏனைய மென்பொருட்களை விடவும் பலவகையான வீடியோ போர்மட்களை இயக்கக்கூடியவாறு காணப்படுவதுடன் மேலும் பல சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றது.

இதனால் அதிகளவான மக்கள் VLC Media Playerஐ பயன்படுத்துகின்றனர்.

எனினும், இதன் முன்னைய பதிப்புக்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகவும், மேலும் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தும் முகமாகவும் தற்போது VLC Media Player - இன் புத்தம் புதிய பதிப்பான VLC 2.0.4 தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய பதிப்பின் மூலம் BludRay, DVD, HLS, Ogg மற்றும் MKV போன்ற கோப்புக்களையும் இயக்கக்கூடியவாறு காணப்படுவதுடன் Youtube, Vimeo, Koreus, Soundcloud போன்ற தளங்களில் உள்ள வீடியோ மற்றும் ஓடியோ கோப்புக்களையும் இயக்கும் வசதிகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலிடம் பிடித்த சாம்சங் கலக்ஸி எஸ் 3




இந்த ஆண்டின் 3வது காலாண்டில் சாம்சங்கின் கலக்ஸி எஸ்3 ஸ்மார்ட்போனின் விற்பனை அப்பிளின் 4எஸ் ஸ்மார்ட்போனின் விற்பனையை முறியடித்திருக்கிறது. இதன்மூலம் கலக்ஸி எஸ்3 முதல் முறையாக ஸ்மார்ட்போன் சந்தையில் முதலிடத்தைப் பிடித்திருப்பதாக ஒரு ஆய்வு நடத்தும் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

மேலும் அப்பிள் தற்போதுதான் தனது ஐபோன் 5ஐ களமிறக்கியது. அப்படி இருந்தும் சாம்சங் எஸ்3 விற்பனையில் அப்பிளை முந்தி இருப்பதாக ஸ்ட்ராட்டஜி அனலடிக்ஸ் என்ற நிறுவனம் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால் ஐபோன் 5 மற்றும் ஐபோன் 4எஸ் ஆகியவை இணைந்து காலக்ஸ் எஸ்3 விற்பனையை முந்தி இருப்பதாகவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

ஆனால் விரைவில் ஐபோன் 2 ஸ்மார்ட்போன் சந்தையில் முதலிடத்தைப் பிடிக்கும் என்று அந்த ஆய்வு ஆருடம் கூறுகிறது.

## கூகுள் குரோம் மூலம் தொலைவிலுள்ள கணனிகளை கட்டுப்படுத்துவதற்கு




ஒரு கணனியிலிருந்து பிறிதொரு கணனியின் Desktop - இன் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் அல்லது பிறிதொரு கணனியை தொலைவிலிருந்து கட்டுப்படுத்துவதற்கும் Teamviewer போன்ற பிரபலமான மென்பொருட்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு மத்தியில் கூகுள் நிறுவனமானது தனது குரோம் உலாவியின் மூலமாக இச்செயற்பாடுகளை மேற்கொள்ளவதற்காக Chrome Remote Desktop எனும் Application ஒன்றினை Google Webstore-இல் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த Application ஆனது புதிதாக அறிமுகமான குரோம் பதிப்புக்களில் மட்டுமே செயற்படக்கூடியதாகக் காணப்படுவதுடன் Windows, Mac, Linux இயங்குதளங்களைக் கொண்ட கணனிகளிலும் இது செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த Application கட்டுப்படுத்துவதற்காக எதிர்பார்க்கும் அனைத்து கணனிகளிலும் நிறுவியிருக்க வேண்டியது அவசியமாகும்.

இதனை கணனியில் நிறுவி முதன் முறையாக செயற்படுத்தும் போது மின்னஞ்சல் முகவரியினூடான ஒப்புதலை வழங்குமாறு கேட்கும்.

அதன் பின்னர் Start பொத்தானை அழுத்தி இணைப்பினை Enable செய்யவும். தொடர்ந்து மின்னஞ்சல் முகவரி மூலம் பெறப்பட்ட PIN இலக்கத்தினை 2 தடவைகள் உட்செலுத்தி OK பொத்தானை அழுத்தவும்.

பின்னர் YES பொத்தானை அழுத்துவதன் மூலம் Chrome Remote Host Service-இனை நிறுவிக் கொள்ளவும். தொடர்ந்து கூகுள் கணக்கு மற்றும் PIN இலக்கத்தினை பயன்படுத்தி மீண்டும் இணைப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இப்போது நீங்கள் கட்டுப்படுத்த வேண்டிய அல்லது இணைப்பிலுள்ள கணனியினை My Computers பகுதியில் காணலாம்.

## SHARP அறிமுகப்படுத்தும் Sharp Aquos Phone SH930W கைப்பேசிகள்

இலத்திரனியல் சாதனங்களில் உற்பத்திக்குப் பெயர் போன Sharp நிறுவனம் தற்போது கைப்பேசி உற்பத்தியிலும் கால்தடம் பதித்துள்ளது.

இதன் அடிப்படையில் Android 4.1 Gelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடிய Sharp Aquos Phone SH930W கைப்பேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

இவற்றின் திரையானது IGZO, HD தொழில்நுட்பத்தில் அமைந்த 5 அங்குல அளவுடையதாகக் காணப்படுவதுடன் 1.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor-இனையும் கொண்டுள்ளன.

2G, 3G வலையமைப்பு தொழில்நுட்பத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசிகளில் microSD card மூலமாக சேமிப்பு திறனை மாற்றியமைத்துக் கொள்ளும் வசதியும் காணப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொண்டாடப்படும் என்று ஐ.நா. அறிவித்துள்ளது. இதுகுறித்து, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனின் சிறப்புத் தூதரும் (சர்வதேச கல்வி மேம்பாட்டுப் பிரிவு) இங்கி லாந்து முன்னாள் பிரதமரு மான கார்டன் பிரவுன் கூறுகையில், மலாலாவை போல் உலகளவில் பள்ளி செல்லும் உரிமை மறுக்கப்படும் பெண் குழந்தைகளுக்கு ஆதரவாக, நவம்பர் 10ம் தேதி மலாலா தினம் கொண்டாடப்படும். கல்வி கற்க ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் உரிமை உள்ளது.

இதை வலியுறுத்தும் வகையில், பாகிஸ்தான்

ஐக்கிய நாடுகள்: ஆண்டுதோறும் நவம்பர் 10ம் தேதி, பாகிஸ்தான் சிறுமி மலாலாவின் தினமாக கொண்டாடப்படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் அறிவித்துள்ளார். தீவிரவாதிகளால் சுடப்பட்டு உயிர் பிழைத்த மலாலா, தனக்கு ஆதரவளித்த உலக மக்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறாள். பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் வசிப்பவள் மலாலா யூசப்ஸாய். ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் பெண்கள் படிக்க கூடாது, பள்ளிக்குச் செல்ல கூடாது, ஆண்களுடன் பேசக் கூடாது என்று தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர்.

அதை எதிர்த்து தனது 11 வயதில் மலாலா பகிரங்கமாக கட்டுரைகள் எழுதத் தொடங்கினாள். தொடர்ந்து தீவிரவாதத்தை எதிர்த்தும் பெண் கல்விக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வந்தாள். இதில் ஆத்திரம் அடைந்த தலிபான் தீவிரவாதிகள் கடந்த மாதம் 9ம் தேதி, மலாலா பள்ளி செல்லும் போது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். கல்விக்காக போராடிய சிறுமி மீது தீவிரவாதிகள் நேரடியாக தாக்குதல் நடத்தியது உலக நாடுகளை அதிர்ச்சி அடைய வைத்தது. மலாலா உயிர் பிழைக்க உலக மக்கள் வேண்டிக் கொண்டு பெரும் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில், பெண் கல்விக்காகப் போராடி வரும் மலாலாவை கவுரவப்படுத்தும் வகையில், ஆண்டு தோறும் நவம்பர் 10ம் தேதி மலாலா தினம்

சிறுமி உலகச் சின்னமாகத் திகழ்கிறாள் என்றார். ஐ.நா. வெப்சைட்டில் பான் கி மூன் வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில், உலகளவில் 6.10 கோடி குழந்தைகள் பள்ளி செல்வதில்லை. அவர்களின் உரிமைகளுக்காக பேசி வருகிறாள் மலாலா. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. கல்வி ஒன்றுதான் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும். பொறுமைக்கும் சர்வதேச குடியுரிமைக்கும் வழி. குழந்தைகளுக்கு கல்வி வழங்கும் ஐ.நா.வின் பிரசாரத்தில் உலக நாடுகள் பங்கேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து பிர்மிங்காம் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வரும் சிறுமி மலாலா, தான் உயிர் பிழைக்க உலகளவில் வேண்டிய கோடிக்கணக்கான மக்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்திருக்கிறாள். மருத்துவமனை அறிவிப்புப் பலகையில் ஆயிரக்கணக்கான மக்கள் மலாலாவுக்கு பாராட்டு தெரிவித்து எழுதிவிட்டுச் சென்றுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் பரிசுகள், வாழ்த்து அட்டைகளை அனுப்பிய வண்ணம் உள்ளனர். இதனால் நெகிழ்ந்து போயிருக்கும் மலாலா சார்பில் அவளுடைய தந்தை ஜியாவுதீன், உலகளவில் மக்கள் அளித்த ஆதரவு, மலாலாவுக்கு கூடுதல் பலத்தை அளித்துள்ளது. இதற்காக மனப்பூர்வமாக மலாலாவும் எங்கள் குடும்பமும் நன்றி தெரிவித்து கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## ஆங்கில அகர வரிசைப்படி அமைந்த கட்டிடதொகுதி.!







நீங்கள் எத்தனையோ விதமான அசத்தல் கட்டிடங்களை பார்த்திருப்பீர்கள். இன்று நீங்கள் பார்க்கப் போவது இதுவரை பார்த்திராத ஒரு வித்தியாசமான அழகான கட்டடத்தொகுதி. ஆம் ஆங்கில அகர வரிசைப்படி அமைந்துள்ளது இந்தக்கட்டிடத்தின் ஒவ்வொரு அடுக்கின் வெளிப்புறத்தோற்றமும்.

அதாவது கட்டிடத்தின் வெளிப்பகுதி- யன்னல் இருக்கவேண்டிய வெளிப்பகுதி ஒவ்வொன்றும் ஆங்கில அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளது. வெளியில் இருந்து பார்க்கையில் மிகவும் அழகாக இது காணப்படுகிறது. இது ஆம்ஸ்டர்டாமில் அமைந்துள்ளது. எனினும் இன்னும் பூரணமாக கட்டுமான பணிகள் நிறைவடையவில்லை எனத் தெரிகிறது. 2012 இறுதிக்குள் இது முற்றிலும் பூர்த்தியாகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.


இக்கட்டத் தொகுதி ஒரு துறைமுகப்பகுதியை அண்டி கட்டப்பட்டுள்ளதால் இதற்கு மிகுந்த வரவேற்பும் அதிக போட்டியும் காணப்படுகிறதாம். இந்த அழகிய கட்டடத்தின் மாதிரி மற்றும் உண்மையான தோற்றங்களை நீங்களும் படங்களில் பார்த்து ரசிக்கலாம்.



## பிரமாண்டமான பூக்கள் திருவிழா



நெதர்லாந்தில் வருடந்தோறும் பிரம்மாண்டமான முறையில் மலர்கள் அணிவகுப்பு இடம்பெறுவது வழமையாகும். இதன் போது லட்சக்கணக்கான மலர்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அழகிய விதவிதமான உருவங்களை தாங்கிய வாகனங்கள் அங்குள்ள வீதிகளை வலம்வருமாம். அதுமட்டு மின்றி வீதிகள், பாலங்கள் இவற்றையும் பூக்களால் அலங்கரித்து வைப்பார்களாம். இதனைப் பார்ப்பதற் கென்றே ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிவிடுவார்களாம்.




## காசோலை மற்றும் பணத்தை ஏற்கும் ஏ.டி.எம்.

பணம் மற்றும் காசோலைகளை செலுத்தினால், அதை ஏற்று வாடிக்கையாளர் கணக்கில் சேர்க்கும், புதிய ஏ.டி.எம்., இயந்திரம் ஆஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, பரவலான பயன்பாட்டில் உள்ள ஏ.டி.எம்., இயந்திரங்களில், பண பட்டுவாடா மட்டும் நடக்கிறது. இருப்பினும், வங்கிகளில் பணத்தை செலுத்த, நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், ஆஸ்திரேலியாவில் உள்ள வங்கிகள், பணத்தையும், காசோலைகளையும் ஏற்றுக் கொள்ளும் விதத்திலான ஏ.டி.எம்., இயந்திரங்களை அறிமுகப்படுத்தி உள்ளன.

ஆஸ்திரேலியாவின் கொமன்வெல்த் வங்கி நிர்வாகி, மைக்கேல் கேன்ட், இது குறித்து கூறியதாவது: நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள, புதிய ஏ.டி.எம்., இயந்திரம், நீங்கள் செலுத்தும் பணத்தை சரியாக எண்ணி, உங்கள் வங்கிக் கணக்கில் உடனடியாக சேர்த்து விடும். அடையாள அட்டை மற்றும், காசோலைகளையும் தெளிவாகப் படித்து, உரியவரின் வங்கி கணக்கில் பதிவு செய்யும்.ஏ.டி.எம்., இயந்திரத்தில் உங்கள் அடையாள அட்டையை செருகிய உடன், வாடிக்கையாளர் என்பதை அறிந்து கொண்டு, எந்த விதமான சேவையை எதிர்பார்க்கிறீர்கள், என்பதை கேட்கும். அதற்குரிய பட்டனை அழுத்தியதும், உங்களுக்கான சேவை கிடைக்கும்.

ஏற்கனவே, 40 இயந்திரங்களை நிறுவியுள்ளோம். இந்த நிதியாண்டுக்குள் மேலும், 150 இயந்திரங்களை நிறுவ உள்ளோம். இவ்வாறு மைக்கேல் கேன்ட் கூறினார்.ஆஸ்திரேலியாவின், ஏ.என்.இசட்' வங்கியும், இந்த நிதியாண்டுக்குள் இது போன்ற, 800 ஏ.டி. எம்., இயந்திரங்களை நிறுவ முடிவு செய்துள்ளது. முறைகேடுகள் நடக்காத வகையில், நவீன தொழில் நுட்பங்கள் இந்த இயந்திரத்தில் உள்ளதாக, வங்கி அதிகாரிகள் உறுதிஅளித்துள்ளனர்.

## விமானத்தை விலைக்கு வாங்கி பாடசாலையாக மாற்றிய ஆசிரியர்!



ஜோர்ஜியா நாட்டு ஆசிரியர் ஒருவர், பழைய விமானத்தை விலைக்கு வாங்கி, அதை, பள்ளிக்கூடமாக மாற்றி உள்ளார். ஜார்ஜியாவின், ரஸ்தாவி நகரைச் சேர்ந்தவர் காரி சாப்பிட்சி. இவர், பாலர் பள்ளியை நடத்துவதற்காக, ஜோர்ஜியா நாட்டு ஏர்லைன்சிடமிருந்து, பழைய விமானம் ஒன்றை, விலை கொடுத்து வாங்கினார். விமானி அறையை மட்டும் மாற்றாமல் அப்படியே விட்டு விட்டார். பயணிகள் அமரும் பகுதியை பள்ளியாக மாற்றினார். மழலையர்கள் பைலட்டாகும் கனவுடன், இந்தப் பள்ளிக் கூடத்துக்கு உற்சாகமாக வருகின்றனர். பைலட் அறையில் உள்ள கருவிகளை இயக்கி பார்த்து மகிழ்கின்றனர்.

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/3 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்டமாக் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 நவம்பர் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org